# தெல்லிப்பழை அருள்மிகு
# துர்க்காதேவி ஆலயம்
# சித்திரத்தேர் சிறப்பு மலர்



University of Jaffna
235.3
TEL
185981(AR; Main)

4-9-1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தெல்லிப்பழை அருள்மிகு

# துர்க்காதேவி ஆலயம்

2,35·3
TEL
AR

# சித்திரத்தேர் சிறப்பு மலர்

4 – 9 – 1978

ARCHIVES

University of Jaffna
185981
Library

185981

வெளியீடு:
துர்க்காதேவி ஆலய சித்திரத்தேர் சிறப்புமலர்க் குழு

185981
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சப்பதிவு; திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

உடையாளை ஒல்கு செம்பட் டுடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங் கென்னையினிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

— அபிராமி அந்தாதி

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு துர்க்காதேவி
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# காணிக்கை

உலகெலா முணர்ந்து உய்தியடைய வேண்டு மென்ற பெருங் கருணையி ஞல் எல்லையற்ற பரம்பொருளாகிய இறைவன் எடுத்த வடிவங்கள் எண்ணில. இவற்றில் அம்பாள் வடிவங்கள் தாய்மைக் கருணையை உணர்த்துவனவாகும். இறைவனைத் தாயாகக் கண்டு வழிபட்ட பெருமைக் குரியவர்கள் சைவத் தமிழ் மக்கள். இவ்வழிபாட்டின் சின்னமாக அம்பாள் துர்க்கை வடிவு கொண்டு காட்சிதரும் திருக்கோயில் யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழையில் அமைந்து விளங்குவதை யாவருமறிவர். தொன்மை யும் பெருமையும் வாய்க்கப்பெற்ற இப்பதி அடியார்களுக்கு என்றும் வாழ்வளிக்கும் புகலிடமாய்த் திகழ்கின்றது. அன்பர்கள் தங்களுக்கு நல் வாழ்வளிக்கும் பெருமாட்டியை நன்றியுணர்வோடு போற்ற நல்லதொரு வாய்ப்பைத் தந்தது தேர்த்திருப்பணியே. தேவி அடியார்களின் நல் லெண்ணத்தாலும், அறச்செல்வர்களின் நல்லாதரவாலும், சிற்பச் செல் வர்களின் கைவன்மையாலும் துர்க்கைக்கு அழகுறு சித்திரத் தேர் நிர் மாணிக்கப்பட்டுள்ளது. இப்புனித திருப்பணி நிறைவுபெற்றதையொட்டி ஆவணித் திங்கள் பத்தொன்பதாம் நாள் (4-9-78) திங்கட்கிழமையன்று வெள்ளோட்ட விழா சிறப்பாக எடுக்கப்படுகிறது.

இப்பெரு விழாவின் நினைவாக சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென்ற விருப்பம் இவ்வாலய நிர்வாக சபையினருக்கு ஏற்பட்டது. அவ் விருப்பத்தின் விளைவே இம்மலராக மலர்ந்துள்ளது. துர்க்காதேவியின் திருவருளை வீசி நிற்கும் இம்மலர் ஞான மணங் கமழும் அழகு மலராக மலர்ந்துள்ளது,

ஆனந்தமாய், என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய், வானந்தமான வடிவுடனே, மறை நான்கினுக்கும் தானந்தமான சரணாரவிந்தந் தாங்கிநிற்கும் தயாபரி துர்க்கையின் திருவடிகளில் அன்புக் காணிக்கை யாக இம்மலரை இட்டு வணங்குகின்றோம்.

துர்க்காதேவி ஆலயம்
தெல்லிப்பழை
4–9–78

மலர்க்குழுவின் சார்பில்
**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்
நிர்வாகசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் வெளியீட்டுக் குழு

துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

திரு. நம. சிவப்பிரகாசம்

திரு. சு. சிவவாகீசர்

திரு. க. தணிகாசலம்

திருமதி ச. கந்தையா

திரு. க. கணேசரத்தினம்

திரு. ச. ஆறுமுகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவசிவ

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி**

**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

வழங்கிய

# ஆசியுரை

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்குச் செந்தில் ஆண்டவன் திருவருள் முன்னிற்க.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி எழுந்தருளிக் கருணை பாலிக்கச் சித்திரத் திருத்தேர் உருவாக்கி ஓடச்செய்யும் தெய்விக நிகழ்ச்சிபற்றி அறிந்து மகிழ்ந்தோம்.

உலகில் அமைதியும், அன்பும் நிலவ இத்தகு பக்திப் பணிகள் பல்கவேண்டும். தெய்வம் உண்டு என்பதோர் சித்தம் உண்டாகவும், உண்டாக்கவும் இந்நிகழ்ச்சிகளின் தேவையை உணர்ந்தியற்றும் பாங்குடையவர்களைப் பாராட்டுகிறோம்.

விழாச் சிறக்கவும், இந்நன்முயற்சியுள் ஈடுற்ற அனை வோர்க்கும் நலங்களும் வளங்களும் நனிதழைக்கவும், மலர், சைவ உலகு உள்ளளவும் பரிணமிக்கும் சால்புடையதாகப் பொலியவும் செந்திநகர்க் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

**ஸ்ரீ காசிமடம்,** **சிவசிவ**
**திருப்பனந்தாள்,**
**(தஞ்சை ஜில்லா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வழங்கிய

# வாழ்த்துரை

தமிழரின் சமயம் வாழ்க்கையில் தோன்றியது; வாழ்க்கையில் மலர்ந்தது. அதனுல் அன்றாட வாழ்க்கையில் அன்பின் பெருக்கம்; அருளின் ஆக்கம்; அறிவின் விரிவு; அமைதி ஆகிய சிறந்த இயல்புகளைப் பெறத்தக்கவாறு வழிபாட்டுமுறை அமைந்திருக்கிறது.

வாழ்க்கையென்ருல் களிப்பும் தேவை; மகிழ்ச்சியும் தேவை; உறவும் தேவை; ஒப்புரவும் தேவை. இவற்றைச் சமுதாயம் தழுவிய வாழ்க்கையினுல்தான் பெறமுடியும். ஆனுல் தனி ஓர் உயிரின் மேம்பாட்டுக்காகத் தோன்றிய சமயம், வழிபாடு சமுதாய உறவை நோக்கி நகர்ந்தபோது திருவிழாக்கொள்கை தோன்றியது. விழுப்பத்தில் நிகழ்வது விழவு, விழுப்பத்தை வளர்ப்பது விழவு. ஆதலால், தமிழர் சமயநெறியில் திருவிழா இன்றியமையாதது. பூசத்திருநாளைக் காண்பதே ஒரு பேறு என்று திருஞானசம்பந்தர் பூம்பாவைப் பதிகத்தில் அருளிச்செய்துள்ளார். "தைப்பூசம் காணுதே போதியோ பூம்பாவாய்!" என்று அருளிச்செய்தமையை அறிக.

தமிழர்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலினர். தமிழர்கள் வாழ்ந்த நிலப் பகுதிகள் அனைத்திலும் வேளாண்மை அறுவடை தைத்திங்களில் வரும். ஆதலால், தைத்திங்களில் தொடங்கும் திருவிழா இளவேனிற்காலம் – வைகாசித் திங்கள் முடிய ஒவ்வொரு வளர்பிறைக் காலத்திலும் தொடங்கி நிறைநிலா அன்று நிறைவுறும். திருவிழா நிகழ்ச்சியில் திருத்தேர் இன்றியமையாத ஒன்று. இறைவன் உலகையே தேராகக் கொண்டு இவர்ந்து வருகிருன் என்பது தத்துவம். திருத்தேர் விழா சாதிவேறுபாடுகள் வெறித் தனமாக இருந்த காலத்திற்கூடப் பொதுமை தழுவியதாக இருந்தது. ஒரு வட்டாரத்தின் சைவசமுதாய மக்கள் ஒற்றுமையுடன் வாழ்கிருர்கள்; ஒருமைப்பாட்டுணர்வில் வாழ்கிருர்கள்; கற்றல் மிக்குடையவர்களாக இருக்கிருர்கள்; பக்தியின் வசப்பட்டு எத் திருத் தொண்டையும் செய்வார்கள் என்பனவற்றின் விளக்கமாக – எடுத்துக்காட்டாகத் தேர்த் திருவிழா அமைந்திருக்கிறது. தேர்த்திருவிழாவைப்போல மகிழ்வைத் தரத்தக்க விழா வேறென்றில்லை. சமயநெறி தழுவிய சமுதாய அமைப்பிற்குத் தேர்த்திருவிழாவே அரண்செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை கவர்ச்சிமிக்க ஒரு சிற்றூர். இனிய சோலை சூழ்ந் வளைவில் அன்னை பராசக்தி, கொற்றவைத் திருக்கோலத்தில் -துர்க்கையம்மனாக எழுந்தருளி இன்னருள் பாலித்து வருவதைப் பாரறியும். இத்திருக்கோயில் சித்திரத்தேர் ஒன்றைப் பெறுகிறது. ஆம்! சிற்பக்கலையும் ஓவியக்கலையும் கவின்கலையும் தமிழகச் சமய வாழ்வோடு இரண்டறக் கலந்தவை. இத் திருக்கோயிலின் ஆட்சிக்குழு, பாராட்டுதலுக்குரிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இயங்குகிறது. சகோதரி அவர்கள் தலைசிறந்த கலைதெரி சிற்பிகளைக் கொண்டு சித்திரத்தேர் உருவாக்கியிருக்கிறார். ஆவணித் திங்களில் தெல்லிப்பழைத் திருவீதி தேரோடும் வீதியாகக் காட்சியளிக்கும்! மூலமந்திரத்தை ஒலித்திடும் மணியோசை குலுங்க அன்னை கொற்றவையை ஏற்றுத் தெல்லிப்பழைத் தேரோடும் வீதியில் சித்திரத்தேர் சீராக உலாவருவதைக் காணும் கண்கள் பயனுடைய கண்கள்! வாழ்த்தும் வாயே வாய்! வணங்கும் தலையே தலை! தேரையிழுத்து நிறுத்துவோர் கரங்களே கரங்கள்! இச் சித்திரத்தேர்க் காட்சியை நினைந்து வணங்குகின்றோம்! வாழ்த்துகின்றோம்.*

*இன்ப அன்பு.*

**அடிகளார்**

**குன்றக்குடி,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

### ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கிளைத் தலைவர்
### சுவாமி பிரேமாத்மானந்தா அவர்கள்
### வழங்கிய

# ஆசியுரை

ஆதிமுதற் பரம்பொருளின் அருட்சத்தியாய் நின்று, அகில அண்டங்களையும் இயக்குகின்ருள் அன்னை பராசக்தி. ஆன்மாக்களைப் பிறவிச் சுழியில் புகுத்தியும், பின் வினைநீக்கி, மலபரிபாகம் செய்து வீடுபேறளித்தும் அருட்திருவிளையாட்டயர்கின்ருள் அவள்.

தானே எழுந்தஇத் தத்துவ நாயகி
வானேர் எழுந்து மதியை விளக்கினள்
தேனேர் எழுகின்ற தீபத் தொனியுடன்
மானே நடமுடை மன்றறி யீரே.

என்கின்ருர் திருமூலர்.

மாயாகாரியத் தொகுதிகளாகிய தத்துவங்களை நடத்தி, திருவருள் வெளியில் எழுந்து அறிவை விளக்கி, பேரின்பத்தேனைத் தருதற்பொருட்டு பேரொளியைத் தாங்கி உயிருணர்வை மன்றமாகக் கொண்டு நிகழ்வது ஆடுங் கூத்து என்ருர்.

ஆருயிர்களுக்கு அனுக்கிரகம் செய்தற் பொருட்டு அன்னைகொள்ளும் வடிவங்கள் பல. துர்க்கையாகத் தோன்றி அன்னைசெய்த அதிவீரியம் மிகுந்த தீரச் செயல்கள் பலவற்றைத் தேவீ மகாத்மியம் விளக்கிக் கூறுகின்றது. 700 சுலோகங்கள் கொண்ட இந்தத் துர்க்கா சப்தசதீயைப் பொருளுணர்ந்து ஓதுபவர் இருவகைப்பிணி நீங்கி வீடுபேறடைவதற்கான பாதையில் முன்னேறிச் செல்வர்.

இந்தத் துர்க்காதேவிக்குக் கோயில் எடுத்து நித்திய, நைமித்தியக் கிரியைகளை ஒழுங்குற நடத்திவரும் துர்க்காதேவி ஆலய நிருவாக கர்த்தாக்கள் ஆற்றிவரும் கைங்கரியம் போற்றுதற்குரியது. அன்னை தேரிலிவர்ந்து, பவனிவந்து ஆன்மகோடிகளுக்கு அனுக்கிரகம் செய்யுமுகமாகச் சித்திரத் தேரொன்று உருவாகி வருவதறிந்து பெருமகிழ்வு அடைகின்ரேம். இத்திருப்பணி இனிதே நிறைவேறி தெல்லிநகர் மக்களுக்கு மட்டுமன்றி, ஈழநாடு முழுவதுக்குமே, ஏன், மனுக்குலம் முழுவதுக்குமே அன்னையின் அருள் சுரந்து பெருகி இன்பம் சூழவேண்டும் என்று அன்னையின் இருபதம் இறைஞ்சி, எனது நல்வாழ்த்துக்களையும் ஈந்து மகிழ்கின்றேன்.

சுவாமி பிரேமாத்மானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**மலேசியா தெய்வீகவாழ்க்கைச் சங்கத் தலைவர்**

**சுவாமி பிரணவானந்தஜி அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

பல ஆண்டுகளுக்குமுன் சிறிய அளவில் அமைந்திருந்தது தெல்லிப்பழையில் கோயில் கொண்டருளியிருக்கும் துர்க்காதேவியின் ஆலயம், எளியேன் மாணவனுக இருந்த காலத்தில் எனது அருமைத்தாயார் குறிப்பிட்ட தினங்களில் என்னை இவ்வாலயத்திற்கு அழைத்துச் சென்று வழிபாடு இயற்றியது ஞாபகத்திலிருக்கிறது. பின்னுல், தேவியின் அனுக்கிரகத்தினுலும் பக்தமக்களின் பேராதரவினுலும் இவ்வாலயம் படிப்படியாக விரிவடைந்து இன்று யாழ்ப்பாணத்திலுள்ள கோவில்களுக்குள் மிகச்சிறந்த தொன்ருகத் திகழ்வதைக் காண்போர் பேரானந்தம் அடைவர். சில வருடங்களுக்கு முன் திருமுறை மண்டபத்தைக் கட்டி உபகரித்தவர் துர்க்காதுரந்தரி, செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் என்பதை அறிவோம். இன்று அவர்கள் தலைமையில், நிர்வாகசபையின் கண்காணிப்பில் அபிஷேக ஆராதனைகளும், புராண படனங்களும், பிரார்த்தனைகளும், திருவிழாக்களும், சமயக் கூட்டங்களும் கிரமமாக நடைபெற்றுவருவது கண்கூடு.

இத்தனை சிறப்புக்களுடன் விளங்கும் ஆலயத்தில் ஆண்டுதோறும் கொடியேற்றித் தொடரும் விழாக்களின் இறுதியில் அம்பிகையை அழகிய தேரில் ஆரோகணிக்கச் செய்து வீதியில் பவனிவருங் காட்சியைக் கண்டுகளிக்க விரும்பினர் பக்தகோடிகள். தேவியும் திருவுள்ளம்கொண்டாள். அதனை நிறைவேற்றத் துணிந்தனர் துர்க்கா துரந்தரியும் அவரது நிர்வாக சகாக்களும். துர்க்காதேவியின் அனுக்கிரகத்தினுலும் நிர்வாகசபையாரின் அயராத பக்தி சிரத்தையுடன் கூடிய உழைப்பினுலும் புதிய சித்திரத்தேர் உருவாகி விட்டது. அதன் வெள்ளோட்டம் 4–9–78ல் நிகழ இருப்பதாக அறிந்து உடல் உளம் பூரிக்கின்ருேம்; பேரானந்தம் அடைகிருேம்.

எங்கும், யாண்டும் நின்று நிலவுக துர்க்காதேவியின் அருளாட்சி!

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

பத்துமலை,
கோலாலம்பூர்,
24–7–78

**சுவாமி பிரணவானந்தஜி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
வழங்கிய

# பிரார்த்தனை உரை

"ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய"

என்கின்றது கந்தபுராணம்.

முருகனை,

"வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ" என்று முன்னிலைப்படுத்தித் துதிக்கின்றது திருமுருகு.

கொற்றவை – துர்க்கை; துர்க்கர்களை அழித்துக் கொற்றங் கொள்பவள் அவள்.

குழந்தை முருகன் தீராத திருவிளையாட்டுப் பிள்ளையாதலின், அவனுக்கு அவனது அவதாரநோக்கத்தை நினைவுகூரச் செய்வது போலும் மேற்குறிப்பிட்ட தொடர். "நீ மலைமகள் மகனுயினும், அசுர சக்தியை அழித்தற்குக் கொற்றவையாகிய துர்க்கையின் புதல்வனுகுதி" என வேண்டுகின்றதென்றவாறு.

திருமுருகன் புன்முறுவல் பூத்துத் தேவசேனுதிபதியாய், பிரமாண்டமான மனவேகப் பொற்றேரில் இவர்ந்தருளுகின்ருன். நால்வகைப் படையில் முக்கியமானதும் முதன்மையானதுமா யமைந்தது தேர்.

சூரனுதியர் மகா தவத்தர்கள். முருகனைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள். அவர்களின் தவம் இருந்தவாறு!

*　　　*　　　*

இப்பொழுது தவம் குடிபோய் விட்டது. வஞ்சனையும். அறியாமையுமாகிய அசுர இருள் உலகை விழுங்குகின்றது. வைதிகப்படாத விஞ்ஞான விவேகம் உலகத்தை அழிக்கும் ஆலகாலமேயாம்.

இச்சந்தர்ப்பத்தில் பராசக்தியின் மகா உக்கிர மூர்த்தமாகிய துர்க்கா தேவியே போர்க்கோலம் பூணவேண்டியவள் ஆகின்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற சந்தர்ப்பத்தில் துர்க்கா தேவிக்குத் தேர் சமைக்கப்படுகின்றது. அது, கூடிய சீக்கிரத்தில் பூர்த்தியெய்தி, ''ஆழி தாங்கியதோர் அண்டத்தை'' ஒத்து வீதியிற் பவனி வருவதாக.

தேர்த் தத்துவம்,

கீழ் ஏழு, மேல் ஏழாய் உலகங்கள் அமைந்த அண்டத்தோ டொப்பிட்டு விசாரம் செய்யற்பாலதாம்.

துர்க்காதேவி தேரில் எழுந்தருளிப் பவனி வரும்போது அட்டதிக்கிலும் ஒளி வீசும். அந்த ஒளியைக் காணக்கூடியவர்கள் கண்டு பரவசம் உறும்போது, அவள் உக்கிரவேகந் தணிந்து, 'பேதித்து நம்மை வளர்த்தெடுக்கும் பெய்வளை' யாகிய பராசக்தியாய்க் காட்சியளிப்பாள்.

அவளது திருத்தகு மடித்தலத்தில், மாதரசியாகிய மாருதப்பிரவல்லி உபகரித்த மாவை மழலை முருகன், மகிழ்ச்சிபொங்க வீற்றிருந்தருளுவன். தேவியின் திருமுலைகள் ஞானப்பால் சுரக்கும். எங்கும் அருண்மழை பொழியும்.

பத்தர்கள் கண்மழை பொழிந்து பிரார்த்திப்பார்கள்.

இந்நிகழ்ச்சியில் பங்குபற்றி யாவரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி!

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Message from the*

## MINISTER OF CULTURAL AFFAIRS

I have the deep honour to send my solemn message of goodwill on this occasion when the Vellotam of the vahana of the Godess Durga will be performed in the first week of September 1978.

In an era when spiritual values are augmenting racial unity, it is vital that all communities get together to felicitate this occasion.

May the Devine Grace of Godess Durga be showered upon the people of our country.

*E. L. B. Hurulle*
*Minister of Cultural Affairs*

Ministry of Cultural Affairs,
212, Bauddhaloka Mawatha,
Colombo - 7,
28th March 1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

காங்கேசன்துறைத் தொகுதி தே. அ. பே. உறுப்பினர்
எதிர்க்கட்சித் தலைவர்
திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்
வழங்கிய

# வாழ்த்துரை

தெல்லிப்பழையில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் துர்க்கா தேவியின் ஆலயத் திருப்பணி சென்ற சில ஆண்டுகளாகப் பார்ப்போர் வியக்கும் வகையில் வேகமாக நடைபெற்று வருவது பாராட்டுக்குரியது. ஆலயத்தின் புனருத்தாரண வேலை மிகச் சிறப்பாக நடந்து ஒளிமயமாகக் காட்சி தரும் இந்த ஆலயம் இப்பகுதியில் உள்ள ஆலயங்கள் எல்லா வற்றிற்கும் முன்மாதிரியாகத் திகழ்கின்றது. இவ்வாலயத்திற்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேரை வெள்ளோட்டம் விடும் இச்சந்தர்ப்பத்தில் இச சிறந்த திருப்பணிக்குப் பொறுப்பான சபையினருக்கு எனது மனப்பூர்வமான பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சிவசக்தியின் வீரத்திருவுருவான துர்க்கை அம்மனுக்கு எங்கள் பகுதியில் அமைந்த ஆலயங்கள் மிகச் சில. அவற்றுள்ளும் மூலஸ்தானத்தில் துர்க்காதேவி வீற்றிருக்கும் ஆலயம் இது ஒன்றே என்று அறிய மகிழ்ச்சி அடைகின்றேன். இன்னல் மிகுந்த இந்த நேரத்தில் வீரத்தை வேண்டி நிற்கும் தமிழ்மக்கள் துர்க்கை அம்மனின் அருளைப் பெற்று உய்வாராக.

**அ. அமிர்தலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**மானிப்பாய்த் தொகுதி தே. அ. பே. உறுப்பினர்**

**திரு. வி. தர்மலிங்கம் அவர்கள்**

வழங்கிய

# ஆசியுரை

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் அரை நூற்றுண்டு காலமாகப் பழுதடைந்த நிலையில் இருந்து கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு புனருத்தாரணஞ் செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டபின்பு எழில் மிகுந்த சிறந்த ஆலயமாகத் திகழ்கிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு சென்று வழிபட்டு அம்பாள் கருணைக்கு ஆளாகின்ருர்கள். ஆலயத் திருப்பணிகளும் புதிது புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ளன. சமீபத்திலே தேவிக்கு உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் சிறந்த சிற்பசாஸ்திர முறைப்படி அமைந்துள்ளது. தேர் வெள்ளோட்டம் நடைபெறும் இந்நாளில் நாமும் வணக்கத்தை அம்பாளுக்குச் செலுத்தி வாழ்த்தை அடியார்களுக்குச் செலுத்திநிற்கிரும்.

**வி. தர்மலிங்கம்**

'காமதேனு',
கந்தரோடை,
சுன்னுகம்.
12-8-78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தலைவர்**

**பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள்**

அளித்த

# ஆசிச் செய்தி

அன்னை பராசக்தி துர்க்கா மூர்த்தம் கொண்டு பேரருள் பாலிக்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திலே, நித்திய நைமித்திய மரபுகளும் வழிபாடு மரபு மலர்ச்சியும் அம்பிகை அடியார்களை ஈர்த்து வருவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். அடியார்கள் செவ்வாய் தோறும் பெருந்தொகையினராகக் குழுமி, அம்பாளின் அருள் பெற்ற திளைப்பினாலே சித்திரத் தேர் ஒன்றினை ஆக்கித் திருவுலாக் காட்சி காண விளையும் ஆர்வம் அன்னாரது பக்திப் பொலிவையே காட்டுகின்றது.

ஈழ நாட்டிலே மரத்தச்சர்களின் சிறப்புத் திறனை விளக்கும் பழைய தேர்கள் பல காணப்படுகின்றன. இற்றைக்கு நூறு ஆண்டுகளின் முன்னர். செய்யப்பட்ட சித்திரங்கள் நிறைந்த மரத் தேர்கள் பருளை, மாவிட்டபுரம். சுதுமலை, மாதகல், நயினாதீவு முதலிய இடங்களில் அமைந்துள்ள திருக்கோவில்களிலே காணப்படுகின்றன. மரத்தச்சர்களின் கலை நுட்பங்களைப் பேணி வரும் தேர்ச் சிறப்ப மரபு நமது ஆலயங்களிலே தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது. இரதங்களிலே கலை நுட்பங்கள் பேணப்படும் அரிய தொழிற் திறனும், கைவன்மையும் எமது பாரம்பரிய கலாசாரத்தின் சின்னங்களாகும்.

தெல்லிப்பழை, துர்க்காதேவி ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர் எமது பாரம்பரிய கலைஞர்களின் கைவினை ஆற்றலின் தொடர்ச்சியை உணர்த்துவதாகும். சித்திரத்தேரினைச் சிறப்புற அமைத்த சிற்பி கலாகேசரி, திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் பாராட்டுக்குரியவர்.

தேவியின் அருளால் நலம் பெறும் அடியார்களும், அருள்வழி நின்று பணியாற்றும் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் நலம் பெற எல்லாம் வல்ல அம்பிகையின் அருளினை வேண்டி நிற்கின்றோம்.

**சு. வித்தியானந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர்
# திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

புராண – இதிகாச காலங்களுக்கு முன்பிருந்தே, எங்கள் ஈழநாட்டில் சைவசமயம் நன்கு நிலைபெற்று வளர்ந்து வந்திருக்கின்றது. இன்றும் புகழும் அருளும் பரப்புகின்ற இங்கு உள்ள புராதன சிவஸ்தலங்கள் இவ்வுண்மையை நிரூபிக்கும் வரலாற்றுச் சாட்சிகளாக விளங்குகின்றன.

**"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என்பது தமிழ் மக்களிடம் வழங்கி வரும் ஆன்றோர் வாக்கு. இதற்கமைய இலங்கையில் சைவத்தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் வானுயர்ந்த கோபுரங்களுடன் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருப்பது கண்கூடு.

சக்தியின் ஐக்கியம் இல்லாவிட்டால் சிவம் தொழிற்படாது என்பது சைவசித்தாந்தத் தெளிவு. சிவபெருமானின் அருட்சக்தியாக விளங்குபவர் அன்னை பராசக்தி. உலகம் உய்யவும், உயிர்கள் சுபீட்சம் எய்தவும் பலவிதமான தொழில்களை அன்னை பராசக்தி நிகழ்த்தும்போது ஒவ்வொரு மூர்த்தமாக அவர் விளங்குவார். வீரத்தை வழங்கும்போது துர்க்கையாகவும், செல்வத்தை நல்கும்போது இலட்சுமியாகவும், ஞானத்தை அருளும்போது சரஸ்வதியாகவும் மூர்த்தங்களில் மக்கள் சக்தியை வழிபடுவர்.

மூலமூர்த்தியாக, தனியாலயத்தில் எழுந்தருளித் துர்க்காதேவி காட்சிகொடுக்கும் தலம், இலங்கையில் தெல்லிப்பழை உழுகுடைத் துர்க்காதேவி அம்மன் ஆலயமாகும். சுமார் 250 ஆண்டுப் பழமை வாய்ந்த இவ்வாலயம், அம்பாளின் அருளினாலும், அடியார்களின் இடையறு முயற்சியாலும், பல திருப்பணிவேலைகள் நிறைவுற்று இப்போது இலங்கை முழுவதும் அம்பிகையின் அருளொளி பரப்பித் திகழ்கின்றது.

சைவமும் தமிழும் வளரப் பெரும்பணி ஆற்றிவரும் சிவத்தமிழ்ச் செல்வி, சொல்லின் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், இவ்வாலய நிர்வாகசபையின் அச்சாணியாக அமைந்து, அம்பிகையின் திருப்பணிகள் நிறைவேறத் தமது பொருளையும், உழைப்பையும் அர்ப்பணித்துத் தொண்டாற்றி வருவதைச் சைவ உலகம் நன்கு அறியும். அவர்களுக்குச் சைவமக்கள் என்றென்றும் ஆழ்ந்த கடமைப்பட்டுள்ளனர்.

பல்லாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் அம்பிகை பவனிவரும் இப்புனிதமும், மகிழ்ச்சியுமான சந்தர்ப்பத்தில், அகிலாண்ட நாயகியை வணங்கி அவளின் அடியார்களும், அகிலமும் அருள் பெறப் பிரார்த்திப்போமாக!

**வீ. சிவசுப்பிரமணியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# துர்க்காதேவி

"கோயிலில்லா வூரில் குடியிருக்கவேண்டாம்", "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்ற இரு முதுரைகளும் யாவரும் அறிந்தவையே. இவ்விரண்டையும் கருத்திற்கொண்டு, நூற்றைம்பது வருடங்களுக்குமுன் தெல்லிப்பழை உடையாராக விருந்த பூதப்பிள்ளை கதிரேசு என்னும் சக்திபத்தர் உழுகுடைப்பதியில் அன்னை பராசக்தியின் துர்க்கை மூர்த்தத்தைப் பிரதிட்டை செய்து ஆலயம் சமைத்தார்.

முன்பொருநாள் தேவர்கள் எல்லாம் மகிடாசுரனால் வருத்தப்பட்டுச் சிவனையும் விஷ்ணுவையும் நாடி முறையிட்டனர். அப்பொழுது விஷ்ணு முகத்திலிருந்தும், தேவர்கள் முகத்திலிருந்தும் ஒளிப்பிழம்புகள் கிளம்பி ஒன்றுசேர்ந்து பெண்ணுருவெடுத்தன. இவ்வுருவைத் துர்க்கை என்றழைத்தனர். துர்க்காதேவி மகிடாசுரனை எதிர்த்துக் கடும்போராடினள். இவ்விழாவினை ஆதியில் வசந்தகாலத்தில் கொண்டாடி வந்தனர். இன்றும் வடநாட்டில் வசந்த நவராத்திரி கொண்டாடுவது வழக்கமாக இருக்கின்றது.

இராமபிரான் இராவணனுக்கெதிராக யுத்தம் ஆரம்பிக்குமுன் துர்க்காதேவியை வணங்கியதாகக் கூறுவர். அப்பொழுது துர்க்காதேவி ஆயுதபாணியாகப் பத்துக் கைகளுடன் காட்சி கொடுத்தாள். அவளுடன் கலைமகளும், திருமகளும், வெற்றித் தெய்வமாகிய விநாயகரும், வீரம், வலிமை யாகியவற்றின் தெய்வமாகிய முருகனும் பிரசன்னமாயிருந்தனர். இப்படி இராமபிரான் வணங்கியது வசந்தகாலத்தில் அல்ல— மழைகாலம் (சாரத) ஆகிய புரட்டாதி மாதத்தில் என்றும் சொல்லப்படுகிறது. அன்று தொட்டு தென்னாட்டில் சாரத நவராத்திரி முக்கியத்துவம் பெற்று புரட்டாதி மாதத்தில் கொண்டாப்படுகின்றது.

நவராத்திரி பூசையைத் துர்க்கா பூசை என்று கூறுவது வழக்கம். ஆகவே துர்க்காதேவி ஆலயத்தில் நவராத்திரி பூசைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அது மட்டுமல்ல, அன்னை துர்க்காதேவியுடன் முருகவேளும் இராமருக்கு அருள வந்ததை முன்னிட்டு, மாவைக்கந்தசுவாமியும் விஜயதசமியன்று மானம்பூவிழாவில் துர்க்காதேவி ஆலயத்துக்கு எழுந்தருளுவது வழக்கமாக இருந்தது.

இப்படி ஏறக்குறைய நூற்றிருபது ஆண்டுகளுக்கு நவராத்திரியை மையமாக வைத்து இயங்கும் உருவில் சிறியதும், அருளிற் பெரியதுமாகிய ஆலயத்தில் துர்க்காதேவி வீற்றிருந்தாள். தேவியின் அருள்பெற்ற பக்தர்களும் நாளடைவில் கூட, ஆலய புனருத்தாரண சபை ஒன்று உருவாகியது. இவர்களது இடைவிடா முயற்சியால் இன்று இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் அருட்பிரபை விரிந்த பரிவார சந்நிதானங்களுடன் உள்வீதி, புறவீதி யமைப்பைப் பெற்ற பெரிய புதிய ஆலயமாக ஆகம விதிகளுக்கமையப்பெற்றதாக விளங்குகின்றது. இம்முயற்சியில் ஈடுபட்ட எல்லோருக்கும் பக்தர்கள் கடமைப்பட்டவர்களே. ஆனால் இவர்களுள் காலம் சென்ற தெ. து. ஜயரத்தினம், இன்று முதலிடம் வகிக்கும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகிய இருவரையும் விதந்து கூறுதுவிட முடியாது. இவர்கள் ஆலயத்தைப் புதுப்பித்தலிலும் நிர்வகித்தலிலும் எடுத்த முயற்சிகள் அளப்பில.

இப்பொழுது ஆலய நிர்வாகசபையினரது உழைப்பால் புதிய சித்திரத் தேர் உருவாகி அம்பாளது வெள்ளோட்டத்துக்கு ஆயத்தமாக இருக்கின்றது என்பது தேவி பக்தர்கள் யாவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும். அம்பாள் பக்தர்கள் எல்லோருக்கும் தொடர்ந்து அருள்பாலிப்பாளாக.

**தேவிபக்தன் கு. பாலசிங்கம்**
(முன்னைநாள் பாராளுமன்ற
நிரந்தரக் காரியதரிசி)
(தர்மகர்த்தா,
துர்க்காதேவி ஆலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**சிவாகம சிரோமணி சிவஸ்ரீ ந. சிவசங்கரக் குருக்கள்**
வழங்கிய

# வாழ்த்துரை

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாகிய சக்தி ஆன்மாக்கள் தன்னை வழிபட்டு உய்யும்பொருட்டு அருவத்திருமேனியில் இருந்து உருவத்திருமேனிகொண்டு பல்வேறு நாமங்களில் விளங்கும் ஆலயங்களில் எல்லாம் சிறந்ததும் யாழ்ப்பாணத்தின் வடபால் தெல்லிப்பழை உழுகுடைப்பதியின் கண்ணே வீற்றிருந்து உலகெலாம் அரசாட்சி புரியும் அருள்மிகு துர்க்காதேவி திருவீதி உலாவருவதற்காக முறைப்படி சிற்ப வேலைப்பாடுகள் ஒருங்கே அமையப்பெற்றதும், சகல அழகோடு விளங்குவதும், பார்ப்போர் கண்களைத் தன்னிடமிருந்து அகலாமல் பார்த்துக்கொண்டிருக்கச் செய்வதும் தேவலோகத்திலிருந்து வந்ததோ என்று கூறும்படி கம்பீரமாக அமைந்து நிற்கும் இந்த அழகிய ரதத்தை துர்க்காதேவியின் அருள்கொண்டு செய்துமுடித்த திருப்பணிச்சபையினரும் இதை உருவாக்கிய சிற்பாசாரிமார்களும் இத் தெய்வீகத் திருப்பணிக்குப் பொருளுதவி புரிந்தவர்களும் மற்றும் சகல உதவிகளைச் செய்தவர்களும் எல்லாம்வல்ல சக்தி அன்னை துர்க்காதேவியின் பூரணமான கிருபையால் சகல செல்வங்களையும் பெற்றுய்வார்களாக.

துர்க்காதேவி ஆலயம்,
தெல்லிப்பழை.

**சிவஸ்ரீ ந. சிவசங்கரக் குருக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**சித்திரத்தேரை உருவாக்கிய பிரதான ஸ்தபதியார்**

**கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள்**

வழங்கிய

# ஆசியுரை

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினே டெட்டு மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே.

எனக் கோயில் அமைப்பு முறைகளைப்பற்றி அப்பர்சுவாமிகள் அழகாகக் கூறியுள்ளார். ''கரக்கோயில்'' என்பது தேர்வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பெற்ற கோயில் ஆகும். தேவதைகளின் இரதங்களின் (தேர்) அமைப்புமுறைக்கேற்ப கோயில் கட்டடக் கலையை மத்திய காலக் கலைஞர்கள் வளர்த்துவந்துள்ளனர்.

பிரம்மாவின் இரதமான வைராஜம், குபேரனது இரதமாகிய புஷ்பகம், சிவனது இரதமான கைலாசம், வருணனுடைய இரதமாகிய மானிகம், இந்திரனுடைய இரத மாகிய திரிவிஷ்டபம் என்னும் ஐந்துவித இரதங்களில் இருந்து பிரிந்து நாற்பத்தைந்து விதமான கோவில்களை அமைத்தனர்.

''சமராங்கன சூத்திரதானம்'', ''சிவகுரு வேதபத்ததி'' ஆகிய நூல்கள் கோயில் களை மூன்று பிரதான பாணிகளாகப் பிரிக்கின்றன. அவை நாகரம், திராவிடம், வேஸரம் அல்லது வாரடம் ஆகும். தேரின் அமைப்புமுறைகளிலும் இவை வழக்கிலிருந்து வருகின்றன. அதாவது சதுரவடிவமான தேரை ''நாகரம்'' என்றும், எண்கோணவடி வான தேரை ''திராவிடம்'' என்றும், வட்டவடிவமான தேரை 'வேஸரம்' என்றும் சிற்ப நூல்கள் கூறுகின்றன.

இத்தகைய அமைப்புக்களை உத்தரமட்டவேலை, இரட்டைப்பஞ்சாங்கவேலை, முகபத்திரவேலை என விபரித்து ஒன்பதுவிதமாக அமைக்கலாம். ஈழநாட்டிலே முதன் முதலாக முகபத்திரவேலைகளுடன் அமைக்கப்பெற்றுள்ள திராவிடமரபுத்தேர் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவியின் தேராகும். இது ஒரு புது மோடியானது. வேற்றுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான சிறப்புக்கள் விதிவிலகாது அமையின் ஆக்கத்திறன் சிறப்பெய்தும். உபபீடம் தொடக்கம் அதிஷ்டானம் (கபோதகம்), ஆனைத்தொட்டிப்பார், கொடிஞ்சி, பிரஸ் தானம், விமானம் ஈருக கலசம்வரை முகபத்திர மடக்கைகள் மீட்கப்பெற்றுள்ளமை யினால் சிறந்த லயச்சிறப்பு ஏற்படுகின்றது.

அக்கினிபோன்ற நிறமுடையவளும் பதினெட்டுக் கைகளை உடையவளுமாகிய ஆதிசக்தியாகிய ஸ்ரீ துர்க்காதேவி வீற்றிருக்க ஏனைய எட்டுத் துர்க்கைகளும் தாமரை வடிவிலான தேர்களில் எட்டுத்திக்குகளிலுமிருந்து அருள்பாலிக்கின்றனர் என்று நவ துர்க்கைகளின் தத்துவங்களை ''ஸ்கந்தயமாலா'' என்னும் நூல் சிறப்பித்துக்கூறுகின்றது. இக்கருத்தை அனுசரித்து ஆகாயத்தைக்குறிக்கும் சிங்காசனத்திலிருந்து எட்டுக்கோணங் களுக்கும் எட்டுச்சிங்கங்களை அமைத்து அச் சிங்காசனத்தில் ஆதிசக்தியாக ஸ்ரீ துர்க்கா தேவி விற்றிருந்து திருவருள்பாலிக்க தேரின் அதிஷ்டானமாகிய கபோதகபாரிலே அட்டதிக்குகளிலும் திக்குப்பாலகர்களை அமைத்துள்ளமையும் சிறப்பம்சமாகும். இவற்றைவிட இருபத்தெட்டுச் சிற்பவகைகள், யாளிவரிமானங்கள், குதிரைவரிமானங்கள், நான்மறைகளைக் குறிப்பிடும் நான்கு குதிரைகள், பிரமன் ஆகிய சிற்ப அம்சங்களு டன் கலைநுணுக்கங்கள் நிறைந்த வேலைப்பாட்டுடனும் இச்சித்திரத்தேர் பூரண பொலி வுடன் நிறைவெய்திட, திருவருள் பொலிவு நிறைந்த ஸ்ரீ துர்க்காதேவி அருள்பாலித் துள்ளார்,

**கலாகேசரி ஆ. தம்பித்துரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துர்க்காதேவி உற்சவமூர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ விநாயகர்



ஸ்ரீ பாலசுப்பிரமணியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கஜலட்சுமி




ஸ்ரீ நாகதம்பிரான்



ஸ்ரீ வயிரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய சித்திரத் தேரை உருவாக்கிய
கௌரவ ஸ்தபதியார்
கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. வ. இராசரத்தினம்
புதிய சித்திரத்தேரை உருவாக்கிய
உதவி ஸ்தபதியார்.




சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்வாகசபைத் தலைவர்
துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரத் தேர்த் திருப்பணிக் குழு.


இடமிருந்து வலம்; திரு. ச. ஆறுமுகநாதன், திரு. த. பொன்னம்பலம், துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. க. தணிகாசலம், திரு. க. கணேசரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துர்க்காதேவி ஆலய அர்ச்சகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தர்மகர்த்தா சபை

இடமிருந்து வலம்–கீழ் : திரு. அ. சிவபாதசுந்தரம், திரு. வி. தர்மலிங்கம், M. P., திரு. சே. சிதம்பர உடையார், திரு. சே. தியாகராசா, திரு. சு. சிவவாகீசர்.

இடமிருந்து வலம்–மேல் : திரு. இ. கனகசபை, திரு. சி. விசுவநாதன், திரு. நா. திருநாவுக்கரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்வாகசபை

இடமிருந்து வலம் – கீழ்: திரு. சே. தியாகராசா, திரு. த. பொன்னம்பலம், திருமதி. ச. கந்தையா, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. க. தணிகாசலம், திரு. சு. சிவவாகீசர், திரு. க. கணேசரத்தினம்.

இடமிருந்து வலம் – மேல்: திரு. ந. செல்வநாயகம், திரு. சி. விசுவநாதன், திரு. தி. சுந்தரமூர்த்தி, திரு. சி. சிவசுப்பிரமணியம், திரு. தி. அருமைநாயகம், திரு. ச. ஆறுமுகநாதன், திரு. பொ. செல்லப்பா, திரு. ஐ. சண்முகநாதன், திரு. வே. செல்வரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சே. தியாகராசா

*1962—1964 வரை*

*திருப்பணிச்சபைத் தலைவர்.*

*1965—1970 வரை*

*நிர்வாகசபைத் தலைவர்.*



அமரர் தெ. து. ஜயரத்தினம்

முன்னைநாள் நிர்வாகசபைத் தலைவர்

**1970 — 1976.**



திரு. நம. சிவப்பிரகாசம்

முன்னைநாள் நிர்வாகசபை இடைக்காலத் தலைவராயும்,
இன்றைய நிர்வாகசபையில் உப தலைவராயும் விளங்குபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. பொ. முருகையா
(கணக்குப் பரிசோதகர்)



திரு. பே. சிவபாதம்
(கணக்கப்பிள்ளை)



திரு. செ. சொக்கநாதர்
(திருப்பணிக் கண்காணிப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னைநாள் ஆலய முகாமையாளர்
அமரர் திரு. க. நாகநாதர்



முன்னைநாள் முதற்
தர்மகர்த்தா சபைத் தலைவர்
அமரர் P. சுப்பிரமணியம்



அமரர் திரு. கு. வன்னியசிங்கம்,
(முன்னைநாள் பா. ம. உ.)
முன்னைநாள் தர்மகர்த்தா சபைத்
தனதிகாரி.



புதிய ஆலயத்துக்கு முதன்முதலாக
அத்திவாரமிட்ட பெருந்தகை
அமரர் திரு. அ. கனகசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் திரு. வ. சுப்பிரமணியம்
முன்னைநாள் தர்மகர்த்தா சபைச்
செயலாளர்.



அமரர் திரு. வி. சிற்றம்பலம்
முன்னைநாள் தர்மகர்த்தா சபை
இடைக்காலத் தலைவர்.



அமரர் திரு. கா. சுப்பிரமணியம்
முன்னைநாள் திருப்பணிச் சபைத்
தனாதிகாரி.



அமரர் திரு. க. சிவராசா
முன்னைநாள் திருப்பணிச் சபைச்
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் திரு. செ. அருமைநாயகம்
முன்னைநாள் நிர்வாகசபை உறுப்பினர்.
(ஆரம்பகாலத் தேர் உபயகாரர்.)



அமரர் திரு. அ. சுப்பிரமணியம்
முன்னைநாள் நிர்வாகசபை உபதலைவர்.



அமரர் திரு. நா. கதிர்காமநாதன்
முன்னைநாள் நிர்வாகசபைச் செயலாளர்.



அமரர். திரு. இ. கதிர்காமலிங்கம்
ஆரம்பகால நிர்வாகசபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்த ஆண்டு அமையவிருக்கும் ராஜகோபுர வரைபடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த் திருப்பணி வேலைகள் நடைபெறும் காட்சிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய சித்திரத் தேருக்கு
முதல் அச்சு வைத்தல்
26–8–1977.




முதல் அச்சு வைத்தல்



முதல் அச்சு வைத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேரிலமைந்த அட்டதிக்குச் சிற்பங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேரில் அமைந்த சிற்பங்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய முகப்பு



ஸ்தூபியின் அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாள் வசந்தமண்டபத்திலிருந்து எழுந்தருளல்.




திருமுறை மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புராண படனம்



புராண படனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாளை அலங்கரிக்கும் தங்க ஆபரணங்கள்,
கற் பதக்கங்கள், பவுண் முடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்த் தாங்கி



கோயில் நந்தவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



↑
செவ்வாய்க்கிழமைகளில்
க்தர்கள் கூடும் காட்சி.



← சிரமதானத்
தொண்டர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| காணிக்கை | ... | ... | iii |
| ஆசிச்செய்தி | ... | ... | v |
| துர்க்கா ஸப்தச்லோகி | ... | ... | 1 |
| திருத்தேர் விழா | ... | ... | 2 |
| லலிதா நவரத்தினமாலை | ... | ... | 3 |
| கருணைபுரி அன்னையே | ... | ... | 6 |
| தெல்லிநகர், உழுகுடைப்பதித் துர்க்காதேவி பதிகம் | | ... | 7 |
| பக்தர் பரவசத்தாற் படிந்த சித்திரத்தேர் | | ... | 12 |
| நினைந்தெழு தோழி | ... | ... | 14 |
| தெல்லிப்பழை உழுகுடைப்பதி துர்க்காதேவி ஆலயம் — தல வரலாறும் திருப்பணி வளர்ச்சியும் | | ... | 17 |
| வரலாற்றில் சக்தி வழிபாடு | .... | ... | 27 |
| கோயிற் கலைகள் | ... | ... | 33 |
| வியாக்கிராசுர சங்காரமூர்த்தி | ... | ... | 40 |
| எழில்மிகு துர்க்கையின் அருள்மிகு திருக்கோலம் | | ... | 43 |
| இரதோற்சவ மகத்துவம் | ... | ... | 45 |
| ஆலய வழிபாடு | ... | ... | 48 |
| கற்றதனலாய பயன் | ... | ... | 56 |
| தேரோடும் வீதி | ... | ... | 58 |
| தேரிலே | ... | ... | 61 |
| உலகம் உய்ய | ... | ... | 64 |
| தாயுமான சுவாமிகளும் ஈழநாடும் | ... | ... | 67 |
| திரிபுரசுந்தரி | ... | ... | 70 |
| தேர்மகிமை | ... | ... | 72 |
| மலேசியாவில் இந்துசமய வளர்ச்சி | ... | ... | 74 |
| ஏன் பிந்துகின்றாய் இனி | ... | ... | 77 |
| தெல்லிப்பழை (உழுகொடைப்பதி) ஸ்ரீ துர்க்கையம்பாள் திருப்பொன்னூசல் | ... | ... | 78 |
| நன்றியுரை | ... | ... | 99 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கா ஸப்தச்லோகீ

*(சகல கஷ்டங்களையும் அகற்றி நன்மைதரும் சுலோகமிவை.)*

1. தேவீ! பகவதி, ஞானிகளின் மனத்தைக்கூட பலாத்காரமாக இழுத்து, மகா மாயா சொரூபியான அவள் மோகிக்கும்படி செய்கிருள்.

2. ஓ! துர்க்கே! உன்னை நினைத்தால் போதும். எல்லோருக்கும் பயத்தைப் போக்குகிருய். சுபஸ்தமாக உள்ளவர் நினைத்தால் நல்ல புத்தி தருகிருய். ஏழ்மை, துக்கம், பயம் இவைகளைப் போக்குபவள் உன்னைத் தவிர வேறு யாருளர். எல்லோருக்கும் உபகாரம் செய்ய எப்பொழுதும் கருணை நிறைந்த மனமுடையவளாக இருக்கிருய்.

3. சர்வ மங்களங்களிலும் மங்களமாயிருப்பவளே! சிவ பத்தினியே! சர்வ காரியங்களையும் சாதிப்பவளே! சரணமடையத்தக்கவளே; முக்கண் உள்ள வளே! கௌரீ; நாராயணீ; நுமக்கு நமஸ்காரம்.

4. தேவீ! நாராயணீ; சரணமடைந்த தீனரது துக்கத்தைப் போக்குபவளே; எல்லோரது துக்கத்தையும் நீக்கும் தேவீ! நுமக்கு நமஸ்காரம்.

5. எல்லாமாயுள்ளவளே; எல்லோருக்கும் தலைவியானவளே; சர்வ சக்தியு முள்ளவளே! தேவீ, துர்க்கே, சகல விதமான பயத்திலிருந்தும் என்னைக் காப்பாற்று.

6. துர்க்கே, நுமக்குச் சந்தோஷம் உண்டாக்கிஞல் சகல ரோகங்களும் அகலும்; நுமக்குக் கோபமுண்டாக்கிஞல் சர்வ காமங்களும் பயனற்றுப்போம். உம்மை யண்டினவர்க்கு ஆபத்தே கிடையாது. உம்மையண்டியவர் பிறரால் ஆசிர் வதிக்கத் தக்கவராவர்.

7. மூவுலகையும் ஆள்பவளே! சர்வ கஷ்டத்தையும் அகற்றி, எனது சத்துருவை யும் கொன்று, இத்தகைய காரியத்தை எனக்குச் செய்தருள்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருத்தேர் விழா

**வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்**

— 'கலைமகள்' ஆசிரியர், சென்னை —

தெல்லிப் பழைமேவு தேவிதுர்க் காம்பிகையே
செல்வமலி சித்திரத்தின் தேரதனில் — பல்வளமும்
ஓங்க எழுந்தருளி ஊராரெல் லாம்செழிக்கப்
பாங்கின் அருள்க பரிந்து.

எல்லா விழவினும் ஏற்றமுறும் தேர்விழா
நல்லார்கள் போற்றும் நயவிழா — வல்லாரும்
மாட்டாரும் வந்து வடம்பிடிக்க வைத்தருளைக்
கூட்டா நிற் கும்சீர் குவிந்து.

அன்னைதுர்க் காதேவி ஆர்வமுட னேயமர்ந்து
மன்னி விளங்கும் வளநாளில் — துன்னி
வடம்பிடிக்க வாருங்கள்; வந்தால்மேல் வீட்டில்
இடம்பிடிக்க லாகும் எளிது.

ஆலயத்துட் செல்லா தவரென் றிருப்பாரும்
சீலமுற வேயிழுக்கும் தேர்விழா — ஞாலமதில்
நல்ல பிரமோற் சவமென்னும் நாமமுறும்;
எல்லவர்க்கும் சேரும்நல் இன்பு.

தேவரெலாம் வந்து தெரிசிப்பார்; நாட்டவர்கள்
யாவருமே ஈர்த்தின்பம் எய்துவார்; — மூவுலகில்
தேர்விழாப் போலச் சிறந்து பயன்றருவ
தோர்விழா உண்டோ உரை.

பல்வளஞ்சேர் தெல்லிப் பழைத்துர்க்கா தேவியின்தேர்
நல்லவித மாக நயவுருப்பெற் — றெல்லவரும்
கண்டிழுத்துப் பாடிக் களித்தே யருள்எய்த
அண்டும், அனைகருணை யால்.

வாருங்கள், தேரை வணங்குங்கள்; ஈர்க்கஒன் றுய்ச்
சேருங்கள்; துர்க்கை திறம்பேசி — ஆரும்
கருணைமிகக் கொள்ளுங்கள்; காசினியில் இஃதே
அருள்சேர்க்கும் நல்லதோர் ஆறு.

வாழிவளத் தெல்லிப் பழையில் வளர்துர்க்கை;
வாழியவள் சித்திரத்தேர்; வந்துபுகழ் — சூழுமன்பர்
எல்லோரும் வாழி! இனியஅருள் வாழிஎங்கும்
நல்லோர்கள் வாழி நயந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௧

# லலிதா நவரத்தினமாலை

## காப்பு

ஆக்கும் தொழில்ஐந் தராற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரிபால்
சேர்க்கும் நவரத் தினமா லையினைக்
காக்கும் கணநா யகவா ரணமே.

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கன வான தவம்
பெற்றும் தெரியார் நினையென் னில்அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க் கெமனாக எடுத் தவளே
வற்றாத அருட் சுனையே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமே னியிலே நினைவாய்
நினைவற் றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## முத்து

முத்தே வரும்முத் தொழிலாற் றிடவே
முன்நின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவா சினியே சரணம்
தத்தே றியநான் தனயன் தாய்நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு ததிக் கிணைவாழ் வடையேன்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவளம்

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம்செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிறம்பவ ளம்பொழி பாரோ
தேம்பொழி லாமிது செய்தவ ளாரோ
எந்தை யிடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுப வர்க்கருள் எண்ண மிகுத்தாள்
மந்திர வேத மயப்பொரு ளானுள்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## மாணிக்கம்

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே
பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநா மமும்நின் துதியும்
நவிலா தவரை நாடா தவளே
மாணிக்க ஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
ச்ருதிஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவஎன் றடியவர் குழும
அவரருள் பெறஅரு ளமுதமே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராக விலாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவீ சந்த்ரக லாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத ஸ்வரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைடூரியம்

வலையொத் தவினை கலையொத்த மனம்
மருளப் பறையா றொலியொத் தவிதால்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற் றசைவற் றநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூ ரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

## பயன்

எவர்எத் தினமும் இசைவாய் லலிதா
நவரத் தினமாலை நவின் றிடுவார்
அவர்அற் புதசக்தி எல்லாம் அடைவார்
சிவரத் தினமாய்த் திகழ்வா ரவரே.

* * *

ஜெய சிவரமணீ குருகுஹ ஜனனீ ஜெய மனவனஹரிணீ
ஜெய ஓம் ஸ்ரீமாதா—மாதா—ஜெய ஜெய ஜெகன்மாதா
மாதா ஜெய ஓம் ஸ்ரீமாதா—மாதா—ஜெயஜெய ஜெகன்மாதா.

எண்ணெய் இல்லாது தீபம் எரியாது. அதுபோன்று கடவுள் இல்லாது மனிதன் உயிர் வாழ முடியாது. கடவுளின் சங்கற்பம் அல்லது இச்சையே இயற்கை நியதிகளாக வடிவெடுக்கிறது. பூரணமாகத் தெய்வத் தன்மை யடைவதே மனித இலட்சியம். ஆகவே உன்மனதை இறைவனிடம் திருப்பு. அப்பொழுது உனது சுகம் துக்கம் ஒழியும். பிறப்பு இறப்பு நீங்கும். முத்தியும் கிட்டும்.

— சுவாமி சிவானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கருணைபுரி அன்னையே

மூவரொடு தேவகுலம் முறைநின்று நறைகொண்ட
மொட்டறு மலர் புனைந்து
முப்போது முடிசாய்த்து மெய்ப்பதம் பூசிக்க
முக்கண்ணன் விழி நயக்க
நாவரசி வீணைவா சிக்கநா ரணனொடு
நளினமகள் வாழ்த்து ரைக்க
ஞானவடி வேலவனும் ஆனைமுக நாயகனும்
நாடியிரு பங்கு மகிழ
காவல்வயி ரவராதி கணமெலாம் வரிசைதர
கடியசிங் கத்தின் மேவி
கருணைபுரி யன்னையே தருணமுகி லானநின்
கழலிணை எமக் கருளுவாய்
ஆவணியி லேஉத்த ராடநாள் தேரேறி
அருளோணம் தீர்த்தம் நல்கும்
அமுதமே நமசிவாய அழகியே தெல்லியூர்
ஆதிதுர்க் காதேவி யே.

— அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிநகர், உழுகுடைப்பதித் துர்க்காதேவி பதிகம்

## காப்பு

### வெண்பா

சீரார்நற் றெல்லிநகர் சேரே ருழுகுடைவாழ்
பாரார்துர்க் காதேவிப் பண்ணவிக்கு — நேரார்வத்
தாற்பதிக மோதவுயர் தந்திமுகத் தெந்தையிரு
காற்சதவம் போருகப்பூக் காப்பு.

### ஆசிரிய விருத்தம்

உலகமொரு மூன்றினுங் குலவுபற் பலகோடி
யோனிபே தங்களாகி
ஊர்வநீர் வாழ்வதத் துவநடப் பனநிற்ப
வுயரப் பறப்பதவழ்வ
நிலவவரு மக்கள்வகை வகையாக வீன்றுமிக
நீடருள் சுரந்தவைகடம்
நினைவறிந் திருகண்க ளிமையாம லிரவுபகல்
நீங்காம லுடனிருந்து
அகிலபோ கங்களையு மூட்டியன் பொடுவளர்த்
தாதரித் திடுமன்னையே
அடியரனு தினமுமுண் டானந்த முறவைகு
மரியவா னுவமிர்தமே
திலகவா ணுதலணங் கேயெனது துயரெலாந்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 1

எந்தநா ளெந்தவகை வந்துபந் தித்ததிங்
கென்னைமல மென்பதறியேன்
ஏதிலாக் கற்பங்க ளெண்ணிலெண் ணிலவாய்
இருட்டல மிருந்ததறியேன்
அந்தநடு வாதியில் லாதமக மாயிநின்
அருளினு லறிவுதோன்றி
அமலமாம் வகையற்ப புல்பூடு மரமாகி
யாமெழு வகைப்பிறப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவந் தேபோவ தறியே னினிச்செயும்
வண்ணமே தென்பதறியேன்
வரமருவு முன்சரண் போற்றவறி யேன்சாண்
வளர்க்கவகை தேடியோடிச்
சிந்தைநொந் தேயயரு மறிவிலேன் குறையெலாந்
தீர்த்தருள்செய் வாயம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 2

மலமாயை கன்மவிரு ளிடையன்று விழவந்த
வகையொன்று மறியாப்பெரும்
மதிகெட்ட வென்னையிப் படியின்று வரையுமிவ்
வகையாற்று ஞுதமிடியால்
நலனென்று மின்றியுயி ரொடுசெத்த பிணமாகி
நாடொறும் வாழவைத்தாய்
நாடுமுன் னருளுக் கடாதன்னை யேயீது
நானுனது மைந்தனன்பாய்
இலகுமிரு குழையருகு பொருதுசெவ் வரிசிதறி
இருவயில் களைப்பழித்த
இணைகயல் கண்ணினு லென்முகம் பார்த்துலக
வின்பெல்லாந் தந்துயாருஞ்
செலவரிய தாயடியர் செல்கதிய தானபர
சிவபதமு மீந்தருள்செய்வாய்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 3

அருளோங்கு மானந்த வல்லிநா லெண்வகை
அறங்களை வளர்த்தசெல்வி
அயனுதி முப்பத்து முக்கோடி தேவர்நிதம்
அடிபரவு மிறைவிபோதப்
பொருளோங்கு முயர்தவத் தோரருங் கதியைப்
பொருந்தவழி காட்டுமனையே
பொருளிலேன் ருய்தந்தை தமருதவி தானிலேன்
புவியிலொரு சுகமுமில்லேன்
மருளோங்கி நிறைமனத் தேனிகம் பரமான
வாழ்வினும் தாழ்வுறுவனே
வந்துவந் தேபோன வாழ்வினுல் நொந்துளம்
வாடுமென் முகம்நோக்கியே
தெருளோங்கு முயர்கல்வி செல்வமும் தந்துதுயர்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமெலாப் பிறவியினும் மானுடப் பிறவிதான்
பெறலரிய தென்றுபெருநூல்
பேசும்இப் பிறவியை யெடுத்துப் பெறும்பேறு
பெறவிடாக் கொடுமைசான்ற
வறுமைவந் தென்குலங் கல்விசெல் வங்குணம்
வடிவெல்லாங் குடிபோக்கவே
மதிவாடி னேன்றருண மீதருள்வை இந்திரன்
வானோ ரிடும்பைநீங்கக்
கறுவுகொ ளுளத்தொடுறு சமமொழித் தருளிலாக்
கள்ளவசு ரக்கிளையுடன்
கருதுகா சிபமுனிவ னொடுசேர்ந்து மாயைதரு
காதலன் சூரபதுமச்
செறுநனைச் செற்றவறு முகவனைப் பெற்றவுயர்
திருவுற்ற பெருநங்கையே
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 5

பங்கய மலர்ப்பதத் துணைகளும் பரிபுரம்
பாடகம் பாதசரமும்
பைங்கொடியை நிகரிடையு நிகரில்பட் டுடையுமருள்
பகிரபய வரத கரமும்
துங்கதொடி சூடகமு மாகமுத் தாரமுந்
துயல்ரத்தி னக்குழைகளும்
சோதிவிடு திருவதன முடனேழை யேன்முன்
துலங்கவந் தருள்புரிகுவாய்
திங்களைத் தீண்டுபல வின்கனிகள் கீண்டுமாத்
தீங்கனிகள் சிதறிவாழைச்
செங்கனிக ளைத்துவைத் துக்குருகி னம்வெரீஇச்
சேவல்பெடை யோடுமிரியத்
தெங்கில்முதிர் பழமுதிரும் மங்குல்படி சோலையும்
செந்நெல்விளை கழனியும்சூழ்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 6

அந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
அமரிசங் காரிகௌரி
ஆறட்ச ரத்திபுர நேமிக் கரத்திவலி
யாரம் பணத்திநிகரில்
சுந்தரி நிறைந்தபர மானந்தி நித்தியச்
சுகசோப னத்திவாய்ந்த
சூலியெண் டோளியயி ராணிமுத லானவுயர்
சூரரம் பையரிறைவியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைநீ தாயுநீ தமருநீ கனம்மிக்க
சகலபாக் கியமும்நீயே
தாரணியி லுனையன்றி வேறுதுணை யிலையெனது
சஞ்சலமெ லாம்நீக்கியே
சிந்தைமகிழ் நீடவரு பந்தமரு ளோடவுறு
தீவினைகள் வாடவருவாய்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 7

நாரணன் மலரிலுறை யாரணன் புகழிலுயர்
நான்மருப் புளவாரணன்
நவையிலா தித்தர்மல முத்தரா ஞேரெல்லாம்
நவிலுமா சாரமொருவிப்
பேரணங் கொடுபணித் திடுதொண்டு களைஎல்லாம்
பிழையிலா தேயியற்றிப்
பீடழிந் தவசமுற நாடொறும் வினைகொண்டு
பெருமிதத் தோடுகருணைக்
காரண மடாதுற்ற மகிடா சுரன்மிகக்
கறுவியெதிர் பொருதஞ்சியே
கரவிலொரு வன்னிமர மாகவெட் டித்துண்டு
கண்டுஅண்டர் வாழவைத்த
சீரணங் கேயுனது புகழெனது நாவினுல்
செப்பவெளி தோவம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 8

மாருதப் பிரவல்லி திசையுக்கிர சோழனருள்
மகளுற்ற குன்மவலியும்
மாமுகமும் நீக்கியவர் மகளென வனப்பருளி
மாவிட்ட புரமென்றுநற்
பேருலவ விட்டுஉல கினிற்கொடிய மிடிகவலை
பிணியொன்று மணுகாமலே
பேறுதரு கோயில்கொண் டாசகல் விழாப்பவனி
பேசுமயில் மீதுவந்து
ஆருமயல் தீரவருள் விளையாடல் செய்துவரு
மறுமுகக் குமரேசனை
ஆர்வமொ டெதிர்ந்துஉப சரித்திடவு மடியருறு
மாகுல மகற்றிமேலாஞ்
சீருமுயர் கல்விஞா னம்பே றளிக்கவுந்
திருவுளங் கொண்டெழிலுறும்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தபா சத்தினுல் பந்தித்து மதிகெட்ட
பாவியான் செய்தபிழைகள்
பலகோடி யெனினுமவை யாவும் பொறுப்பதுன்
பாரமெனே யீன்றதாயே
எந்தனுடல் பொருளாவி மூன்றுமுன் றனதாக
வீந்தே னெனக்குஇங்கினி
ஏதொன்று மில்லையெல் லாமுன்ன தேதகா
தென்னைக்கை விடல்சென்னிதான்
வந்திக்க விழிகள்தரி சிக்கக் கரங்குவிய
வரவலந் தாள்கள்வாழ்த்த
வாய்செவிகள் கேட்பவரி தாயபுக ழோடுதிரு
வடியையனு தினமுமனமே
சிந்திக்க வும்வரந் தந்தருள வேணுமென்
சென்மசா பலியமாகத்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. 10

## அபிராமி பட்டர் அபிராமி யந்தாதி

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரணம் அரண்நமக்கே.

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

குயிலா யிருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலாய ருக்கன் றிமவா னளித்த கனங்குழையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தர் பரவசத்தாற் படிந்த சித்திரத்தேர்

## வெண்பா

பழங்கோயிற் பிள்ளை பரன்மாவை காசி
விளங்கு விநாயகர் மேவ — உளங்கோரும்
தெல்லித் திருப்பதியில் தங்கம்பாள் தேவிதுர்க்கை
சொல்லுந் தரமோ துணை.

பத்தியுளப் பண்பாய்ப் படிந்தவர் பற்றுநெறி
முத்திரையாய் முன்னோர் முயற்சியது — சித்திரத்தேர்
தேவிதுர்க்கை சீராய்த் திகழ்ந்திவரச் செய்தார்நா
ஞவிதத்து நுண்கலையின் நாண்.

## கலிவெண்பா

முத்தியின்பம் சேர முனைவதற்கே இப்பிறவி
நித்தியனின் நல்லருளால் நேர்ந்ததச் — சித்திபெறக்
கண்ணுதற்றெம் ஈசன் கருணு கடாட்சமாய்
நண்ணியமெய் வேதமந் நான்குடனே — அண்ணலார்
தந்த சிவாகமங்கள் சாத்திரங்கள் தோத்திரங்கள்
சிந்தை திகழவைக்குஞ் செம்மையிலே — வந்த
சிவசமயத் தோர்தம் திறனளவில் வாய்த்த
தவமுறை சரியை கிரியை — நவமாகத்
தொண்டியற்றும் தூய்மை துலங்குகின்ற தெல்லிநகர்ப்
பண்டியங்கும் துர்க்கை பராசத்தி — கொண்டதிருக்
கோயில் அடியார்கள் கும்பிட்டங் கேத்திநிற்கத்
தாயிவள்தாம் தக்கவண்ணம் தாங்குகின்ருள் — ஆயிரம்
ஆயிரமாய்ச் சேயிழையார் ஆண்டகையோர் அவ்விழாக்கள்
ஆயநெறி கண்டுகளித் தானந்தம் — பாயவெள்ளம்
ஆற்றலெலாம் அன்னைதுர்க்கை ஆக்கியதும் — ஆலயமோ
போற்றுகவின் பான்மை பொலிந்துவரும் — பேற்றினைச்
சாற்றமொழி யாமறியேம் தாரணியிற் சைவநெறிக்
கேற்றதலம் இங்குண்டென் றேசொல்லி — ஆற்றுப்
படுத்துவதே பத்தர் பணியாகும் பண்பின்
எடுத்துக்காட் டாக இறைவி தொடுத்ததலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாழிகைக்கோர் தோற்றமும் நாளுக்கோர் ஏற்றமுமாய்
ஏழிசையின் இன்ப மெனவோங்க — வாழியவே
துர்க்கை துணையடிகள் சூழுகின்ற மானுடர்
வர்க்கமெலாம் மாநிலத்தில் வாழ்வுபெற — அர்ச்சனையின்
சின்னமாய்த் தோன்றுமிச் சித்திரத் தேர்கலைநுண்
வண்ணமாய் வானவரும் வாழ்த்திநிற்க — மன்னுசைவம்
மண்ணுலகில் மாண்புயர மாதவத்தோர் மயங்கிவர
தண்ணளிசெய் செந்தமிழும் சால்போங்கப் — பெண்ணரசி
செய்யதிரு வீதிவலம் சீர்ஊர வேதவொலி
தெய்வநெறி அந்தணர்கள் சிந்தையொடு — பெய்யத்
திருமுறையின் பண்ணிசை சேணெழவெண் சங்கம்
பெருநெறியில் நாதம் பெருக்க — கரும்பனைய
மங்கல வாத்தியத்தில் மாறிபுணர் வர்ணமெழ
பொங்கடியர் வெள்ளம் புரண்டோடி — எங்கணுமே
அன்னைக்(கு) அரஅரவென் றார்ப்ப — அசைந்திவரும்
கன்னிக் கதிரவன்போற் காந்திநனி — மன்னவே
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனச் — சாலுமென்ற
போதம் புகட்டுவான் போலநன் கூர்தலும்
பேதஞ்செய் மும்மலப் பேயகன்று — மேதினியில்
தீமையைச் சங்கரித்துச் சிட்டபரி பாலனம்
தாமியற்றும் ஆற்றலமை தாயென்று — நாமறியத்
தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரானென்ற — முன்னுரையை
ஆன்மாக்கள் தாமறிய அன்னைதுர்க்கை அம்பிகையும்
தான்இவரும் தங்கமயச் சால்புசெறி — மேன்மைகொள்
தேர்காண்மின் தேசுறும்மின் தேவிதிருச் சீர்பார்மின்
ஊர்தியிதன் ஒண்பொருளை உற்றறிமின் — ஊர்ஊராய்
வீசும் இறையொளியின் மின்தேர்மின் வேதநெறித்
தேசும் சைவமதச் சீருமாய்ப் — பேசுமிந்தச்
சித்திரத்தைத் தேவரறி சிற்பத்தைத் தெய்வநெறி
முத்தமிழை மெய்ஞ்ஞான மூதறிவின் — முத்திரையைக்
காண்பாரே காண்பர் கவுரியன்னை கண்ணருளைப்
பூண்பாரே புண்ணியர் பூர்வீக — மாண்புடையீர்
வம்மின் வடம்பிடிமின் வாழ்த்துமின் போற்றுமின்
தம்முள்வைப் பள்துர்க்கைத் தாய்.

— நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நினைந்தெழு தோழி

அம்புவி முதலாம் அனைத்தையும் இயக்கும்
ஆதிபரா சக்தி யாகி
நம்பிய வடியார் நலிவுகள் போக்கி
நயந்தரு நன்மைகள் ஆக்கி
வம்பலர் சோலை வகைசெறி தெல்லி
மாநகர் கோயில்கொண் டருளும்
எம்பெரு மாட்டி துர்க்கா பிராட்டி
இன்னருள் நினைந்தெழு தோழீ. 1

அசுரரை வீழ்த்தி அமரருக் குதவி
அறமுறை காப்பவ ளாகி
கசிவுறு நெஞ்சம் கண்களிற் பனிப்பக்
கைதொழு தார்த்திடும் அடியார்
பசிவகை போக்கிப் பண்புகொள் தெல்லிப்
பழைநகர் கோயில்கொண் டருளும்
திசைபுகழ் துர்க்கா தேவியின் செயல்கள்
தினந்தினம் நினைந்தெழு தோழீ. 2

வீரத்தை நல்கி விளக்கமும் அளித்து
வெவ்வினை வேருடன் கெடுத்து
வாரத்திற் செவ்வாய் நாட்டவ ருது
வந்தடி வீழ்பவர்க் குருகி
ஊரத் தனைக்கும் உயர்புகழ் தெல்லி
யூரதிற் கோயில்கொண் டருளும்
சூரத்துச் சூலி துர்க்கா பிராட்டி
துணைநிதம் நினைந்தெழு தோழீ. 3

மூவரின் சக்தி முழுமையுங் கொண்டு
முடிப்பதற் கருஞ்செயல் முடித்தாள்
ஆவலின் கூடி ஆச்சியென் றுடும்
அன்பருக் கருட்கரம் நீட்டித்
தேவரும் வணங்க விரைந்திடும் தெல்லித்
திருப்பதி கோயில்கொண் டருளும்
காவலர் கடவுள் துர்க்கா பிராட்டி
கருணையை நினைந்தெழு தோழீ. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கரங்கள் எத்தனை வரங்கள்
எத்தனை தாள்பணி சிரங்கள்
எத்தனை பூசை எத்தனை ஓசை
எத்தனை தரிசன வாசை
பத்திசெய் யடியார் பரந்தெழு தெல்லிப்
பழைநகர் கோயில்கொண் டருளும்
வித்தகத் துர்க்கா தேவியின் னருளால்
விளைநலம் விழைந்தெழு தோழீ. 5

சூலமும் வாளும் சுந்தர மலரும்
துகைப்பையும் சுகத்தையுங் காட்ட
காலனும் மயங்கக் கனியடி யார்க்குக்
கருத்துடன் ஆயுளும் நீட்டி
மேலெழுந் தாலங் குடைவிரி தெல்லி
வியன்பதி கோயில்கொண் டருளும்
ஏலநற் குழலாள் துர்க்கையெந் தேவி
இன்னருள் நினைந்தெழு தோழீ. 6

மந்திரச் செல்வி மாறுகொள் மகிடன்
மாண்புற வருளிய வல்லி
இந்திர வாழ்க்கை ஏத்திடும் அடியார்
எல்லவ ரும்பெற விரங்கி
செந்தமிழ் விளங்கும் தெல்லியம் பதிமுன்
செய்தவ மேன்மைகண் டுவந்து
சுந்தரக் கோயில் கொண்டருள் சொரியும்
துர்க்கையை நினைந்தெழு தோழீ. 7

ஒருதொழில் இல்லார் உயர்தொழில் பெறுவார்
ஒன்னலர் நண்பர்க ளாவார்
திருமண மாகா தவர்மணம் புரிவார்
திருவினை வறியவர் பெறுவார்
ஒருவரும் மாற்று நோயுடன் மாறும்
உள்ளொளிப் பெருக்கமுண் டாகும்
சரிவரும் எல்லாம் தெல்லியம் பதிசார்
தாயினை நினைந்தெழு தோழீ. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வினை போக்கி மாசினை நீக்கி
வாழ்வினைச் சுகவினை யாக்கி
செல்விதங் கம்மா சிரம்பணிந் தரிய
திருப்பணி நாடொறும் புரியக்
கல்வியிற் சிறந்த தெல்லிமா நகர்க்கண்
கவினுறக் கோயில்கொண் டருளும்
சொல்வகை கடந்த துர்க்கையம் பாளே
துணையென நினைந்தெழு தோழீ. 9

சிங்கநல் லூர்தி திகழ்ந்தருள் செய்தாள்
சித்திரத் தேர்மிசை இவர்ந்து
பொங்குநல் லடியார் புலன்தொறும் ஏறி
புகழ்ந்தவர் பாடிக்கொண் டாடும்
வெங்கலைப் பத்தி வெள்ளத்தில் ஏறி
வீதி யுலாவருங் காட்சி
அங்கயற் கண்ணி துர்க்கையம் பாளின்
அற்புதக் காட்சிகாண் தோழீ. 10

— **கவிஞர் வி. கந்தவனம்**

## வழிபாட்டு முறை

மரமென்று பார்ப்பவருக்கு யானை தெரியாது. யானை என்று பார்ப்பவருக்கு மரம் தெரியாது. மரத்தை மறைத்தது மாமதயானை என்பது திருமந்திரம். ஆலயத்தில் செல்பவர்கள் பார்வையைப் பலபக்கம் செலுத்தாமல் நிலத்தை நோக்கியவண்ணம் வலம்வந்தும் இறைவனிடத்திலேயே பார்வையைச் செலுத்தியும் வழிபடவேண்டும்.

பலசரக்குக் கடையில் முந்திரிப்பருப்பு, சேமியா, சீனி, புண்ணுக்கு, மயில் துத்தம் இப்படிப் பலவும் காட்சியளிக்கும். பாயசத்துக்குச் சாமான் வாங்கப் போனவன் அங்கு காட்சியளிக்கும் புண்ணுக்கையும் மயில் துத்தத்தையுமா வாங்குவான். கடைக்காரனைப் பார்த்து நீ ஏன் இவற்றை வைத்திருக்கிறாய் என்றும் கேட்கமுடியாது தானே. நாம் பாயசத்துக்குரிய சீனி முதலியவற்றைப் பெற்றுத் திரும்பவேண்டும்.

அதுபோல இறைவனுடைய திருவருளைப் பெறும்பொருட்டுக் கோயிலுக்குச் செல்லுகின்ற நாம் அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தாமல் பக்திப் பரவசத்துடன் வழிபாடு செய்யவேண்டும்.

— **வாரியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தெல்லிப்பழை உழுகுடைப்பதி துர்க்காதேவி ஆலயம்

## தல வரலாறும் திருப்பணி வளர்ச்சியும்

"மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்."

திருக்கோயில்களால் சிறப்புப்பெற்றது நமது ஈழவளநாடு. சிவத்தலங்களும் சக்தி தலங்களும் விஷ்ணு தலங்களும் இந்நாட்டை அழகுபடுத்துகின்றன. இவற்றுள் இந்நாட்டின் வடபாலமைந்த மிகப் புராதனமான துர்க்காதேவி ஆலயம் சைவப் பெருமக்களால் நன்கு அறியப்பட்ட தொன்று. நகுலகிரித் தீர்த்தம், மாவைக் கந்தன் ஆலயம் என்பவை அணித்தாக விளங்க யாழ்-காங்கேசன்துறைப் பெருந் தெருவில் எட்டாவது மைல் கல் தொலைவில் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் இவ்வாலயம் விளங்குகிறது. துர்க்கையை மூலமூர்த்தியாகக் கொண்ட இவ்வாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்ட காலமோ, அவ்வருட்செயலைச் செய்த பெரியாருடைய பெயரோ எளிதிலறியமுடியாதிருப்பதால் கர்ணபரம்பரைச் செய்தி கொண்டு மாத்திரம் சில ஆரம்ப நிகழ்ச்சிகளைப்பற்றிக் குறிப்பிட முடியும்.

பண்டைக்காலம் தொட்டு ஈழநாட்டுக்கும் பாரதநாட்டுக்குமிடையே ஏற்பட்டிருந்த ஆன்மீகத் தொடர்பு யாத்திரைகளினுல் காலகதியில் விருத்தியடைந்து உள்ளன. அங்கிருந்து அந்தணர்கள், சிற்பக் கலைஞர்கள், தெய்வத் திருவுருவங்கள் இந்நாட்டுக்கு வரவழைக்கப்பட்ட சிறப்பை வரலாறு காட்டும். துர்க்கையம்பாள் ஆலயத் தோற்றமும் இவ் வரலாற்றேடு தொடர்புடையதே.

தெல்லிப்பழையிலுள்ள வவுணவத்தை என்ற குறிச்சியைச் சேர்ந்த கதிர்காமர் என்ற சைவப் பெரியார் தலயாத்திரை காரணமாக வட இந்தியாவிலுள்ள காசி வரை சென்ருர். அங்கு அவர் பலநாட் தங்கி இருந்தார். இந்தியாவிலுள்ள சக்திக்குரிய தலங்கள் அறுபத்துநான்கினுள்ளும் துர்க்காதேவி சகல கலைகளுடன் பொலிந்திருப்பதும் மிக முக்கியமானதுமான காசி சொர்ப்பனேஸ்வரி பீடத்தின் மகிமையை உணர்ந்தார். நமது பெரியார் கதிர்காமர் அத்தலத்தைத் தரிசித்து துர்க்காதேவி உபாசகராக மாறினுர். இதனுல் அவர் தாம் யாழ்ப்பாணம் திரும்பும்பொழுது துர்க்கை இயந்திரம் ஒன்றும் வெண்கலத்தாலாகிய திருமுகக் கெண்டியொன்றும் கையோடு கொண்டு வந்தார். அவர் தாம் கொண்டுவந்த தேவியந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் தமக்குச் சொந்தமான உழுகுடைப் பதியில் தாபனம் செய்து பூசித்தார். இச் சைவப் பெரியாரின் தனிப்பட்ட வழிபாட்டு நிலையமாக விருந்த இக்கோயில் நாளடைவில் பொது மக்களின் வழிபாட்டு ஆலயமாக மாறியது. அக்காலத்தில் கோயில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்ட அந்தணர்களும், காஞ்சியிலிருந்து தருவிக்கப்பட்டவர்களென்றும், அவர்களின் சந்ததியினரே இன்றும் துர்க்காதேவி ஆலய அர்ச்சகர்களாக விளங்குகின்றனர் என்றும் நம்பப்படுகின்றது.

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயிலோடு இவ் வாலயத்துக்குப் புராதன தொடர்புண்டு என்பதைப் பழைய ஏட்டுப் பிரதிகள் குறிப்பிடுகின்றன. மாவை முருகன் ஆலயத்தில் கருங்கற் றிருப்பணி நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றப்பட்டு 1815ல் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை அடுத்து 1820ல் துர்க்காதேவி ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1829ஆம் ஆண்டு புரட்டாதி விஜயதசமி அன்று மாவை முருகன் துர்க்காதேவி ஆலயத்திற்கு எழுந்தருளி வந்து வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. அன்று தொடக்கம் இன்று வரை இவ்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**ஆலய நிர்வாகம்:**

தெல்லிப்பழை துர்க்காதேவி வவுணு வத்தையைச் சேர்ந்த சைவாசாரமும், பரோபகார சிந்தையும் வாய்ந்த பரம்பரையினரின் குல தெய்வமாக விளங்கி வந்துள்ளது. அம்மரபினரே கோயில் நிர்வாகத்தையும், கோயில் நிலங்களின் பராமரிப்பையும் பொறுப்பேற்று நடத்தினர். கதிரேசபிள்ளை உடையார் அவர்கள் இம்மரபில் வந்தவர். நீண்டகாலம் இவ்வாலய முகாமையாளராகவும் விளங்கியவர், பின் அவர் மகன் நாகநாதர் அவர்கள் கோவில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று, கோப்பாயிலிருந்து விசேட தினங்களுக்கு எல்லா உபகரணங்களோடும் இங்குவந்து, விழாக்களைச் செய்து, ஆலய பரிபாலனத்தைச் சிலகாலம் நடாத்தி வந்தார். இவர் காலத்தில் ஆலயத்தோடு தொடர்புடைய பல அடியவர்கள் கோயிலைப் புனருத்தாரணம் செய்வதுபற்றி முயற்சி எடுத்தனர். இவர்களின் விருப்பத்தை ஏற்றுக்கொண்ட அமரர் நாகநாதர் அவர்கள் தனி முகாமையிலிருந்து ஒரு சபையினருக்கு ஒப்படைப்பதையே சாலச் சிறந்தது என மனதிற் கொண்டார். தமக்குப் பின் தமது மரபினரையும் உட்படுத்தி, கோயில் ஸ்தாபனப் பரம்பரையினரையும் சேர்த்து, நித்திய, நைமித்திகத் தொடர்புடையவர்களையும் இணைத்துப் பதினொருபேர் கொண்ட நிர்வாக சபையை எற்படுத்தினர், இதுவே இப்பொழுது தர்மகர்த்தா சபை என்றழைக்கப்படுகிறது. காலஞ்சென்ற டாக்டர் பி.எஸ். சுப்பிரமணியம் அவர்கள் தலைவராகவும், காலஞ்சென்ற திரு. வ. சுப்பிரமணியம் அவர்கள் காரியதரிசியாகவும், முன்னைநாள்பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் தனாதிகாரியாகவும் இச்சபையில் இடம் பெற்றனர். சபையின் முதல் முயற்சியாக, 1953ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 6ஆம் நாள் ஆலயக் கருவறைக்குரிய அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. இதனை நாட்டியவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த சைவப் பெரியார் செம்மனச்செல்வர் திரு. அ. கனக சுந்தரம் அவர்களே. 8 – 2 – 54இல் சைவப் பெரியார் அமரர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களால் வரிக்கல் வைக்கப்பட்டது. தர்ம கர்த்தா சபையினரின் பெருமுயற்சியால் மஹா மண்டபம் வரை திருப்பணி நிறைவெய்தியது. முதன் முதலாகப் பொதுமக்களால் உபகரிக்கப்பட்ட பணத்தின் வரவு செலவுக் கணக்குகளை 7-4-62இல் தர்மகர்த்தா சபையினர் வெளியிட்டனர்.

**திருப்பணிச் சபை:**

5-5-62இல் தர்மகர்த்தா சபையினரால் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் திரு. சே. தியாகராசா அவர்களின் தலைமையில் ஒரு திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டது. இச்சபைக்கு திரு. தம்பு பொன்னம்பலம் அவர்கள் காரியதரிசியாகவும் திரு. கா. சுப்பிரமணியம் அவர்கள் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். திரு. தம்பு பொன்னம்பலம் அவர்களின் இடைவிடா முயற்சியால் ஆலயத் திருப்பணிகள் (மஹா மண்டபம், வெளிக் கிணறு, விக்கிரகங்கள், வைரவர், நாக தம்பிரான்) ஒழுங்காக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. டாக்டர் சு. குமாரபதி அவர்களின் பேரில் கோயில் வெளிக்கிணறு அமைக்கப்பட்டது. விக்கிரகங்களனைத்தையும் சிற்பாசாரி திரு. பெரியசாமி என்பவர் செதுக்கி ஒப்படைத்தார். வைரவர் சந்நிதி, திரு. தம்பிப்பிள்ளை பொன்னம்பலம் அவர்களாலும், நாகதம்பிரான் கோவில் திரு. வி. தவமணி அவர்களாலும் உபயமாக நிறைவேற்றப்பட்டது. ஏனைய திருப்பணிகள் பொதுமக்களின் அன்பளிப்புப் பணத்தினால் நடைபெற்றன. இதன் விபரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31-3-64இல் வெளிப்படுத்திய வரவு செலவு அறிக்கையில் காணலாம். 3-5-65 இல் தர்ம கர்த்தா சபையினல் புதியதோர் திருப் பணிச்சபை தெரிவு செய்யப்பட்டு திரு.சே. தியாகராசா அவர்கள் தலைவராக நியமிக் கப்பட்டார். இதில் திரு. தம்பு பொன்னம் பலம் அவர்களோடு திரு. க. சிவராசா அவர்களும் இணைச் செயலாளராக விளங் கினர். திரு. தி. ஆறுமுகசாமி அவர்கள் தனதிகாரியாகக் கடமை புரிந்தார். இக் காலத்திலும் மேலும் பல திருப்பணிகள் நிறைவேறின. பிரகாரத்தில் அமைய வேண்டிய விநாயகர் சந்நிதி இணுவில் ஊரைச் சேர்ந்த கொடைவள்ளல் திரு. சி. சின்னத்துரை (கல்கி) அவர்களின் சொந்த உபயமாக நிறைவேற்றப்பட்டது. நிருத்த மண்டபம், மடைப்பள்ளி ஆகியன கதம்பக் கச்சேரி மூலம் கிடைத்த நிதியி னல் நிறைவேற்றப்பட்டது, சிங்கம், பலி பீடம் என்பவற்றைக் கருகம்பானை வாசி யான திரு. ஆ. நாகலிங்கம் அவர்களும், அம்பாள் தூபியை அக்காலத்துத் திருப் பணிச் சபைத் தலைவராக விருந்த திரு. சே. தியாகராசா குடும்பமும் தமது தனி உபயமாக நிறைவேற்றினர். மின்சார வெளிச்சம் அமைப்பதற்கு மல்லாகத்தைச் சேர்ந்த திரு. எஸ். தவமணி அவர்கள் பேருதவி புரிந்தார். மின்சார இணைப்பைப் பெரு விருப்புடன் நிறைவேற்ற உதவி புரிந் தவர் திரு. ஆ. கனகசபை அவர்கள்.

### சிரமதான இயக்கம் :

தெல்லிப்பழைவாழ் இந்து இளைஞர்கள் 11-7-65இல் ஒரு சிரமதான இயக்கத்தை ஏற்படுத்தி, ஞாயிற்றுக்கிழமை தோறும் திருத்தொண்டு புரிந்து ஆலயத் திருப் பணியில் பெரும்பங்கு கொண்டனர், கதம்ப நிகழ்ச்சி ஒன்றை நடாத்தி, நிதி சேகரித்து 1965ஆம் ஆண்டு ஆவணி மாதத்திற்கு முன் நிருத்தமண்டபம் நிறை வேற உதவினர். அன்று தொடங்கிய இவ் வியக்கமே இன்றும் ஆலயப் பணிகளில் ஈடுபட்டு, மஹோற்சவ காலம், விசேட தினங்கள், ஆகியவற்றில் தொண்டாற்றி வருகிறது. அவ்வியக்கம் இன்று விரி வடைந்து, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் என்ற ஸ்தாபனமாக அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையில் அங்கம் வகிப்பதுமன்றி, இவ்வாலய வளர்ச்சிக்கும் இயன்ற தொண்டுகள் புரிந்து தூய்மை, ஒழுங்கு, அழகு ஆகியவை நிலவத் தம்மாலான சிரமதானப் பணி புரிந்து வருவது பெரும் பாராட்டுக்குரிய தாகும்.

### மஹா கும்பாபிஷேகம் :

விசுவாவசு வருடம் ஆவணித் திங்கள் திருவோண நாளில் (3-9-1965இல்) புதன் கிழமையும் சிங்கலக்கின சுபமுகூர்த்தமும் கூடிய தினத்தில் மஹா கும்பாபிஷேக விழா மிகச் சிறப்பாக நிறைவேறியது. மாவையாதீனகர்த்தர் காலம்சென்ற பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக்குருக்கள் அவர்களின் மேற்பார்வையின்கீழ் அவர் களின் சிரேஷ்ட புத்திரர் பிரம்மஸ்ரீ து. ஷண்முகநாதக்குருக்கள் அவர்களால் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேற்றப் பட்டது. அவர்கள் திரிகரண சுத்தியோ டாற்றிய கிரியைகளே இவ்வாலயத்தின் போற்றுதற்குரிய எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது என்று கூறுவதில் மிகை யொன்றுமில்லை. மஹாகும்பாபிஷேகச் செலவைப் பொதுமக்களிடம் சேகரித்துத் தந்ததுமன்றி, தாமே சங்கற்பத்தையும் ஏற்று மிகச் சிறப்பாக நிறைவேற்றி வைத்த பெருமை திரு. தம்பு பொன்னம் பலம் அவர்களுக்குரியதாகும். இதில் பெரும்பங்கு கொண்ட திருப்பணிச் சபை யார்க்கும், சைவப் பெருமக்களுக்கும், மற் றும் அடியவர்களுக்கும் சைவ உலகின் பெரும் பாராட்டு உரியதாகுக.

### நிர்வாகசபை :

18-5-66இல் தர்மகர்த்தா சபையின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு திரு. கே. சிதம்பரஉடையார், திரு.தருமலிங்கம், திரு. கு. பாலசிங்கம், திரு. நா. திருநாவுக்கரசு, திரு. அ. சிவபாதசுந்தரம், திரு. க. ஜன நாயகம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஆலயபரிபாலனம் மேலும் சிறப்புற நடை பெறுவதற்காக நிர்வாக சபையொன்றும் அமைக்கப்பட்டது. உள்ளூர் வாசிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவாசாரமும் சமய பக்தி, ஆலயத் தொண்டு முதலிய சீரிய குணங்களுமுடைய 15 அங்கத்தவர்கள் இந் நிர்வாக சபையில் நியமிக்கப்பட்டனர். இந்த ஒழுங்கிற்கு ஏற்ப 1966ஆம் ஆண்டு ஆனிமாதம் முதல் ஆலயத் தர்மகர்த்தா சபை கோவிலின் அசைவற்ற ஆதனங்களுக்குப் பொறுப்பாக அமைய, மிகுதிக் கருமங்கள் அனைத்தும் ஆலய நிர்வாக சபையால் பொதுமக்களால் பெரிதும் போற்றப்படும் வகையில் நடாத்தப்படுகின்றன. இங்ஙனம் ஏற்படுத்தப்பட்ட ஆலய நிர்வாக சபையில் முதற் கூட்டம் 24-6-66இல் நடைபெற்றது. இதில் திரு. சே. தியாகராசா அவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் நம. சிவப்பிரகாசம், அ. சுப்பிரமணியம் ஆகியோர் உப தலைவர்களாகவும், திருவாளர்கள் இ. இராஜேந்திரம், சு. சிவவாகீசர் ஆகியோர் இணைக் காரியதரிசிகளாகவும், பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனாதிகாரியாகவும், திரு. தி. ஆறுமுகசாமி அவர்கள் திருப்பணித் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இந் நிர்வாக சபை ஆலயத் திருப்பணிகளை இடைவிடாது நடாத்தியதுடன் ஆலய பரிபாலன ஒழுங்குகளைச் சீராக்கி, நித்திய நைமித்தியங்கள் காலக்கிரமத்தில் செவ்வனே நடைபெற வழி வகுத்தது. 1966ஆம் ஆண்டு தொடக்கம் 1969ஆம் ஆண்டு வரையில் நிறைவேற்றிய திருப்பணிகள் பின்வருவனவாகும்:

**ஸ்தம்ப மண்டபம்:**

தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. அ. கனகசுந்தரம் குடும்பத்தின் உபயம்.

**வசந்த மண்டபம்:**

சட்டத்தரணி பொ. கந்தையா உபயம்.

**சுற்றுமதில்:**

மலேசியா அன்பர்கள், திரு. அ. கந்தையா, கொல்லங்கலட்டி சிரமதான இளைஞர் முயற்சி.

**மணிக்கோபுரம்:**

மஹாஜன மக்கள் உபயம்.

**ஆலய வெளி மண்டபம்:**

திருவாளர் ஆ. கனகசபை, தம்பிப்பிள்ளை பொன்னம்பலம், மற்றும் அன்பர் சிலரின் அன்பளிப்பு.

**அலுவலகம்:**

திருமதி க. சிவானந்தவல்லி, பொது மக்களின் சிறு அன்பளிப்பு.

**யாக மண்டபம்:**

டாக்டர் சி. சின்னத்தம்பி உபயம்.

**உள்வீதிப் படலை:**

திரு. க. ஜனநாயகம் உபயம்.

**வெளிவீதிப் படலை:**

திரு. தி. அருமைநாயகம் உபயம்.

**மஹோற்சவம்:**

துர்க்கையம்பாள் ஆலய வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இதுவாகும். இந் நிகழ்ச்சிக்குப் பின்பு ஆலயத்தின் திருவருட் பிரகாசம் மிக வேகமாக வீசத் தொடங்கிவிட்டது. 1968ஆம் ஆண்டு ஆவணிமாதம் வளர்பிறை பூரத்தில் ஆரம்பமாகி, திருவோணத்தில் நிறைவுறும் படியாக மஹோற்சவம் நடத்தப்பட்டது. வருடாவருடம் பொதுமக்களின் உபயமாகவே கொடியேற்றவிழா நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டது. பன்னிரண்டு தினங்கள் திருவிழா நடைபெற்று நிறைவு பெறுவதில் அந்தணர்கள், உபயகாரர்கள், பக்தர்கள் ஆகியோர் நிர்வாக சபையுடன் ஒத்துழைத்து வருவது பாராட்டுக்குரியதாகும். நேரக்கட்டுப்பாடும், பக்திப் பரவசத்தை யூட்டும் நிகழ்ச்சிகளும், இளைஞர்களின் சரியைத் தொண்டும் மஹோற்சவ காலத்தில் பலராலும் போற்றப்படுபவை. அம்பாளின் மற்றொரு நாமம் அன்னபூரணி என்பதற்கேற்ப மஹோற்சவ காலம் பன்னிரண்டு தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் அருட்காட்சியும் பல்லோராலும் போற்றுதற்குரியது,

**நிர்வாகசபை உத்தியோகத்தர் மாற்றம்:**

5-4-68இல் திரு. தி. ஆறுமுகசாமி அவர்கள் தமது திருப்பணித் தனாதிகாரிப் பதவியிலிருந்து ஓய்வுபெற, திரு. வே. செல்வரட்னம் அவர்கள் அவ்விடத்திற்கு நியமிக்கப்பட்டார். ஆகமவிதிப்படி நித்திய நைமித்திகங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்ற பெருவிருப்புடையவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தி. ஆறுமுகசாமி அவர்கள். அவருக்கு எல்லாம் வல்ல தேவி நல்லருள் பாலிப்பாளாக, மேலும் இணைக் காரியதரிசிகளில் ஒருவராகிய திரு. இ. இராஜேந்திரம் அவர்கள் வெளியூருக்கு மாற்றம்பெற்றபொழுது 18-5-69இல் அமரர் திரு. நா. கதிர்காமநாதன் தெரிவுசெய்யப்பட்டார். திரு. இராஜேந்திரமவர்களின் சேவைக்காலத்தில் அவர் ஆற்றிய பணிகளுக்கு எமது நன்றி உரித்தாகுக. 7-4-70இல் திரு. சே. தியாகராஜா அவர்கள் சுகவீனங் காரணமாகத் தலைவர் பதவியிலிருந்து ஓய்வுபெற, அவரிடத்திற்கு மகாஜனக் கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் தலைவராக நியமனம் பெற்ருர். திரு. சே. தியாகராசா அவர்களின் ஆலய சேவையைப் பாராட்டி நிர்வாக சபையிஞல் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "திரு.சே. தியாகராசா அவர்கள் இச் சபையின் தலைவராக ஐந்து வருடங்கட்கு மேல் நற்ருெண்டாற்றிவந்துள்ளார். அவர்களின் கடமையும் கண்ணியமும் வாய்ந்த சேவையை இச் சபை இழந்துவிட்டது. அவர்களின் சுகவீனம் நாம் அறிந்ததே. வழிபடும் அடியார்களுக்கும், பூசை ஒழுங்குகளுக்கும் அவர்கள் நல்வழிகாட்டிஞர்கள். அவர்களின் தலைமையில் அமைதியும். தூய்மையும் எமது ஆலயத்தில் நிலவியதோடு அவர், வருடாந்த உற்சவங்கள் காலவரையறையோடும் பக்தி சிரத்தையோடும் அமைய வழிகாட்டியாகவும் இருந்தார். மேலும் அவர்களின் சேவை ஆலயத்திற்கும் கிடைப்பது திண்ணம். அதற்கு அன்னருக்கு நீண்ட ஆயுளும் நிறைந்த சுகமும் கிடைக்க அம்பிகையின் திருவடிகளை வழுத்துகின்ரேம். திரு. சே. தியாகராசா அவர்கள் இன்றும் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து ஆலய முன்னேற்றத்திற்குரிய ஆலோசனைகளை வழங்கி வருகின்ருர் என்பது குறிப்பிடத்தக்கது."

நிர்வாகசபையின் இணைக்காரியதரிசியாக இரண்டு வருடங்கட்கு மேல் சிறந்த தொண்டாற்றிய திரு. நா. கதிர்காமநாதன் அவர்கள் 1971 தை மாதம் 22ஆந் திகதி அகால மரணமடைந்தார். இவர் சிரமதான இயக்க இளைஞர்களின் தலைவராக விளங்கி ஆலயத் திருப்பணிகளிலும் பெரும்பங்கு கொண்டு உழைத்தவர். ஆர்வமுள்ள இளைஞர். இவருடைய தந்தையார், சகோதரர்கள் துர்க்காதேவியோடு நிறைந்த ஈடுபாடுடையவர்களென்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய சேவையை நிர்வாகசபை இழந்துநின்ற நேரத்தில் திரு. க. தணிகாசலம் அவர்கள் அவ்விடத்தை நிரப்ப மிகப் பொருத்தமாக வந்து சேர்ந்தார். திரு. சு. சிவவாகீசர் அவர்களோடு இணைக் காரியதரிசியாக திரு. க. தணிகாசலம் அவர்கள் இன்று வரை நற்பணி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

தர்மகர்த்தா சபைக் காரியதரிசி திரு, வ. சுப்பிரமணியம் அவர்கள் 1972ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9ஆம் நாள் அமரராஞர். காலஞ்சென்ற திரு. வ. சுப்பிரமணியம் அவர்கள் அம்பாள் ஆலயம் கீழ் நிலையிலிருந்தபொழுது மற்றும் அதனுடன் தொடர்புடைய அம்பாள் அடியார்களுடன் சேர்ந்து ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து மஹா கும்பாபிஷேகம் நடாத்த வேண்டும் என்ற விருப்புடன் முன்னைநாள் ஆலய முகாமையாளருடன சேர்ந்து கொண்டு ஆலய பரிபாலனப் பொறுப்பினை ஆலய நிர்வாக சபையிடம் ஒப்படைப்பதற்கு முன்னின்று உழைத்தார். ஆரம்ப காலம் தொடக்கம் ஆலயத் தர்மகர்த்தா சபைக் காரியதரிசியாக விளங்கி ஆலயத் தொண்டுகள் செம்மையாக நடைபெற வழிகாட்டினர்.

**தர்மகர்த்தா சபை உத்தியோகஸ்தர்கள் மாற்றம்:**

ஆலயத் தர்மகர்த்தா சபையின் முன்னைநாள் உத்தியோகஸ்தர்கள் சிலர் காலம் சென்றதிஞலும், சில உறுப்பினர்கள் வெளியூர் சென்றதிஞலும் அச் சபையின் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்ற சமயம் திரு. சே. சிதம்பர உடையார் அவர்கள் (ஓய்வுபெற்ற பிரதம சிருப்பர்) தலைவராகவும், திரு. சு. சிவவாகீசர் அவர்கள் காரியதரிசியாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சி. விசுவநாதன் அவர்கள் தனுதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். தர்மகர்த்தாசபை உறுப்பினராயிருந்த திரு. க. ஜனநாயகம் அவர்கள் வெளியூர் சென்றதினல் அவரின் இடத்திற்கு திரு. சே. தியாகராசா அவர்கள் தர்மகர்த்தா சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். திரு. க. கந்தையா அவர்களது மறைவினல் ஏற்பட்ட இடத்திற்கு திரு. க. நவரத்தினம் அவர்கள் தர்மகர்த்தா சபை உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

ஆலய மஹா கும்பாபிஷேக காலம் தொடக்கம் அம்பாள் ஆலயத் தொண்டுகளில் பெருமளவு பங்கு கொண்டவரும் ஆலய நிர்வாகசபையின் சிரேஷ்ட உறுப்பினருமான திரு. செ. அருமைநாயகம் அவர்கள் 22-3-73இல் காலமானர். அவர் திருப்பணிச்சபை உறுப்பினராயிருந்த சமயம் இளைஞர்களின் சிரமதான இயக்கத்திற்கு ஆதரவளித்தார். தேர்த் திருவிழாவை உபயமாக ஏற்று அதனைச் சிறப்புற நடாத்தினர். இரதோற்சவ காலத்தில் அம்பாள் தேரில் பவனி வரும் அருட்காட்சியை அவர் அழகுற ஒழுங்கு செய்வது எல்லோரையும் கவருவதாயிருந்தது. சித்திரத்தேர் திருப்பணியை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்று காலம் சென்ற திரு. செ. அருமைநாயகம் அவர்கள் அவாவினர். அது இன்று பூர்த்தியாகி நிற்கும் நிலை அமரர் அருமைநாயகத்தின் ஆத்மசாந்திக்கு வழிகாண்பதாகும் என்பதில் ஐயமில்லை.

### சிவத்தமிழ்ச் செல்விக்குப் பாராட்டு விழா :

கால் நூற்றுண்டுக்குமேல் சைவப் பிரசங்கங்கள் மூலம் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அரிய சேவையைப் பாராட்டி ஆலய முன்றலில் 1974ஆம் ஆண்டு வைகாசி மாதம் அவரின் வெள்ளிவிழா நடாத்தப்பட்டது. ஆலய நிர்வாகசபைத் தனுதிகாரியாகப் பல்லாண்டுகாலம் பதவி வகித்து, ஆலய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய காரணத்தால் 'துர்க்கா துரந்தரி' என்ற பட்டம் பொதுமக்கள் சார்பில் ஆலய நிர்வாக சபையால் வழங்கப்பட்டு பொன்னுடையும் போர்க்கப்பட்டது.

### திருப்பணிகள் (1970—78) ;

துர்க்காதேவி ஆலயம் மேலும் சிறப்புப் பெற்றது என்பதற்கு இக்காலப் பகுதிகளில் நடைபெற்ற திருப்பணிகள் மேலான எடுத்துக்காட்டாகும்.

**1. வாகனசாலை :**

ஆலயத்திற்கு அம்பாள் அடியார்கள் உபயோகிக்கும் வாகனங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு உள்வீதியின் தெற்குப் பக்கமாகப் பொதுச் செலவில் வாகனசாலையொன்று அமைக்கப்பட்டது. தெல்லிப்பழை இந்து இளைஞர்சங்க உறுப்பினர்கள் சிரமதானம் செய்வதின் மூலம் இத் திருப்பணியில் பங்கு கொண்டனர்.

**2. திருமுறை மடம் :**

ஆலய உற்சவ காலங்களிலும் மற்றும் விசேட தினங்களிலும் பல நிகழ்ச்சிகளுக்கு உபயோகிக்க ஒரு மடம் மிகவும் அவசியமென அம்பிகை அடியார்கள் உணர்ந்தனர். இத் தேவையைப் பூர்த்திசெய்யும் முகமாக பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது உபயமாக, ஆலய வெளிவீதி தென்கிழக்குப் பக்கத்தில் 'திருமுறை மடம்' என்ற பெயருடன் ஒரு மடத்தை அமைத்து உதவினுர்கள். இம் மடத்தில் திருமுறை வகுப்புக்கள், நாயன்மார் குருபூசைகள், அன்னதானங்கள் போன்ற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற, நிர்வாக சபைத் தலைவரான பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஒழுங்குகள் செய்துள்ளார்.

**3. முன்வாசல் பாதையமைப்பும், ஆலய வெளிவீதி விஸ்தரிப்பும் :**

அம்பாள் ஆலயம் 65½ பரப்பு விஸ்தீரணமுள்ள காணியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது, காலத்திற்குக்காலம் அம்பாள் அடியார்கள் வெளிவீதி விஸ்தரிப்புக்குக் காணிகளை நன்கொடையாகக் கொடுத்துள்ளனர். இவ்வகையில் காலஞ்சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. கு. வன்னியசிங்கம் அவர்களது குடும்பத்தினரும், திரு. கு. பாலசிங்கம் அவர்களும் தங்கள் காணியில் பெரும் பகுதியை முன்வாசல் பாதையமைப்புக்கும், வெளி வீதி கிழக்குப்பக்க விஸ்தரிப்புக்குமாக உபகரித்துள்ளனர். ஆலய முன்வாசல் பழைய பாதை ஆலய புனருத்தாரணத்திற்குப் பின் நேராகவில்லாத காரணத்தால், பெருந்தெருவிலிருந்துகொண்டே தேவியைத் தரிசிப்பவர்கட்கு உதவும்வகையில் புதிய பாதை அமைக்கப்பட்டுள்ளது. இப் புதிய பாதையினை அமைப்பதற்கு ஆலயத்தின் பழைய பாதையின் ஒரு பகுதி திரு, ச, ஆறுமுகநாதன் அவர்களின் காணியுடன் கைமாறப்பட்டது. இவ்வகையில் திரு. ச. ஆறுமுகநாதன் அவர்கள் புதிய பாதை அமைப்பதற்குத் தமது காணியை அளிக்க முன்வந்ததனால் பாதையமைப்பு இலகுவாகியது. அடுத்து இப் பாதை மாற்றத்தின் சார்பில் தெல்லிப்பழை வாசியாகிய திரு. இ. தளையசிங்கம் அவர்களும் திரு. இராசசிங்கம் அவர்களது குடும்பத்தினரும் ஒரு பரப்புக் காணியை ஆலயத்திற்குத் தர்மசாதனம் செய்துள்ளனர். மிகுதிப் பாதைக்குரிய காணி திருமதி கோ. வன்னியசிங்கம் அவர்களுக்கும் திரு. கு. பாலசிங்கம் அவர்களுக்கும் சொந்தமானதாகும். மேலும் வெளிவீதியை வடக்குப் பக்கத்தில் விஸ்தரிப்பதற்கு திரு. வி. செல்வரத்தினம் அவர்கள் தமது காணியில் ஒரு பகுதியையும், மேற்கில் விஸ்தரிப்பதற்குத் திருமதி ம. கணேசரத்தினம் அவர்களும், திருமதி வ. நாகரத்தினம் அவர்களும் தங்கள் காணியில் ஒரு பகுதியையும் உபகரித்துள்ளனர். ஆலயத் தர்மகர்த்தா சபை மேற்கூறிய காணிகளை, உபகரிப்பதற்காய சாசனங்கள் மூலம் ஏற்றுள்ளது.

**4. திருநந்தவனம்:**

ஆலய வாயிலில் வடக்குப் பக்கமாகத் திருநந்தவனம் அமைக்கும் திருப்பணியைத் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க உறுப்பினர் நிறைவேற்றினர்.

**5. குழாய்நீர் விநியோகமும் நீர்த்தாங்கியும்:**

ஆலய கொடியேற்றத் திருவிழா உபயத்திற்குப் பொதுமக்களால் உபகரிக்கப்பட்ட நிதியின் மிகுதியைக் கொண்டு ஆலயத்திற்கு மிக அவசியமான நீர் விநியோகிப்பதற்கான நீர் இறைக்கும் மின்னியந்திரம், நீர்த்தாங்கி ஆகியன அமைக்கப்பட்டன.

**6. மலசலகூடம் அமைத்தல்:**

ஆலய வெளி வீதியில் பொது உபயோகத்திற்கென இரண்டு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன. அவற்றிற்குரிய முழுச்செலவும் மலேசியா வாசியாகிய திரு. மு. தனநாயகம் அவர்களால் உபகரிக்கப்பட்டது.

**7. தேவஸ்தான அலுவலகமும் ஆலய வருவாய் அதிகரிப்பும்:**

அடியார்கள் தமது நேர்த்திகளை நடாத்த ஏற்ற ஒழுங்குகளைச் செய்யவும், மற்றும் நிர்வாக ஒழுங்குகளை மேற்கொள்ளவும் ஆலய முன்வாயிலில் தெற்குப் பக்கத்திலுள்ள மண்டபத்தில் தேவஸ்தான அலுவலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் 23-1-73 தொடக்கம் ஆலயத்தில் நடைபெறும் அர்ச்சனைகள் யாவும் அர்ச்சனைச் சீட்டுமூலம் நடைபெறுகின்றன. இவ்வொழுங்கு கோயிற்குருக்கள் பிரம்மஸ்ரீ ஞா. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் பூரண ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்பட்டது. அர்ச்சனைச் சீட்டினால் பெறும் நிதி, கோயில் அர்ச்சகர்களுக்கும், மற்றும் பணியாளர்களுக்கும் மாதாந்த வேதனம், விசேட படிகள் அளிப்பதற்கு உபயோகப்படுவதுடன், ஆலய பராமரிப்பு செம்மையாக நடைபெறவும் பெரிதும் உதவுகின்றது. இவ்வகையில் ஆலய வருவாயைப் பெருக்கி, அம்பாள் ஆலயம் மிகுந்த பொலிவுடன் விளங்க வித்திட்டவர் முன்னைநாட் தலைவர் அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**8. வசந்தமண்டபம் புனர்நிர்மாணம் செய்தல்:**

அம்பாள் திருக்காட்சியை அடியார்கள் வசதியாகப் பார்த்துத் தரிசிப்பதற்காக வசந்தமண்டபத்தின் முன்வாசல் விசாலமாக்கப்பட்டு, அழகான புதிய கதவு ஒன்றும் பொருத்தப்பட்டது. இதற்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவு கொடியேற்றத் திருவிழாவுக்குப் பொதுமக்களால் உபகரிக்கப்பட்ட நிதியின் மிகுதியைக்கொண்டு நிறைவேற்றப் பட்டது.

**9. மேற்கூரைத் திருப்பணி:**

ஆலய மணிக் கோபுரம், பரிவார மூர்த்திகளுக்கிடையிலுள்ள மேற்கூரை முதலிய குறைவேலையாக இருந்த திருப்பணி தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. இ. குணராசா அவர்களால் நிறைவேற்றப் பட்டது.

**10. அன்னதானச்சாலை:**

திருமுறை மடத்தின் கிழக்குப்பக்கமாக மடத்தோடு சேர அன்னதானச்சாலை ஒன்றையும், அறையொன்றினையும் தமது சொந்தச் செலவில் திரு. ச. ஆறுமுகநாதன் அவர்கள் அமைத்துள்ளனர்.

**11. யாத்திரிகர் தங்கும் அறை:**

திருமுறைமடத்தின் மேற்குப்பகுதியில் ஒரு பந்தியமைத்து, யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு அறையும் அமைக்கக்கூடியதாக அன்பளிப்புச் செய்தவர் நொச்சிகாமம் வர்த்தகர் திரு. மு. பொன்னுத்துரை அவர்களாகும்.

**12, உட்பிரகார மண்டபத் திருப்பணி:**

இத்திருப்பணி நிறைவேற்றப்படுவதன் அவசியம் குறித்து ஆலய நிர்வாக சபை 1974ஆம் ஆண்டு முற்பகுதியில் அம்பாள் அடியார்களின் ஆதரவுடன் உட்பிரகார மண்டபங்களுக்குரிய தூண்கள் நிறுத்தும் திருப்பணியை ஆரம்பித்தது. அஸ்திவாரக் கல் நாட்டும் நிகழ்ச்சியை ஆலயநிர்வாக சபையின் முன்னைநாள் தலைவர் திரு. சே. தியாகராசா அவர்கள் நிகழ்த்தி வைத்தார்கள். அடுத்த ஆண்டிலேயே அம் மண்டபத்தின் தெற்கு, மேற்குப் பகுதிகளும், மடைப்பள்ளி, களஞ்சியம், வாகனசாலை, தெற்கு நுழைவாயில் ஆகியனவும் பூர்த்தியாக்கப்பட்டன. 1976ஆம் ஆண்டு முற்பகுதியில் வடக்குப் பக்கத்து உட்பிரகார மண்டபம் பூர்த்தியாக்கப்பட்டது. இங்ஙனம் குறுகிய காலத்தில் இப் பெரும் பணியைச் சுமார் ஒரு இலட்சம்ரூபா செலவில் நிறைவேற்ற அம்பாள் திருவருள் கைகூடியது வியக்கத்தக்கதாகும், அம்பிகை அடியார்களின் ஆதரவினாலும், அன்பளிப்பினாலும், ஒத்துழைப்பினாலும் இத் திருப்பணி நிறைவேறியது. இதற்கு வேண்டிய நிதியின் பெரும்பகுதியை நிர்வாகசபைத் தனாதிகாரியாக விளங்கிய பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் தாம் மலேசியா, சிங்கப்பூர் சென்ற சமயம் அவ்வூர் அன்பர்களிடமும் இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள அன்பர்களிடமும் பெற்றுள்ளார். அத்துடன் கொடியேற்றத் திருவிழாவிற்கு நிதி சேகரிக்கும் பொறுப்பை இணைச் செயலாளர் திரு. க. தணிகாசலம் அவர்கள் மேற்கொண்டு தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெருமுயற்சி எடுத்து, கொடியேற்ற விழாவும், ஆலயத் திருப்பணிகளும் நடைபெறுவதற்கு முன் வந்தமை பெரும் பாராட்டுக்குரியதாகும். அத்துடன் திருப்பணிக் குழுவினர்களான துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. தம்பிப்பிள்ளை பொன்னம்பலம், திரு. க. கணேசரத்தினம், திரு. ச. ஆறுமுகநாதன் ஆகியோர் மிகக்குறுகிய காலத்தில் பலராலும் போற்றுதற்குரிய வகையில் சுற்றுப் பிரகார உள் மண்டபத் திருப்பணியை நிறைவேற்றி வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**13. ஸ்ரீ பாலசுப்பிரமணியர் சந்நிதி;**

இத் திருக்கோயில் வடமேற்குப் பிரகாரத்தில் அமைக்கப்பட்டு 18–3–76 இல் கும்பாபிஷேகம் கீரிமலை சிவன்கோயில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களால் மிகவும் சிறந்த முறையில் நடாத்தப்பட்டது. இக் கோயில் அமைப்பதற்குரிய முழுச் செலவுகளையும் ஏற்றுக் கும்பாபிஷேக உபயத்தை நிறைவேற்றியவர் ஊரெழு வாசியாகிய சிவ புண்ணிய சீலர் திரு. த. தம்பிராசா அவர்களும், அவரின் பாரியார் திருமதி. த. பரிபூரணம் அவர்களுமாகும். ஸ்ரீ பாலசுப்பிரமணியர் விக்கிரகம் பல வருடங்கட்கு முன் காலம்சென்ற சட்டத்தரணி திரு. இ. கதிர்காமலிங்கம் அவர்களால் அன்னாரின் சொந்த உபயமாக இயற்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. மண்டலாபிஷேகம் ஆலயத் தர்மகர்த்தா சபை உறுப்பினர்களின் உபயமாக நடந்தேறியது.

14. ஸ்ரீ கஜலட்சுமி சந்நிதி:

இவ்வாலயக் கும்பாபிஷேகமும் 23 – 6 – 77 இல் கீரிமலைச் சிவன்கோவில் ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களால் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது. இத்திருக்கோயிலமைத் தலைத் தமது சொந்த உபயமாக நிறை வேற்றிமுடித்த மகாதனையைச் சேர்ந்த திரு. எஸ்.பாலகுமார் அவர்களை நாம் நன்றி யோடு பாராட்டுகின்றோம். அவரும் அவரு டைய பெற்றோரும் இவ்வாலயத்தோடு நெ ருங்கிய தொடர்புடையவர்கள். அவர்கள் குடும்பத்தை அம்பாள் என்றென்றும் காப் பாற்றி வைப்பாள் என்பது நம்பிக்கை. இத் திருவுருவைக் கருங்கல்லிலே சமைத்து உதவிய திரு. இ. சுப்பிரமணியம் அவர் களுக்கும் என்றும் நன்றியுடையோம்.

## மறைந்த தலைவருக்கு அஞ்சலி:

29-10-76 இல் ஆலய நிர்வாக சபை யின் தலைவராய்ப் பணிபுரிந்த திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் அம்பாள் திருவடி சேர்ந்தாரென்பதை மிக வருத்தத்துடன் நினைப்பூட்டிக் கொள்கிறோம். இவர் தமது சேவைக்காலத்தில் ஆலயத்தின் வளர்ச்சி யில் கண்ணும் கருத்துமாக இருந்து பக்தி சிரத்தையுடனும் திறமையுடனும் பல திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளார். தேவியின் ஆலயம் யாழ்ப்பாணக் குடா நாட்டில் தனித்துவமான சிறப்பைப் பெற ஆரம்பித்தது இக் காலத்திலேயே. கண்ணி யமும் ஒழுங்கும் கட்டுப்பாடும் இவர் சேவையில் மிளிர்ந்தன. இவ் வாலயத்தின் வரலாற்றில் அமரர் திரு. தெ. து. ஜயரத் தினம் அவர்களுக்கு உயர்ந்த இடம் உண்டு என்பதை எவரும் நினைப்பூட்டிக் கொள்வர்.

## இடைக்காலத் தலைவர்:

அமரர் அவர்களின் மறைவினால் ஏற் பட்ட நெருக்கடியான நிலையைச் சிலமாதங் கட்கு நிவிர்த்தி செய்தவர் திரு. நம. சிவப் பிரகாசம் அவர்கள். நிர்வாகத்தின் நற் பணிகளுக்கு அவ்வப்போது ஆலோசனை நல்கி ஊக்குவிப்பவர் இவர். அம்பாள் ஆலயத்தின் புனருத்தாரணப் பணி ஆரம்ப மான காலத்திலிருந்து இற்றைவரை நற் பணி ஆற்றிக்கொண்டு வருகின்றார் இப் பெரியார். இவர்களுடைய சேவை மேலும் பல்லாண்டு காலம் எமக்குக் கிடைக்க வேண்டுமென்று திருவருளைப் போற்று கின்றோம்.

## புதிய தலைவர்:

ஆலய நிர்வாக சபைக்குப் புதிய தலை வரை நியமிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்ட பொழுது துர்க்கா துரந்தரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நாமம்தான் எல்லோருடைய வாயிலும் இருந்து வெளி வந்தது. திரு. நம. சிவப்பிரகாசம் அவர் களும், தர்மகர்த்தா சபையினரும், நிர் வாகசபையினரும், ஊர்ப்பொதுமக்களும் இம்முடிவுக்கு ஏகமனதாக ஆதரவு தந் தனர். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 1963ஆம் ஆண்டு தொடக்கம் திருப்பணிச் சபை உறுப்பினராகவும், 1966 ஆம் ஆண்டு தொடக்கம் நிர்வாகசபைத் தனாதிகாரி யாகவும் சிறந்த பணிபுரிந்து வந்தவரென் பது குறிப்பிடத்தக்கது. 1977ஆம் ஆண்டு நிர்வாக சபையின் தலைவராகப் பணி ஏற் றதிலிருந்து தமது அரசாங்க உத்தியோகத் திலிருந்து தாமாகவே ஓய்வு பெற்றுக் கொண்டார். துர்க்கா தேவியின் முழு நேரத் தொண்டராக விளங்குகின்ற அவர் தமது சைவப் பிரசங்கங்களால் ஈழத்தின் பல பாகங்களிலும் இந்தியா, மலேசியா முதலிய நாடுகளிலும் சென்று எமது ஆலயத்திற்குப் பேராதரவு திரட்டித் தந் துள்ளார். அவர் சென்ற சென்ற இடமெல் லாம் அம்பாள் அருளைப் பற்றிப் பேசுவ தால் அந்தந்த இடங்களிலுள்ள பக்தர்க ளெல்லோரும் இங்கு வந்து வழிபாடு செய்து கோயில் திருப்பணிகளுக்கும் நிறைந்த ஆதரவு கொடுத்துச் செல்வது கண்கூடு.

## சித்திரத் தேர்த் திருப்பணி:

முன்னைநாள் தலைவர் அமரர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களின் காலத்தி லேயே சித்திரத்தேர் அமைப்பதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இத் திருப்பணியைத் திறம்பட நிறைவேற்ற மகாஜனக் கல்லூரி ஆசிரியரும், தற்பொழுது சித்திர வித்தியாதரிசியாக விளங்குபவரும் ஆகிய கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் கௌரவ ஸ்தபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சித்திரத் தேர்த் திருப்பணி ஆரம்பவிழா 20-1-77இல் நிகழ்ந்தது. அன்று தொடக்கம் இத்திருப்பணி பூர்த்தியாகும்வரை நிதி திரட்டுவதிலும், தேர் அமைப்புக்குரிய பொருட்களைத் தேடிப் பெறுவதிலும் தமது முழு உழைப்பையும் அளித்து வருகின்ற தேர்த் திருப்பணி உபகுழு உறுப்பினர்களான துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருவாளர்கள் தம்பிப்பிள்ளை பொன்னம்பலம், க. தணிகாசலம், க. கணேசரத்தினம், ச. ஆறுமுகநாதன் ஆகியோருக்கு அம்பாள் கடாட்சம் நிரம்பக் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். இத் திருப்பணிக்குழுவே தேர்முட்டித் திருப்பணியையும் முன்னின்று நடாத்துகின்றது. அம்பாள் அடியார்கள் இப்பணிகளுக்குப் பேராதரவு நல்கி, அம்பாள் சித்திரத் தேருலாவை எதிர் நோக்கிய வண்ணம் இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன், அடுத்த ஆண்டு இராசகோபுரத் திருப்பணியும் ஆரம்பிக்கப்பட்டு, எல்லாம் வல்ல தேவியின் ஆலயம் எழில்மிகு காட்சியோடு விளங்குவதற்கு அம்பாள் அருள் கூட்டுவாள் என்று போற்றி அமைகின்றோம்.

சுபம்

நிர்வாகசபை,
துர்க்காதேவி ஆலயம்,
தெல்லிப்பழை,
1-8-78.

**சு. சிவவாகீசர்**
**க. தணிகாசலம்**
**(இணைக்காரியதரிசிகள்)**

---

ஜீவாத்மா பரமாத்மா என்ற இரண்டின் சேர்க்கையானது ஒரு கடிகாரத்தில் மணிக்கொருதரம் மணியைக் காட்டும் முள்ளும் நிமிஷத்தைக் காட்டும் முள்ளும் சேர்வதை ஒக்கும், அவைகள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. ஒன்றன்மீது மற்றொன்று சார்ந்துமுள்ளது. சாதாரணமாக அவை தனித்திருப்பினும் தகுதியான சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போதெல்லாம் ஒன்றுசேரும்.

※ ※ ※

பூனையானது தனது குட்டிகளைப் பற்களால் பிடிக்கும்போது அக் குட்டிகளுக்குத் தீங்குண்டாவதில்லை. ஆனால் அது ஓர் எலியை அப்படிப் பிடிக்குமானால் அவ் வெலி உடனே இறக்கின்றது. இதைப் போலவே மாயையானது மற்றவர்களை வருத்துவதாயினும் பக்தனை ஒருபோதும் துன்புறுத்தாது.

— **ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2,35.3
TEL
AR

# வரலாற்றில் சக்தி வழிபாடு

மொஹெஞ்சதாரோ ஹரப்பா ஆதிய புராதன தொல்பொருள் பிரதேச ஆராய்ச்சிகளிலிருந்து சக்தி வழிபாடு ஆதிகாலத்தைச் சார்ந்ததென்பது புலனுகிறது. இதே காலத்தில் மெசொப்பொத்தேமியா, எகிப்து, கிரேக்கநாடு ஆதிய பிரதேசங்களிலும் இதேபோன்று பூமாதேவியை வழிபட்டனர் என்பதும் வெளிப்படையாகிறது. சங்ககாலத்தில் ஆதித்தமிழர் வழிபட்ட காடுகிழாள் என்னுந் தெய்வத்தின் உருவ இலக்கணங்களும் காளி துர்க்கை ஆதிய தெய்வங்களின் அம்சங்களும் ஒரே தன்மைத்தாகக் காணப்பட்டன. பூமாதேவியினதும் அன்னையினதும் அம்சங்களிலும் கட்டுண்ட மக்கள் இயற்கையைத் தொழுதேத்தினர். இவ்வழிபாடு விருத்தியடைந்து, ஒரு சமய அடிப்படையில் சக்தி வழிபாடாய்ப் பர்ணமித்தது.

பண்டைத் தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்தில் வீரவணக்கத்துக்கான நடுகற்கள்கொண்ட கோயில்கள் இருந்தன போன்று முருகன், திருமால், காடுகிழாள், துர்க்கை முதலிய தெய்வங்கட்குக் கோயில்கள் இருந்தனவென்று உய்த்து உணரப்பட்டுள்ளது. மறையவர்களது வைதீக சமயமும் தமிழ் சைவசமயத்தோடு கலக்கவே உருத்திர வணக்கம் சிவ வணக்கத்தோடு சேர்ந்தது. வேத வேள்வியில்லாத ஆதிசிவன் வடதேசத்தவர் கலப்பால் வேள்விக்குரிய மகா தேவனுகவும், தமிழ் முருகன் சுப்பிரமணியன் ஆகவும், தமிழ் கொற்றவை துர்க்கையாகவும் மாறின. இம்மாறுதல் தமிழகத்தில் கி. பி. முதல் ஆறு நூற்றுண்டுகளில் நிகழ்ந்தது. கொற்றவை என்னுந் தெய்வத்தை தமிழ வீரர் வணங்கினர். வெற்றிக்குத் தாயாக கொற்றவை பெயர் பெற்றுள்.

சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை

எனச் சிலப்பதிகாரம் கூறும். கொற்றவையின் கோயில் தமிழ்நாட்டுப் பாலைவனங்களிலும் மலைகளிலும் பொலிந்து விளங்கிற்று. வீரத்தைப் பெண்ணுக உருவகப்படுத்தி வழிபட்டபெருமை ஆதித்தமிழருக்குரியது. தமிழகத்தின் ஆதி சக்தியாகத் திகழ்ந்தவள் கொற்றவை. தமிழகத்தில் படைவீடு கொண்டருளும் வீரமுருகனைப் பெற்றவள் என்பதை,

'வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவன்'

என்று திருமுருகாற்றுப்படை கூறும்.

இவ்வகையான பல்வேறு கொள்கைகள் இடம்பெற்று சக்திவழிபாட்டில் கலப்பு ஏற்பட ஏதுவாயிற்று. இந்நிலையில் ஆதிசங்கரர் தோற்றி அத்துவிதம், வேதாந்தம், சைவம், வைணவம் ஆதிய வற்றை வகைப்படுத்தி தீவிரமான விருத்திக்கு வழிகோலினர். வேதங்கள், உபநிடதங்கள் ஆதியவற்றிற்கு உரை வகுத்ததோடு அதற்கு அப்பாலுள்ள சக்தியின் மகத்துவத்தைப் பூரணமாகக் கூறுவது இலகுவன்று என்று உரைத்தனர். ஆதிசங்கராச்சாரியார் சக்தி வழிபாட்டினருக்கு உவந்தளித்த மகத்துவம் வாய்ந்த தோத்திரம் சௌந்தரிய லஹரியாகும்.

### தேவி உபாசனை :

தேவி வழிபாட்டின் மகிமையைச் சௌந்தரியலகரியில் ஆதிசங்கரர் பாடியுள்ளார். ஸ்ரீ சூக்தமும் தேவி மகிமையைப் புகழ்ந்துரைத்தது. இத் தோத்திரத்தில் வரும் நாமங்கள் பின்வருமாறு:

ஹரண்யவர்ணு — பொன்நிறத்தவள்
ஹரிணி — மான்வடிவினள்
சந்திரா — சந்திரனைப்போன்றவள்
ஆர்த்திரா — தண்ணீரில் தோன்றியவள்
பத்மேஸ்திதா — தாமரையில் இருப்பவள்
ஆதித்தியவர்ணு— சூரிய ஒளியுள்ளவள்

135981
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ஷிணி — பசுச்செல்வமுடையவள்
ஈஸ்வரி — எல்லா உயிரிலும் உறைபவள்
புஷ்கரிணி — யானையால் வழங்கப் பட்டவள்
பிங்களா — செந்நிறத்தவள்
லக்ஷ்மி — கடலில் பிறந்தவள்
(ஆர்த்திராம் ஸ்ரீ சூக்தத்திலிருந்து)

ஆதிசங்கரரின் தத்துவங்களைத் தழுவி பராசக்திக்கு அந்தாதி பாடினர், சக்தி உபாசகர் அபிராமிபட்டர், பராசக்தி வேதவடிவினள் என்றும், செறிந்த கிளைகள் தண்ணிழல் கொடுத்தலோடு வேத உப நிடத கோலமாகப் பராசக்தி விளங்குவர் என்றும் எடுத்துரைத்தார் ஆதிசங்கரர். இக்கருத்தை தேவிஉபாசகரான அபிராம பட்டர்,

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற
தாயும் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட
வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென்
பாசாங் குசமுங்கையில்
அணையுந் திரிபுர சுந்தரி
யாவ தறிந்தனமே,

என்று விதந்தேத்தினர்.

நீருங் குளிர்ச்சியும் போலவும், அக்கினியும் சூடும்போலவும் சிவத்தோடு பிரித்தலின்றி நிற்பது சத்தியாகும்.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்

என்று உமாபதி சிவாச்சாரியார் பாடியருளினர். சத்திதான் உலகுக்கு மூலகாரணமாகவுள்ளது. சிவபிரானுக்குச் சத்தியாக விளங்குவது திருவருளாகும். சத்தியில்லாவிடில் சிவமில்லை.

அருளது சத்தியாகும்
அரன்தனக்கு அருளையின்றித்
தெருள்சிவம் இல்லைஅந்தச்
சிவம்இன்றி சக்திஇல்லை

என்று சிவஞான சித்தியாரில் தெளிவாகக் கூறியுள்ளார். பின்னரும் பராசக்தி, இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியாசக்தியென வேறுபடும். இன்னும் கிரியாசக்தி, ஆரணி, செந்தீ, இரெத்தினி, ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமைமூர்த்தி என எட்டாக நிற்கும். நிலைக்கேற்ப உமா வெவ்வேறு தோற்றங்களைக் கொள்வர். பூரணி, பராசக்தி, ராஜராஜேஸ்வரி என அழைப்பர். பிராம்மணி, வைஷ்ணவி, ருத்ராணி என்றுங் கூறுவர். சிவனுக்குச் சமமாகும் போது துர்க்கை என அழைப்பர். கால சொரூபிணியாகக் கருதப்படும்போது அவள் காளியாகின்றுள். வித்தையின் வடிவெடுக்கும்போது சரஸ்வதி என்றும், ஞாலத்தை ஆதரிக்கும்போது மகாதேவியாய், பலதாரணியாகக் கொள்ளப்படுகின்றுர் எனவும் சக்தி தத்துவம்பற்றி ஆராய்ந்து எழுதியபோது சுவாமி சித்பவானந்தர் குறிப்பிட்டுள்ளார். சிவன், சக்தி, நாதம், விந்து ஆதியன அருவமாகும். சதாசிவம் ரூபாரூபமாகும். ஈசன், உருத்திரன், திருமால், அயன் ஆதியன உருவங்களாகும். இத் திருவுருவங்களைத் தாங்கிச் சிவபிரான் நாடகம் நடிப்பர். சிவன் சத்தனுகில் சிவை சத்தியாவாள். சதாசிவனுகில் மனோன்மணியாவாள். மகேசுவரனுகில் மகேசுவரியாவாள். உருத்திரனுல் உமையாவாள். திருமாலானுல் இலக்குமியாவாள். பிரமாவானுல் சரசுவதியாவாள். இக்கருத்தை 'எத்திறம் நின்றுன் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்' என்று சிவஞானசித்தியார் எடுத்துரைக்கும் சிவமும் சக்தியும் சகல புவனங்களையும் படைத்தபோதும் சிவன் பிரமசரியே சக்தி கன்னியே என்ற கோட்பாட்டுக்கு அமைய அகிலாண்ட கோடியீன்ற வன்னையே பின்னையுங் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூபமயிலே என்று தாயுமான சுவாமிகள் பாடியுள்ளார்.

**சிவசக்தி மூர்த்தங்களை** நான்காக வகுப்பர். கோபகாரியத்துக்குக் காளியும், யுத்தகாரியத்துக்குத் துர்க்கையும், புருஷரூபகாரியத்துக்கு விஷ்ணுவும், சம்போக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியத்துக்கு உமையும் சிவசத்தியாகக் கொள்ளப்படும்.

ஒரு நாமம் ஓருருவமொன்றுமிலார்க்கு ஆயிரந்திருநாமம் என்ற மணிவாசகத்துக்கு அமைய சமய சமரச சன்மார்க்கங்கண்ட தாயுமான சுவாமிகள் அன்னை அருளில் திழைத்து பலநாமங்கொண்டு,

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றி ருக்கும்
நாரணி மனோதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தி யென்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்ச ரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி யெனப்புகழ்
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையும்கன்னியெனமறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைசூழ்
வளமருவு தேவை யரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

என்று விதந்தேத்தியுள்ளார்.

இவ்வண்ணம் விதந்தோதப்பட்ட அம்பிகையைக் கச்சியப்பசிவாசாரியர் செந்தமிழ் காப்பியமாகிய கந்தபுராணத்து கடவுள் வாழ்த்துப் பாவில்,

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

என்ற பாடலை நினைந்து வணங்குவோமாக.

**சத்தியின் திருவுருவ இலக்கணம்:**

சிவபிரானது துணையாய கௌரி, பார்வதி, உமா என வழங்குந் தெய்வம் பற்றிய குறிப்புகளை மானசார காசியப்ப ஆதிய சிற்பசாஸ்திர நூல்கள் கூறுகின்றன. சிவனுடன் சேர்ந்து காணப்படில் இரு கரங்களுடனும், தனித்து அமைகில் நான்கு கரங்களுடனும் சிற்சக்தி பொலிந்து விளங்கும். முற்கூறிய அம்சத்தில் தாமரை மலராசனத்தில் வீற்றிருக்கும் அல்லது நிற்கும் பாவனையிலமைந்து ஒரு கரம் தாமரை மலரையும் மற்றக்கரம் தொங்குந் நிலையிலுங் காணப்படும். சிவலிங்கத்தோடு சேர்ந்தமைகில் முழு அலங்காரத்துடன் மேற்கரங்கள் தாமரை மலர்களையும், கீழ்க்கரங்கள் அபயவரத முத்திரைகளையும் காட்டிப் பொலிவதைக் காணலாம். சிரத்தில் கிரீட மகுடம் அல்லது கரண்ட மகுடம் காணப்படும். கௌரி என எழுந்தருளும்போது கன்னிகையாய்க் காட்சி கொள்ளும். சிற்சில வேளைகளில் சிவனை நினைந்து தவக்கோலம் புரியும் நிலையிலுந் தாபிக்கப்படுகின்றன. சக்தியாகக் கொள்ளப்படுந் தெய்வங்களைச் சப்தமாதாக்களாகிய பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மகேந்திரி, சாமுண்டி என அழைப்பர். சப்தமாதாக்களின் உருவங்கள் ஒரே தொகுதியில் சட்டங்களில் சித்தரிக்கப்பட்டுத் தமிழகத்தில் கிராமப் பகுதிகளில் சைவாலயங்களில் காணப்படுகின்றன.

துர்க்கை, சாமுண்டி, மகிடாசுரமர்த்தனி ஆதியவை பார்வதியின் அம்சங்களெனினும், வைஷ்ணவ சின்னங்களாகிய சங்கு சக்கரங்கள் கொண்டு பொலிந்து விளங்கும். தேவகிக்கு குழந்தையாக அவதரித்த பாலகிருஷ்ணரைக் காப்பதற்காகவே, துர்க்கை யசோதைக்குப் புத்திரியாகத் தோன்றினள் என்று புராணங்கள் இயம்புகின்றன. தெய்வ அனுக்கிரகத்தாலே குழந்தைகள் மாறப்பட்டன. சகோதரியான தேவகியின் குழந்தைகளைக் கொல்லத்துணிந்து நின்ற ஹம்சன், தேவகி கொண்ட பெண்குழந்தையை வீசியெறிந்தான். துர்க்கையாக அவதரித்த அப்பெண் குழந்தை ஆகாயத்தில்தோன்றி ஹம்சனைப் பழித்துச் சென்றனள். இச்சம்பவத்தாலே வாசுதேவ கிருஷ்ணனெனத் துர்க்கையை அழைப்பர். பதினெட்டுக் கரங்கள் கொண்ட சண்டிகா அல்லது சாமுண்டிக்குத் திரிசூலம், சங்கு சத்திகளாகிய படைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்களைச் சிவன் அருளினர் என்று சிற்ப சாரங் கூறும். மகிடாசுரனைக் கொல்வதற் காகச் சிவன், பிரமா, விஷ்ணு ஆதிய திரி மூர்த்திகளிடமிருந்து பயங்கரச் சுவாலையை யும், மற்றுந் தேவர்களிடமிருந்து சகல அங்கங்களையும், அலங்காரங்களையும் பெற் றனள் என்று மார்க்கண்டேய புராணங் கூறும். சாமுண்டி 8, 10, 12 அல்லது 16 கரங்களுடன் தோற்றங் கொண்டார். காளி அல்லது பத்திரகாளி என வழங்கப் பட்டபோது சாமுண்டி 8 கரங்களுடன் அமைந்து பயங்கர கோலத்துடன், பிர மாண்ட உடலமைப்பும், பற்கள் வெளியே காணப்பட மண்டையோடுகளின் மாலை யுடன் இவ்வுருவம் சித்தரிக்கப்படுகிறது. அதோடு சிங்கவாகனத்தில் மேல் அமைந்து மகிடாசுரனைப் பாதத்தால் உதைத்த கோலத்தில் அமைக்கப்படுகின்றது. பகை வர்களை வெல்லுந் நோக்கத்துடன் இருப் போர்கள் இவ்வகையான சண்டிகா தேவியை வழிபடுகின்றனர்.

மைசூரில் அரசாண்ட வமிசத்தினர் சாமுண்டா–சண்டிகா தேவியைக் குல தெய்வமாகக் கொண்டனர். சைவசக்தி களில் 16 கரங்கள் கொண்ட துர்க்கையை மகாலக்குமி என அழைப்பர். தமிழகத்து சைவாலயங்களில் மகிடாசுரமர்த்தனி உருவங்கள் பல்வேறு நிலைகளில் மிகுந்த அலங்கார வேலைப்பாடுடன் திகழ்கின்றன. மகிடாசுரனைக் கொல்லும்பாவனையிலிருந்து இவ்வுருவங்கள் சாமுண்டி, துர்க்கை, மகி டாசுரமர்த்தனி, மகாலக்குமி என்று ஒன்றி லிருந்து ஒன்றைப் பேதப்படுத்துவது அரிது. மார்புக் கவசத்தோடு நிமிர்ந்து மகிடத் தின் தலைமேல் நிற்கும் உருவங்கள் துர்க்கா தேவியின் உருவம் எனப்படுகிறது. போர்க்கோலப் புனைவைக் காட்டும் உரு வங்கள் சாமுண்டி, மகிடாசுரமர்த்தனி, மகாலக்குமி ஆதிய தெய்வங்களைக் குறிக் கும் என்று சொல்லப்படுகிறது. இத் திரு வுருவங்கள் எட்டுக் கரங்கள் கொண்டு, இக்கரங்களில் சங்கு, சக்கரம், வில், கேடயம், வாள், மணி, பாசம், திரிசூலம் முதலிய குறிப்பொருள்கள் பொலிந்து விளங்குகின்றன. துர்க்கைக்கும் மகிடாசுர னுக்குமிடையே நிகழ்ந்தபோரை மகாவலி புரத்தில் கற்பாறையில் மகிடாசுரமண்ட பத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு சிற்பக் காட்சி நன்கு விளக்குகிறது. சிங்க வாக னத்தின் மீது வீற்றிருந்து இரு கரங்களில் அம்பு, வில் கொண்டு, மற்றைய கரங்களில் சக்கரம், மணி, கதாயுதம் முதலிய வலது புறத்திலும், சங்கு, பாசம், அம்பறுத்தூணி முதலிய இடது புறத்திலும் காணப்படு கின்றன. இச் சிற்பக் காட்சியில் திழைத்த மேல்நாட்டுக் கலைவிற்பன்னர் டாக்டர் வோகெல் என்பார் மிக நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார்.

யந்திரம், தந்திரம் முதலிய நூல்களில் இன்னும் பல்வேறு தோற்றமுடைய சக்தி கள் கூறப்படுகின்றன. இவற்றிற்கு மாரு கப் பல்வேறு பயங்கரத் தோற்றமுடைய சக்திகள் குறிப்பிடப்படுகின்றன. இவற் றில் மிக முக்கியமாகச் சொல்லப்படுவது ஆயிரம் சூரியர்களுடைய ஒளியைக் கொண்ட திரிபுரசுந்தரியாகும். இத் தெய் வத்துக்கு அடுத்ததாகச் சொல்லப்படுவது சென்னிறங்கொண்ட சௌபாக்கிய புவ னேஸ்வரியாகும். சிரத்தில் வைரங்கள் பதித்த முடியும், ஒரு கரத்தில் இரத்தினக் கற்கள் கொண்ட கலசமும், மற்றக் கரத் தில் சென்னிறத் தாமரை மலருங் கொண்டு பொலிவதாகக் கூறப்படுகிறது. அதோடு இத்திருவுருவத்தின் வலது பாதம் இரத்தி னக் குவியலில் புதைந்ததுபோன்ற காட்சி அளிக்கவும் அமைந்திருக்கும். இத்தொகுதி யில் இன்னும் சிறப்பாக எடுத்துக் கூறத் தக்க சக்தி அன்னபூரணி எனலாம். இவ் வுருவம் 2 அல்லது 4 கரங்கள் கொண் டமையும். இருகரத்தோடு அமைகில் ஒன் றில் அன்னங்கொண்ட பொற் கலசமும், மற்றக்கரத்தில் உணவை எடுக்கக் கரண்டி யும் தாங்கும். நான்கு கரங்கள் கொண் டால் இருகரங்கள் பாசமும் கொழுக்கியுந் தாங்கிநிற்கும். காலை, மத்தியானம், மாலை ஆதிய முக்காலத்திலும், பிராமணர்கள் ஓதும் வேதங்களுக்குத் தலைமை தாங்குங் காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி முதலாஞ் சக்திகள் பற்றி வேதங்கள் இயம்புகின்றன. இன்னும் சாந்தமும் அழகும் மிக்க தெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கள் லலிதா, திரிபுரசுந்தரி, இராஜ ராஜேஸ்வரி முதலானவையும் மக்களால் போற்றப்படுகின்றன. இவை நான்கு கரங்களில் பாசம், சங்கு, கரும்பு வில், தாமரை மொட்டு ஆதியவற்றைத் தாங்கு கின்றன. இச் சக்திகளைச் சக்கரம் யந்திரம் முதலிய மூலமே வழிபடுவர். இன்றேல் யந்திரம் சக்கரம் முதலிய தாபித்து அதன் மூலமே வழிபாடியற்றுவர். ஆயிரத்துக்கு மேற்பட்ட நாமங்களை உச்சரித்துக் குங்கு மந் தூவி அர்ச்சித்து வணங்குவர். இயந் திரங்கள் அல்லது சக்கரங்களின் மேலேயே இத் தெய்வங்கள் வதிகிறதென்று எண்ணப் பட்டமையின் இத் தெய்வங்களின் பாதத் துக்கே வணக்கஞ் செலுத்தப்பட்டது. காஞ்சீபுரத்தில்கோயில்கொண்டருளியிருக் கும் காமாட்சி அம்மன் ஆலயத்தில் தெய்வத் துக்கு முன்பாகவே யந்திரம் தாபிக்கப் பட்டிருக்கிறது. இயந்திரங்கள் மறை பொருளை உணர்த்துவதோடு அக்காலக் கலை வளர்ச்சியையும் புலப்படுத்துகின்றன. இயந்திரங்கள் உருக்கணக்கியல் சித்திரங் கள் போன்றவை. மத்தியில் ஒரு புள்ளியும், இதனைச்சுற்றி முக்கோணமும், அறுகோ ணமும், வட்டவடிவும், எட்டிதழ் தாமரை மலரும், ஒருசதுரம் பின்னொரு சதுரமுமென பல உருவங்கள் அமைந்திருக்கும். இப் படியே பல்வேறு விசித்திரமான யந்திரங் களும், சக்கரங்களும் காணப்பட்டன. இவையெல்லாம் புராதன மக்களின் வழி பாடு முறைகளைத் தெரிவிக்கின்றன. அதோடு கலைவிருத்தியும் புலனாகிறது.

## ஈழத்தில் துர்க்கை அம்மன் வழிபாடு :

ஈழத்து ஐம்பெரும் ஈஸ்வரங்கள் காலத்தால் மிக முற்பட்டவை. ஈழத்தில் பௌத்த சகாப்தத்துக்கு முன்னும் பின் னும் சிவவழிபாடு உன்னதமான நிலையில் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு. சாதா ரண சமயக் கொள்கைகளோடு இந்து மதத்தையும் மக்கள் அனுட்டித்தனர் என்பது வெளிப்படை. ஈழத்துச் சரித்திர காரியமாகிய மகாவம்சத்தை உற்று நோக்குவோமாயின், ஆதிகால வழிபாடு கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின் றன. பண்டை அனுராதபுரத்தில் பாண்டு கபாயன் (கி. மு. 437) என்னும் அரசன் சிவிகசாலைகளையும் சோதிசாலைகளையும் கட்டுவித்தான் என்றும் இக்காரியம் கூறும். இச்சாலைகள் சிவலிங்கம் பிரதிஷ்டை பண் ணப்பட்ட கோயில்கள் என்று கூறில் பொருந்தும். சிவன், மகாசிவன் சிவகூட என்ற கடவுளரை மக்கள் வழிபட்டனர் என்று இக்காவியம் தொடர்ந்து குறிப் பிடும். அனுராதபுரத்தைத் தொடர்ந்து சோழர் காலத்தில் அரசிருக்கையாய் விளங் கிய பொலநறுவை பிற்கால யுத்தங்களி னால் சிதைவெய்தியது. இந்நகரத்தின் இடி பாடுகளிலுள்ள சிவாலயங்களும், கல் வெட்டுத் தூண்களும், சைவமும் தமிழும் அக்காலத்திலிருந்த உன்னத நிலையைப் புலப்படுத்துகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டு முற்பகுதியில் நடாத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது சைவ சமயத் தெய்வத் தொகுதியைச் சேர்ந்த சிவன் பார்வதி நடராஜர் ஆதிய விக்கிரகங்கள் அழகிலும் உள்ளத்திலும் தமிழகத்து தஞ்சை விக்கிரகங்களை ஒத்திருக்கின்றன. இவை கலைச்செல்வமாகக் கொள்ளப்படு கின்றன. இவற்றோடு கல்லில் சிவலிங்கம், நந்தி, துர்க்கை ஆதிய திருவுருவங்கள் ஒப்புயர்வற்றவையாகக் கொள்ளப்பட் டன. மகிடாசுரமர்த்தனி கோலத்தில் அமைந்த துர்க்கையின் அழகில் திழைத்த அக்கால ஆராய்ச்சியாளர், பாதுகாப்பு நோக்கி இத்திருவுருவத்தைப் பொலநறுவை யிலிருந்து பெயர்த்து கொழும்புப் பொருட் காட்சிச்சாலைக்குக் கொண்டுசென்று சிறப்புப் பகுதியில் காட்சிக்கு வைத்துள்ளார்கள்.

அவிசாவலைப்பகுதியில் சீதாகங்கைக்கு அண்மையாக அமைந்த நகரைச் சீதா வாக்கை என அழைப்பர். சீதாவாக்கைப் பிரதேசத்தில் பேராண்டி கோயில் எனப் படும் இந்து ஆலயச் சிதைவுகள் ஒரு தனி நலம் வாய்ந்ததாகத் திகழ்கின்றன. சீதா வாக்கை நகரில் வணங்காமுடி மன்னனாக மாயாதுன்னை என்ற சிங்கள அரசர் தனி அரசு செலுத்தினார். இம்மன்னனுக்குப் போர்த்திறம் பூண்ட இராசசிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் புதல்வன் இருந்தான். பலதுறைகளிலும் தோல்வி காணுத இராசசிங்கன் இறுமாப்புக்கொண்டு இராச்சியத்தின்மீது எழுந்த மோகத்தினுல் தந்தையைக் கொன்ருன். அரச பாரத்தை எடுத்து நடத்தினுனெனினும், பிரமஹத்திதோஷம் பிடித்து வாட்டவே இந்துமதக் குருமாரை அணுகி விமோசனத்துக்கு வழிதேடினுன். விமோசனம் பெற்றபின்னர், பிராமணக் குருமார்களின் வேண்டுகோளுக்கிணங்க சீதாவாக்கையில் இந்து ஆலயத்தைக் கட்டுவித்தான் என்று மகாவம்சம் கூறும். இவ்வாலயம் காளி வழிபாட்டுக்கு அமைந்தது. பெரும்பான்மையாய் விளங்கிய சிவத்தொண்டர்கள், அதாவது ஆண்டிகளின் வேண்டுகோளுக்கு இணங்கப்பட்டமையின் இவ்வாலயம் பேராண்டி கோயில் என்று வழங்கப்படுகிறது. 16ஆம் நூற்ருண்டில் இலங்கையில் கோயில்கட்டடக்கலை எப்படியிருந்ததென்று அறியவேண்டுமானுல் சீதாவாக்கை பேராண்டி கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இவ்வாலயம் விஜயநகர்ச் சிற்பக் கலைப் பாணியைப் புலப்படுத்துகிறதென எச். டபிள்யு. கொட்றிங்றன் என்னும் ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டனர்.

கி. பி. 1475இல் சிங்கைப் பரராசசேகரன் அரசானபோது, யாழ்ப்பாணத்து ராஜதானிக்குத் தலைநகராய் விளங்கிய நல்லூரை அணிபெறச் செய்தான். நகரத்தின் நான்கு திசையிலும் நான்கு கோயில்களைக் கட்டுவித்தான். இவை சட்டநாதர் சிவன்கோயில், வெயிலுகந்தப்பிள்ளையார் கோயில், வீரமாகாளி அம்மன் கோயில், கைலாசநாதர்கோயில் என்பனவாகும். 1560 இல் சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போருக்குப் புறப்படு முன் வீரமாகாளியைத் தொழுது பின்னர் பெரு யுத்தத்தின்பின் போர்த்துக்கேயரை வென்றடக்கினன் என்று சரித்திரங் கூறும்.

ஈழத்தில் துர்க்கைஅம்மனுக்குப் பல கோயில்கள் காணப்படாவிட்டாலும் இந்தப் பாரம்பரியத்தில் தோற்றங் கொண்ட — தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் — உன்னதமாக விளங்குவது மிகப் பொருத்தமானதே!

**ம. பொ. செல்வரத்தினம்**
(தொல்பொருள்துறை
பிரதேச அதிகாரி,
யாழ்ப்பாணம்)

கண்ணுதலா லயம்நோக்கும் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணெருபா கனைப்பணியும் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள்
பண்ணவன்தன் சீர்பாடும் நன்னுவே நன்னு
பரன்சரிதை கேட்கின்ற செவிகளே செவிகள்
அண்ணல்பொலன் கழல்நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீழ் அடிமைபுகு மடிமையே அடிமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிற் கலைகள்

## 1. முன்னுரை :

தமிழருடைய வரலாற்றை நோக்குமிடத்து, அவர்கள் வாழ்விலே கோயில் ஒரு முக்கிய இடம் வகித்து வந்திருப்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. இக் கோயில்கள் அவர்களுக்கு ஆன்மீக பலத்தினையும் தெய்வீக உணர்வினையும் ஊட்டுவனவாக மட்டுமன்றி அவர்கள் பண்பாட்டினைப் புலப்படுத்துவதுடன் அதனைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்களாகவும் அமைந்துள்ளன. சிற்பம். ஓவியம், கட்டிடம் ஆகிய கலைகளின் பயனாகவும், இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகளை வளர்ப்பனவாகவும் கோயில்கள் திகழ்ந்தன. கோயில்கள் வளர்த்த கலைகளையே இங்கு "கோயிற் கலைகள்" என்னுந் தொடர் மூலமாகக் குறிப்பிடுகிறோம்.

தமிழ் நாட்டில் எவ்வாறு கோயில்கள் தமிழர் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்புடையனவாக ஆயிற்றோ, அதே போன்று, ஈழநாட்டிலும் கோயில்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. சோழப் பெருமன்னர் காலத்திலே கங்காநதியும் கடாரமும் மாத்திரமன்றி, ஈழநாடு உட்படப் பல நாடுகள் அப்பெருமன்னர்களின் பேரரசிற்குட்படலாயின. சோழர் ஈழநாட்டினை வெற்றிகொண்டபொழுது, நாட்டின் தலைநகரம் அனுராதபுரத்திலிருந்து பொலநறுவைக்கு மாற்றப்பட்டு அது 'ஜநநாதமங்கலம்' எனப் பெயர்பெறலாயிற்று. தென்னகத்திலே 'பெரிய கோயில்' உட்படப் பல கோயில்களைக் கட்டிப் புகழடைந்த சோழப் பெருமன்னனாகிய முதலாம் இராஜராஜன் பொலநறுவையிலும் அழகிய சிறிய சிவாலயம் ஒன்றினைக் கட்டினான் என வரலாறு கூறுகின்றது.[1] மாதோட்டம் என இன்று அழைக்கப்படும் மகாதித்தத்தில் சோழப்பேரரசின் அதிகாரிகளுள் ஒருவனாகிய தாழிகுமரன் என்பவனால் இன்னொரு கோயில் கட்டப்பட்டதென அறிகிறோம்.[2] தென்னகத்துக் கோயில்கள் பெற்றிருந்த சிறப்புநிலைபற்றி வரலாற்றறிஞர் நீலகண்டசாஸ்திரியார் குறிப்பிடும் கூற்றுக்கள் சிலவற்றைப் பலரும் உதாரணங்களாக எடுத்தாளுவதுண்டு. அத்தகைய கூற்றுக்களுள் ஒன்று :

> "As landholder, employer, and consumer of goods and services, as bank, school and museum, as hospital and theatre, in short, as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma, the mediaeval Indian temple has few parallels in the animals of mankind."[3]

சோழர்காலத்துத் தென்னகத்துக் கோயில்கள் பற்றி இவ்வரலாற்றுப் பேரறிஞர் கூறிய இக்கூற்று அக்காலத்து ஈழத்துக் கோயில்களுக்கும் பொருந்துவதாக அமைந்திருக்கலாம். ஆனால், பிற்காலத்திலே ஈழத்துக் கோயில்கள் நெருங்கிய சமூகத் தொடர்பு கொண்ட நிலையை இதே அடிப்படையிலே விளக்க முடியாது. அதற்கு வேறு பல காரணங்களைக் கூறலாம். சோழர்காலக் கோயில்கள் பண்பாட்டினை வளர்க்கும் இடங்களாக அமைய, ஈழத்துப் பிற்காலத் தமிழர் கோயில்கள் பண்பாட்டைப் பாதுகாக்கும் இடங்களாக அமைய வேண்டிய நிலை ஏற்பட்டது. போர்த்துக்கேயருடைய வருகையுடன் ஈழத்துத் தமிழர் கோயில்களுக்குப் பேராபத்து நிகழ்ந்தது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற பிரபலமான சைவக்கோயில்கள் தகர்க்கப்பட்டுக் கோட்டைகள் கட்டப்பட்டன. திரு. க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளை தனது நூலாகிய **யாழ்ப்பாண வைபவ கௌமுதியில்** இப் பண்பாட்டுச் சூறையாடல் பற்றிப் பல இடங்களிலே குறிப்பிட்டுள்ளார்.

> ''மன்னார்க் கோட்டைக்குத் திருக் கேதீச்சுரத்தினின்று கல்லெடுத்துக் கொண்டு வரப்பட்டது. அக்காலம் அக்கோயில் சீரணமடைந்து கிடந்தது.''[4]

> ''**சைவ ஆலயங்கள்:** சமய அனுவலிற் பறங்கியர் யாழ்ப்பாணத்தாரைத் துன்புறுத்தாவிடினும் நம்மவரின் மனதைத் திடீரெனப் புண்படச்செய்த வேறொரு கருமத்தை இழைத்துவிட்டார்கள். அது யாதெனில், இந்நாட்டில் ஆங்காங்கு விளங்கிய சைவசமய ஆலயங்களை ஒன்றும் விடாது இடிப்பித்தமையாம். ஒலிவேறு யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமான 500 சைவ ஆலயங்களை இடிப்பித்தானென்றதை அவனுக்கோர் புகழ்ச்செய்தியாகப் பறங்கியர் எழுதிவைத்திருக்கின்றனர்'' [5]

இவ்வாறு போர்த்துக்கேயர் காலந் தொடக்கமாகச் சைவக்கோயில்களின் நிலை இக்கட்டான நிலையிலேயே இருந்தது. அழிவுறும் நிலையிலிருந்த தம் பண்பாட்டினைப் பாதுகாப்பதற்குத் தமிழ்ப் பெரியார்கள் வேறு பல உத்திகளைக் கையாண்ட போதிலும், கோயிலை நிலைக்களனாகக் கொண்டும் தம் போராட்டத்தினை நடத்தினர். அழிந்த கோயில்கள் புதுப்பிக்கப் பட்டன; புதிய கோயில்கள் கட்டப்பட்டன. ஆனால், முன்னர் கோயில்களோடு தொடர்புற்றிருந்த சில கலைகள் மறக்கப் பட்டதும் கைவிடப்பட்டதும் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

## 2. கோயில்கள் கலைவளர்க்கும் நிறுவனங்களாகிய வரலாறு:

சமண, பௌத்த போதனைகள் ஒரு காலகட்டத்திலே தமிழ் மக்கள் மனதைக் கவர்ந்தன. ஆனால், அச்சமயங்கள் போதித்த தீவிர துறவறம், பெண் வெறுப்பு, கலை வெறுப்பு ஆகியன வெகுசனத் தொடர்பற்றனவாயமைந்தன. சாதாரண பொதுமக்கள் எல்லோருமே துறவறத்தி லீடுபடமுடியாதிருந்தது. இறையனார் களவியலுரைகாரர் குறிப்பிட்டதுபோல் சாதாரண மக்கள் யாவருமே உலகியல் வாழ்வை விரும்புபவர்களாயிருந்தனர்.[6] இத்தகைய சந்தர்ப்பத்திலேயே சாதாரண பொதுமக்களோடொட்டாத போதனைகளுக்கெதிரான பக்தியியக்கம் சம்பந்தர், அப்பர் போன்றோருடைய தலைமையிலே நடைபெற்றது. தீவிர துறவறத்துக்கெதிராக, சாதாரண பொதுமக்கள் யாவருமே மனத்தில் இறைவனை நினைப்பது மட்டுமன்றிக் கோயிலிலே சென்று இறைவனை வழிபட்டாற் போதுமென்ற நிலை உருவாக்கப்பட்டது. அது மாத்திரமன்றி இறைவனே பெண்ணைப் பாகமாகக் கொண்டிருக்குங் காரணத்தாலே, தீவிர பெண் வெறுப்பு அவசியமற்றதெனச் சுட்டிக்காட்டப்பட்டது. இன்னும், இறைவனே கலைகளின் நாயகனாகவும், கோயில்கள் அத்தகைய கலைகளின் இருப்பிடமாகவும், பாடியும் ஆடியும் இறைவனை வழிபடலாமெனவும் கூறப்பட்டதாலே தமிழ் மக்கள் மத்தியிலே கோயிற் கலைகளுக்கு அளப்பிலா மதிப்பு ஏற்படவும் வாய்ப்பேற்பட்டது.

''புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே''

என்னுஞ் சம்பந்தருடைய பாடல்[7] அக்காலத்திலே கோயிலைச் சுற்றிப் பெண்கள் நடனமாடும் மரபினை விளக்கி நிற்கின்றது. இவ்வாறு இசை, நடனம் போன்ற கலைகள் முற்காலக் கோயில்கள் பேணி வளர்த்த கலைகளாக அமைந்தன. இவ்வாறு பொதுமக்களைக் கவர்கின்ற இசை, நடனம் போன்ற கலைகளைக் கவருங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் பொதுமக்களைக் கவர்ந்தது வியப்பன்று. இதனாலே சைவ, வைணவ அடியார்கள் தமிழ்நாட்டிலுள்ள தலங்களனைத்தையும் பாட முற்பட்டனர். ஈழநாட்டிலிருந்த கோணேஸ்வரம், கேதீச்சரம் ஆகியனவும் இவ்வடியார்களாலே பாடப்பெற்றன. திருக்கோணேஸ்வரத்தைச் சம்பந்தர் பாடினார்; திருக்கேதீச்சரத்தைச் சுந்தரர் பாடினார். இத் தலங்களையெல்லாம் ஈழநாட்டுக்கு வராமலே இவ்வடியார்கள் பாடியதாக வழக்குண்டு. விசா, பாஸ்போர்ட் என்ற சம்பிரதாயங்கள் இல்லாத காலத்திலே இவ்வடியார்கள் தமிழ் நாட்டுக்கு மிக அண்மையிலுள்ள ஈழநாட்டுக்கு அந்நாட்களிலே வந்துபோவது அவ்வளவு கடினமான காரியமா யிருந்திருக்காது.

"மாவின்கனி தூங்கும் பொழில்
மாதோட்ட நன்னகரில்"

என்று சுந்தரர் பாடுவது[8] நேரிலே கண்டு பாடுவதுபோலத்தானமைகின்றது. இவ்வாறு இவ்வடியார்கள் பாடுவதை நோக்குமிடத்து ஈழத்துக் கோயில்களும்,

"பண்பாட்டு நிலையங்களாகவும், இசை, நடனம், நாடகம் ஆகியவற்றைப் போன்ற நுண்கலை நிலையங்களாகவும் அமைந்திருந்தன"[9]

என்று கூறுதல் தவறாகாது. இக்கோயில்களும், சோழர்காலக் கோயில்களைப் போன்று பல நுண்கலைகளை வளர்ப்பனவாக அமைந்திருக்கலாம். ஆனால், காலஞ்செல்ல, நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட காரணங்களுக்கேற்ப, நிலைமைகள் மாறியிருக்கலாம்.

## 3. ஈழநாட்டுக் கோயில்களோடு தொடர்புடைய கலைகள் :

### 3. 1.

ஈழநாட்டிலே வாழுந் தமிழருடைய கோயில்களிலே இன்றும் பல கலைகள் பேணி வளர்க்கப்பட்டு வருகின்றன. சோழர் காலக் கோயில்களைப்போல் அவை இயங்காவிடினும், இந்நாட்டு வரலாற்று மாற்றங்களுக்கேற்றபடி ஈடுகொடுத்துச் சில கலைகளையேனும் இந்நாள்வரை அக் கோயில்கள் பாதுகாத்தும், வளர்த்தும் வருவது கண்கூடு. இப்பகுதியிலே அக்கலைகள் பற்றிய விபரம் விளக்கமாகக் கொடுக்கப்படுகின்றது.

### 3. 2. கூத்து

யாழ்ப்பாணத்திலே இன்றுஞ் சில கோயில்களிலே கூத்தாடும் வழக்கம் உண்டு. பருத்தித்துறையிலே நெல்லண்டை என்னுமிடத்திலேயுள்ள பத்திரகாளியம்மன் கோயில் முன்றிலிலே இன்றும் நேர்த்திக் கடனுக்காகக் கூத்து அல்லது நாடகம் ஆடும் வழக்கம் இருந்துவருகின்றது. சோழர் காலத்திலே கூத்து அல்லது நாடகம் கோயில்களுடன் தொடர்புடைய ஒரு கலையாக அக்காலச் சாசனங்கள் சான்று பகருகின்றன. அச் சாசனச் சான்றுதாரங்களை ஆராய்ந்த வரலாற்றாசிரியர் ஒருவருடைய கருத்து இவ்வாறமைகின்றது:

"முதலாவது, இக்கலையின் செயற்பாடு மிக நெருங்கிய முறையிலும், முழுமையாகவும் கோயில்களுடன் தொடர்புடையதாயமைந்தது. இரண்டாவது, இக் கோயில்களிலே கொண்டாடப்பட்ட விழாக் காலங்களிலேயே இவை மேடையேற்றப்பட்டன. மூன்றாவது, நாடகங்கள் பல வகைப்பட்டனவாயிருந்தன. அவற்றுட் பெரும்பாலன, ஆரியக்கூத்து, சாக்கைக்கூத்து, சாந்திக்கூத்து என்பனவற்றைச் சார்ந்தனவாகவே அமைந்தன. நான்காவது, இக்கூத்துக்களின் நடிகர்களுடைய உலகியல் தேவைகள் மானியங்களினாலே பூர்த்திசெய்யப்பட்டன. ஐந்தாவது, இந்நடிகர்கள் ஒரு குழுவாகவே செயற்பட்டனர்."[10]

ஈழநாட்டிலே கூத்துக்கள் கோயில்களுடனே தொடர்புற்றிருந்து வருகின்றன என்பதற்குச் சில அறிஞர்களுடைய கூற்றுக்களை இங்கு உதாரணங்களாகக் காட்டலாம். நாட்டுக்கூத்துப் பற்றி எழுதிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இக் கூத்துக்களெல்லாம் ஒரு கோயில் நேர்த்திக்கடனுக்காக ஆடுபவை. அதனுல், அக் கூத்தில் முக்கியமான கூத்தராக வருபவர் தத்தம் கூத்துக்கு வேண்டிய கோலங்களை அணிந்து கொண்டு மத்தளகாரர், பிற்பாட்டுக் காரர், அண்ணுவியார் ஆகியோருடன் அக்கோயிலுக்கு உள்ளே போவர். அங்கு சுவாமிக்குப் பூசை முடிந்ததும் அண்ணுவியார் தாளம் போட அக் கடவுளரின் தோத்திரமாயமைந்த பாடல்களைப் பாடி வழிபடுவர்."[11]

என்று குறிப்பிடுகிருர். இவ்வாறு கோயிலிலே வழிபாடு முடிந்தபின்னரே அண்ணுவியார் கூத்தினைத் தொடக்கிவைப்பது வழக்கம். இதன்மூலம் கூத்து ஆடுவதற்கு வேண்டிய அரங்கம் அல்லது களரி அல்லது மேடை கோயில் வீதியிலே அமைக்கப்படும் என்பது பெறப்படுகின்றது. இப்பொழுது நாட்டுக் கூத்துக்களுக்குப் பெயர்போன இடங்களுள் முக்கியமாக விளங்கும் மட்டக்களப்பிலே கூத்து "அரங்கேற்றத்துக்கான உயர்ந்த மண்மேடை பெரும்பாலும் ஊர்க்கோயில் வீதியிலமைக்கப்படும்."[12] வடமாராட்சிப் பகுதியில் நாகர்கோயில் என்னுமிடத்திலுள்ள நாகதம்பிரான் கோயிலில், அக்கோயிலோடு தொடர்புடைய வரலாற்றுக் கதையொன்றினை ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் அங்கு நடக்கும் திருவிழாவிலே கூத்தாக நடித்துக்காட்டுவது வழக்கம். கப்பற் திருவிழா என்பது அங்கு நடக்குந் திருவிழாக்களில் ஒன்று. அன்று கப்பல் ஒன்றினைக் கட்டி, பறங்கிக்காரரைப் போலக் கோலமணிந்து, பறங்கியர் அவ்வூர் இளைஞரைப் பிடித்துத் தம் கப்பலில் ஏற்றிப் பின்னர் நாகதம்பிரான் அருளால் இறக்கிவிட்ட வைபவத்தை மக்கள் முன்னிலையில் பாட்டுப்பாடி நடித்துக்காட்டுவது ஆண்டுதோறும் அக்கோயிலிலே நடக்கும் நிகழ்ச்சியாகும்.[13]

### 3. 3. நடனம்

நடனக்கலை பண்டைக்காலந்தொட்டே ஒரு கோயிற் கலையாக விளங்கி வருகின்றது. கோயிலைச்சுற்றி நடன மாதர்கள் ஆடி வழிபட்டதாகச் சம்பந்தரின் பாடலொன்றின் மூலமாக அறிவதை முன்பு குறித்துள்ளோம். இந்நடன மாதர் தம்மைக் கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு அடிமைகளாக அர்ப்பணித்து அக்கோயிலண்டையிலே வாழுவது வழக்கமாயிருந்தது. அதனுல்; இத்தகைய நடனமாதர்களைத் "தேவதாசிகள்" அல்லது "தேவரடியார்கள்" என்று அழைத்தல் வழக்கமாயிருந்தது. இம்மாதர்கள் பற்றிய பல சுவையான வரலாற்றுத் தகவல்களையும் விபரங்களையும் நீலகண்ட சாஸ்திரி போன்ற வரலாற்ருசிரியர்கள் தம் நூல்களிலே குறிப்பிட்டுள்ளனர்.[14]

ஈழநாட்டிலே, யாழ்ப்பாண மாவட்டத்தில் வண்ணூர்பண்ணைச் சிவன்கோயில், நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றிலே நடனமாதர்கள் தேவரடியார்களாக இருந்தார்களென அறிகிருேம். இன்று எந்தக் கோயில்களிலுமே காணமுடியாத இந்நிகழ்ச்சி இந்நூற்ருண்டின் தொடக்கத்திலே யாழ்ப்பாணக் கோயில்களிலே நடைமுறையிலிருந்ததாக எம். டி. ராகவன் குறிப்பிடுவர்.[15] வண்ணூர்பண்ணைச் சிவன் கோயிலில் தேவ தாசிகள் இருந்தார்களென்றும், அவர்களுட் கனகி என்பவள் முறைகேடாக நடந்த காரணத்தால் (ஆரம்பத்திலே பக்தி சிரத்தையுடன் இறைத்தொண்டாக நடனமாடிக் கோயில்களிலே வாழ்ந்த பெண்கள், காலகதியில் ஒழுக்கக்கேடுடையராஞர் என நீலகண்ட சாஸ்திரி,[16] காட்மன்[17] போன்றவர்கள் குறிப்பிடுவர்,) அக்கோயிலைச்சார்ந்த நட்டுவச் சுப்பையனுர் அவளின் ஒழுக்கக் கேடுகளைப் பரிகசித்து **கனகி புராணம்** என்னும் நூலை எழுதினுர் என அந்நூலைப் பதிப்பித்த வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் குறிப்பிடுவர்.[18]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஈழநாட்டிலே நடனக்கலை சிறு பான்மைக் கலையாக மாறியமைக்கு மேற் குறிப்பிட்ட சில தேவதாசிகளின் ஒழுக்கக் கேடே காரணமாயமைந்தது. இன்று நடனக்கலை ஒருவகையிலே வசதியுள்ள குடும்பத்திற் பிறந்தவர்களாலேயே மேற் கொள்ளப்படுகின்றது. இந்நடன அரங் கேற்றங்களும் குறிப்பிட்ட ஒரு சிலரை அழைத்து வசதியான மண்டபங்களிலேயே நடத்தப்படுகின்றன. முற்காலத்தில் கோயில்கள் இக்கலையை வளர்த்தும் பேணி யும் வருங்கால், சாதாரண பொதுமக்கள் யாவருமே இக்கலையினைக் கண்டுகளிக்கவும், இக்கலையின் நுணுக்கங்களை உணர்ந்து இரசிக்கவும் முடிந்தது. இக்கலையை மேற் கொண்டபெண்களும்அதுதேவகலையென்று மதித்தும், அழகியல்—கலை உணர்வுகொண் டும் ஆடி மகிழ்ந்தனர். இக்கலையை மேற் கொண்ட பெண்களின் ஒழுக்கக்கேடுகளால் ஈழநாட்டுக்கோயில்களிலே பெண்கள்நடன மாடுவது வெறுக்கப்பட்டது. ஆரம்பத்திலே 'சின்னமேளம்' (நாதஸ்வரத்துக்குத் துணை யாக வாசிக்கப்படும் தவில், பறை போன்ற மேளங்களைப் போலன்றி, மென்மையான ஒலி கொடுக்கும் மேளவகை இந்நடனங் களுக்கு வாசிக்கப்பட்டதால் இப் பெயர் பெற்றதுபோலும்) என்று அழைக்கப்பட்டு வந்தது இக்கலை. காலகதியில், 'சின்ன மேளம்' என்றாலே இழிவான கலையென்று கருதப்பட்டு வந்ததின் காரணம் நடனக் கலையின் குறைபாடல்ல; அதனை ஆடியவர் களின் குறைபாடேயாகும். ("The object-ion is not so much to the dancing as to the dancers themselves, for most of these wemen are reputed to be pros-titutes").[19]

### 3. 4. இசைக்கருவிக் கலை :

கோயில் வழிபாட்டிலே உபயோகிக்கப் படுங் கருவிகளுள்ளே நாதசுரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஈழநாட்டின் எல்லாக் கோயில்களிலுமே நாதசுரம் வாசிப்பது வழக்கமாயுள்ளது. சில கோயில்களிலே ஆண்டுதோறும் நடை பெறும் விழாக்களிலே வாசிப்பதெனச் சில நாதஸ்வர வித்துவான்கள் விரதம் பூண்டுள்ளமையை நாம் அறிவோம். மங்கள வாத்தியம் எனப் புகழ்கொண்ட இக்கருவி பக்தியையும் இசையையும் ஒருங்கே சேர்க்கவல்லது. ஒருநாள் முழு வதும் இறைவன் சந்நிதிதானத்திலே நாதசுரம் எவ்வாறு பயன்படுகின்றது என்று இசைப்பேரறிஞர் திரு. பி. எஸ். வீருசாமிப்பிள்ளை பின்வருமாறு கூறுவர்.

> "அனுதினமும் இரவு நான்காம் சாமத்தில் சங்கு முழங்க துயிலெழுப் பும் பணியில் நாதசுரம் சுமார் மூன்று மணி நேரம் நடைபெறுவது முறை, பூபாளம், பௌளி, புறநீர்மை, கோபிகா, வசந்தம் இராகங்களுடன் பலவிதத் துதிப்பாடல்களும் வாசிக்க நேரும். இதைத் தொடர்ந்து நடை பெறும் காலை வழிபாட்டின்போது பிலகரி, கேதாரம், ஆரபி, தன்யாசி ராகங்களில் ஆலத்தியும் பாட்டுகளும் கேட்கலாம். நடுப்பகல் வழிபாட்டுக் கும் புறப்பாட்டுக்கும் ஸ்ரீராகம், சாவேரி, மத்திமாவதி, மணிரங்கு, மோகனம் வாசிப்பது முறை. அந்தி நேரத்தில் மங்கள ஆரத்திக்கு சங் கராபரணம், கல்யாணி, நாட்டைக் குறிஞ்சி ராகங்கள் உகந்தவை. இரவில் நடைபெறும் வழிபாட்டில் காம்போஜி, தோடி, பைரவி ராகங் கள் ஒலிக்கும். இரவு நேரப் புறப் பாட்டில் வடக்குப் பிரகாரத்திலிருந்து சன்னதி வரை, ஊஞ்சல், லாலி முதலிய பாடல்களைத் தொடர்ந்து ஆண்டவன் பள்ளியறையை அடைந் ததும் நீலாம்பரியில் தாலாட்டு நடைபெறும்." [20]

இவ்வாறு ஒருநாளிலே இறைவன் வழிபாட்டிலே நாதசுரம் எவ்வித பணியைச் செய்கிறதென விளக்கும் அப்பேரறிஞர் ஆண்டவன் திருவீதி உலாவின்போது அக் கருவியின் பணிபற்றி அழகுடனும் விளக்கத்துடனும் விபரிக்கிறார். இவ்வாறு ஈழநாட்டிலுள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் எந்நாளும் நாதசுரம் வாசிக்கப்படுவதில்லை. ஆனால், திருவிழாக் காலங்களிலே ஈழத்தின் நாதசுர வித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்கள் பங்குபற்றி இந்த முறையிலே வாசிப்பதுண்டு. இவ்விடத்தில், ஆண்டவன் திருவீதி உலாவின்போது நாதசுரம் இசைக்கப்படும் முறையை இசைப்பேரறிஞர் வீருசாமிப்பிள்ளை வர்ணிப்பதில் ஒரு பகுதியைச் சுவைக்காக இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்:

''ஆண்டவன் உலாப் புறப்படுமுன் மண்டகப்படி தீபாராதனை நேரத்தில் நாதசுரத்தில் தேவாரம் ஒலிக்கும். உடனே தவில் வீறிடும்; தவிலில் அலாரிப்பு, கண்டநடையில் வாசித்தவுடன் அண்டைச் சுற்றுப்புறங்களில் உள்ளவரும் விமானத்தை ஏந்திச் செல்லும் சேவகர்களும் அலறிக் கொண்டு ஓடோடி வருவார்கள். பிரகாரங்களைச் சுற்றி வலம் வரும் போது நாட்டை ராகம் கணீரென ஒலிக்கும். சதுஸ்ர கதி அமைத்துக் கொண்டு துரித காலத்தில் மல்லாரி வாசிக்கவேண்டும்.

......தேர் புறப்படும்போது வராளி ராகத்தில் தேர் மல்லாரி வாசிக்கும் ஒரு வழக்கமுண்டு. 'ஆண்டவன் தீயகணங்களை மல்லுக்கு இழுத்துத் தீமையை அகற்றும் திருவிளையாடல்' என்று அறிஞர்கள் இதன் இலக்கணம் கூறுவதுண்டு. கண்கூடாக ஒரு நாதசுர வித்வான் மற்றொரு வித்வானுடன் மல்லாரி வாசிக்கும் போட்டியில் ஈடுபடுவதுண்டு. மூளையைக் குழப்பும் இசை நுணுக்கங்களும் இடக்கான தாளப் போக்கும் மல்லாரி வாசிப்பில் கேட்டு ரசிக மக்கள் பேரானந்தம் அடைவார்கள்.'' [21]

இவ்விபரங்களை யெல்லாம் அறிந்து கொண்டு ஈழநாட்டுப் பிரபலம் வாய்ந்த தலங்களின் திருவிழாக்களிலே நாதசுர இசைக்கருவியின் நாதத்தைக் கேட்கும் போது நாம் இரட்டிப்பு மகிழ்ச்சியடையலாம்.

உடுக்கு என்னும் இசைக்கருவி இன்று ஈழநாட்டிலே கிராமியப் பண்புவாய்ந்த இசைக்கருவியாகவே கருதப்படுகின்றது. இதுபோலவே 'பறை' எனப்படுங் கருவியுங் கருதப்படுகின்றது. இக்கருவிகள் பெரும்பாலும் அம்மன் கோயில்களிலும், வைரவர், ஐயனர் போன்ற 'சிறு' தெய்வங்களின் கோயில்களிலும் இசைப்பது வழக்கம். கிராமியப் பண்பு மலிந்த பாடல்களுக்குத் துணையாக உடுக்கு வாத்தியம் வாசிப்பதை நாம் அம்மன் கோயில்களிலே காணலாம். கரம், காவடி போன்ற கிராமிய நடனங்களுக்கும், அம்மன் கோயில்களிலே ஆடப்படும் காத்தவராயன் கூத்துக்கும் இக்கருவி துணை வாத்தியமாகின்றது. அம்மன் கோயில்களிலே பறையொலி கேட்பது பற்றிப் பேராசிரியர் வித்தியானந்தனின் கூற்றினை இங்கு காட்டுதல் பொருத்தமாகும்:

''ஈழத்திலே தமிழர் வாழும் பகுதிகளிலே வடமாகாணத்திற் பல இடங்களிற் கண்ணகி அம்மன் கோயில்கள் இருக்கின்றன. எனினும் மட்டக்களப்புப் பிரதேசத்திலோ எல்லா ஊர்களிலும் கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன. வைகாசி மாதம் பிறந்துவிட்டதென்றால் கிழக்கிலங்கையின் பட்டி தொட்டியெல்லாம் பறையொலி முழக்கமும், குழல்நய ஓசையும் உருக்கொண்டு தெய்வமாடும் ஓங்காரக் கூச்சலுமான வொரு கலகலப்பான சூழல் நிலவுவதைக் காணலாம்.'' [22]

இக்கருவிகளைவிட சங்கு, சேமக்கலம், பேரிகை, தப்பட்டை போன்ற இசைக் கருவிகளும் ஈழநாட்டுக் கோயில்களிலே பயன்படுத்தப்படுகின்றன.

## 4. முடிவுரை:

தமிழருடைய கோயில்கள் வளர்த்த கலைகள் பல. அக் கலைகளிலே பெரும்பாலானவை இன்று அருகிவிட்டன. பண்பாட்டுச் சூறையாடல், எம்மிடையே ஏற்பட்ட பல வருத்தமுறத்தக்க நம்பிக்கைகள், கொள்கைகள், ஒழுக்கங்கள் ஆகியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கலைகள் மறைந்துபோவதற்குக் காரணங்களாயின. எனினும் ஈழத்து ஒருசில கோயில்களேனும் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணுவனவாயமைந்துள்ளமை ஓரளவு ஆறுதல் நல்குகின்றது. இந்தவகையில் தெல்லிப்பழை உழுகுடைப்பதி துர்க்காதேவி ஆலயமும் தன் பணி கொண்டுள்ளது.

**கலாநிதி அ. சண்முகதாஸ்**
தமிழ்த்துறை,
யாழ்ப்பாண வளாகம்

## அடிக்குறிப்புகள்

1. Nilakanta Sastri, K. A. *The Cholas*, University of Madras, 1955, p. 173.
2. Ibid.
3. Ibid., p. 654.
4. வேலுப்பிள்ளை, க., **யாழ்ப்பாண வைபவ கௌமுதி**, *1918. ப. 54.*
5. **மேற்படி.** *ப. 82.*
6. **இறையனார் அகப்பொருள்,** *கழக வெளியீடு, 1953, ப. 10: பெண் என்னுஞ் சொற்கேட்டுத் தலையாயினரும் இடையாயினரும் நீங்க, "கடையாயினர் எத்திறத்தானும் நீங்கார்; என்னை, பல்பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று, போகந்துய்த்து வருகின்றமையின்..." என்று உரைகாரர் கூறுவர்.*
7. **திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்,** *பன்னிருதிருமுறைப் பதிப்பு வெளியீடு, 1961, பக். 225—26.*
8. **சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம்,** *பன்னிருதிருமுறைப் பதிப்பு வெளியீடு, 1958, ப. 183.*
9. Krishnamurthi, S. R., *A Study on the Cultural Developments in the Chola Period*, Annamalai University, 1966, p. 132.
10. *Ibid.*, p. 79.
11. *கணபதிப்பிள்ளை பேராசிரியர் க.,* **ஈழத்து வாழ்வும் வளமும்,** *பாரி நிலையம், 1962, ப. 83.*
12. *கந்தையா வி. சீ.,* **மட்டக்களப்புத் தமிழகம்,** *ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம், 1964, ப, 52.*
13. *கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க.,* **முன் குறிப்பிட்ட நூல்,** *ப. 31—34.*
14. Nilakanta Sastri, *Ibid.*, p. 554; Krishnamurti, S. R., *Ibid*, pp. 69—77.
15. Raghavan, M. D., *Tamil Culture in Ceylon,* Kalai Nilayam Limited, Undated, p. 264.
16. Nilakanta Sastri, *Ibid.*, p. 554 ;
17. Cartman, Rev. James, *Hinduism in Ceylon,* M. D. Gunasena & Co. Ltd., Colombo, 1957 pp. 104—5.
18. **கனகி புராணம், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கத்தின் பதிப்புரையைப் பார்க்க.**
19. Cartman, *Ibid.*, p. 104.
20. *வீருசாமிப்பிள்ளை, இசைப்பேரறிஞர் பி. எஸ்., "வழிபாட்டில் இசைக் கருவிகள்',* **தமிழிசை வெள்ளிவிழா சிறப்பு மலர்,** *தமிழ் இசைச் சங்கம், சென்னை, 1967. ப, 179.*
21. **மேற்படி;** *ப. 181,*
22. *வித்தியானந்தன், கலாநிதி சு., வி. சீ. கந்தையா பதிப்பித்த* **கண்ணகி வழக்குரை,** *(காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம், 1968) நூலுக்கு வழங்கிய அணிந்துரை, ப.* XIX.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாக்கிராசுர சங்காரமூர்த்தி

சுவேத வராக கற்பகத்திலே பிரம்ம தேவருக்கும் விட்டுணுவுக்குஞ் சண்டை நேரிட்டது. அதுகாலை மலரோன் திருமாலை நோக்கி, "நந்தகோபன் மகனே! நானே பரப்பிரமம்; என்னை வணங்குதி" என்றார். மாயவன் அது கேட்டு, "மைந்தா! நீ என் உந்திக் கமலத்தினின்றும் பிறந்தவனன்றோ? ஆகலான் நீ மகனாகின்றாய்; யான் நுமக்குத் தந்தையாகின்றேன். நும்மாலுஞ் சகல சராசரப் பொருள்களாலும் வணங்கப்படுதற்குரியோன் யானே" என்றார். பிரமதேவர் கோபித்து, "வெண்ணெய் உண்ட கள்வ! நீ எனக்குப் புத்திரன்; மருகன்; பௌத்திரன்; பிரபௌத்திரன் என்னும் உரிமையுடையை. உனது பத்துப் பிறவியல்லாத பதினைந்து பிறவிகளுட் சனகன், சனாதனன், சனந்தனன், சனற்குமாரன் என்னும் நான்கு முனிவராக என்னிடம் பிறந்தனை. நாரதனாகவும் தோன்றினை. இவற்றானே எனக்குப் புத்திரன் ஆனாய். நான் பிதாவானேன். என்னாற் படைக்கப்பட்ட பூமாதேவியாகிய மகளை நினக்கு மனைவியாகத் தந்தேன். அதனால் நீ மருகன்; நான் மாமன் என்று அறிவாயாக. எனது மகனாகிய பிருகு முனிவனுக்கு மகள் இலக்குமியன்றோ? அவளைத் தானே நின்மனைவியாகக் கொண்டாய். அதுவுமன்றி, என் குமாரனாகிய காசிபமுனிவரின் மனைவியாம் அதிதி வயிற்றினிடத்து வாமனன்ஆகப் பிறந்தாய். இவற்றானே நீ பௌத்திரனும் நான் மூதாதையுமாம். வியாசன், தத்தாத்திரேயன், கபிலன், விடபன் என்னுமிவராகப் பிறந்தது பற்றிப் பிரபௌத்திரனுமாகக் காணப்படுகின்றாய். இன்னும் நின்னைப் படைத்துப் படைத்து என் கைகளும் மனமும் சலித்தன.

"நினது உந்தியினின்றும் வெளிப்பட்டமையால் நீ பரப்பிரமமாக வணங்கப்படுதற்குரியையோ? அங்ஙனாயின் நரசிங்கமாகத் தூணினின்றும் வெளிப்பட்டனை. அது பற்றித் தூணைத் தந்தையென்பதூஉம், அதனைப் பரப்பிரமமாக வணங்குவதூம் தகுதியாமோ? அன்றியும் அதிதி வயிற்றில் வாமனனாகவும், இரேணுகை வயிற்றில் பரசுராமனாகவும், ரோகிணி வயிற்றில் பலராமனாகவும், கௌசலை வயிற்றில் தசரதராமனாகவும், தேவகி வயிற்றில் கண்ணனாகவும் பிறந்தாய். சோமயசசு என்னும் அந்தணனையும், அவன் மனைவியையும் இனிப் படைப்பேன். அவள் வயிற்றில் உன்னைக் குதிரையாகப் படைக்கச் சித்தமாயுள்ளேன். அவர்கள் நுனக்குத் தாயுந் தந்தையருமாகலால் அன்னவரெல்லாம் பரப்பிரம்மமாவரேயோ? ஆகார்! ஆகார்! அதுபோல நீ தந்தை என்பதூஉம், நின்னை வணங்கவேண்டும் என்பதூஉம் பொய்யாம்" என்றார்.

இவற்றைக் கேட்ட திருமால் வடவை போல் கொதித்தெழுந்து கோரயுத்தஞ் செய்தார். பிரம்மதேவரும் இளைக்காது அவருடன் பொருதார். திருமால் மிகவும் கோபித்து "இவனை இன்றே யழிக்கின்றோம்" என்று எழுந்து, வியாக்கிர அசுரன் என்பானை வேள்வியக்கினியினின்றும் உண்டாக்கித் தமது தவப்பலன்களை எல்லாம் கொடுத்து விடுத்தார். பிரமதேவரும் அங்ஙனேயோர் அபிசார ஓமஞ்செய்து மகிடாசுரன் என்பானை யுண்டாக்கி விடுத்தார். அவர்கள் இருவரும் நெடுநாட் பொருது பின்னர் ஒருவரோடொருவர் இணங்கிச் சீகண்டருத்திரமூர்த்தியை நினைந்து பன்னெடுங்காலம் தவம் புரிந்தார்கள். உருத்திரபகவான் தோன்றி அவர் வேண்டும் வரங்களை எல்லாங் கொடுத்தருளினார்.

அதன்பின் புலிமுகமுடையனாய், யமனும் நடுங்கத்தக்க பயங்கரமான தோற்றமுடையனாய், வரப்பலன்களால் மேற்பட்ட அவன், மகிடாசுரனை மந்திரியாக வைத்துத் திரிலோகங்களையுந் தன்னடிப்படுத்தி அரசாள்வானாயினான். தேவர், முனிவர், இந்திரன், பிரமன், விட்டுணு முதலியோரையெல்லாம் புறமுதுகிட்டோடப் பாணங்களால் அடித்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரத்தி, அவர் பதவிகளையெல்லாம் தன தாக்கி, அரசு செய்தான். பிரமதேவரையும் விட்டுணுவையும், தேவர்கள், முனிவர்கள் முதலாயினோர் இகழ்ந்தனர். அவர்களும் நாமே நமக்கு வினை தேடினோம் என நொந்தனர். ''அன்னவரிருவரும் செய்யும் துன்பங்களை யெல்லாம் சிவபெருமானிடத்தில் விண்ணப்பம் செய்வோம்; வருதிர்'' என்று திருமால் அவர்களை எல்லாம் அழைத்துச் சென்றார். திருக்கயிலையை அடைந்து திருநந்திதேவரிடம் விடைபெற்றுப் பரம சிவனார் சந்நிதியில் சென்று யாவரும் பன்முறை அடியற்ற மரம்போல் வீழ்ந்து வீழ்ந்து வணங்கி எழுந்து,

ஈசாநஸ் ஸர்வவித்யாநா மீச்வரஸ் ஸர்வ
பூதாநாம்
ப்ரஹமாதிபதிர் பிரஹ்மனோதிபதிர் பிரஹ்மா
சிவோமே அஸ்து சதாசிவோம்!

நமோ ஹிரண்ய பாகவே
ஹிரண்ய பதயே அம்பிகா பதய
உமாபதயே நமோ நம:

என்னுந் தைத்ரீய வேத ஆருணசாகா மந்திரங்களைச் சொல்லித் துதித்தார்கள். சிவபெருமான் திருவருள் சுரந்து கூறியருளுவார்: ''அகங்காரம் பெருந்துன்பமயம். நீவிரிருவரும் அகங்காரம் கொண்டதனால் அன்றோ அவ்வசுரரிருவரும் தோன்றினர். நுங்களகங்காரம் நுமக்கன்றி. நும்மைச் சார்ந்த மற்றையோர்க்கும் பெருந்துன்பை விளைத்தது. ஹே, மாலே! உயிர்களைக் காக்கின்ற பட்டத்தினையுடைய நீ, இங்ஙனஞ் செய்ததென்னை?'' என்று உரைத்துப் பரமனார் துர்க்கா தேவியையும், சுப்பிரமணியக் கடவுளையும் அனுப்பினர். துர்க்கை மகிடனைச் சங்கரிக்க வந்தாள்.

அதனைக் கண்ட சுப்பிரமணியப் பெருமானார் அசுர சேனைகளையெல்லாம் அதஞ் செய்தனர். மகிடன், வியாக்கிரன் என்னும் இருவரும் பெருங்கோபமுற்று, இத் தேவர்களாலன்றோ இவ்விருவரும் போர் புரிய வந்தனர். ஆகலிற் பிரமன், விட்டுணு முதலிய தேவர்களை யெல்லாம் இப்பொழுதே விழுங்கி யழிப்போமென்று பல மாயா வடிவங்களைக் கொண்டு தேவர்களை வளைத்தார்கள். தேவர்கள் கருடனைக் கண்ட பாம்பு போல மிக்க பயங்கொண்டு ஓலமிட்டார்கள். துர்க்கா தேவியையும் சுப்பிரமணியப் பெருமானாரையும் நோக்கி அபயமிட்டார்கள்.

தாம் அக்நிவர்ணும் தபஜா ஜ்வலந்தீம்
வயிரோ ஸனி கர்ம பலேஷு ஜுஷ்டாம்
துர்க்காந் தேவிம் ஸரண மகம்
பிரப் பத்யே சுதரஸி தரஸே நம:

என்று துர்க்கா தேவியை நோக்கி அபயமிட்டார்கள். இந்த யசுர்வேத தோத்திரத்தைக் கேட்டதும் தேவியானவள் எருமை முகத்தை யுடையவனும் மகிடாசுரனை வளைத்துப் பொருது கொன்றாள்.

## ஸாம வேதம்

விஸ்வாநினோ துர்க்கஹா ஜாத வேதஸ
சிந்தும் நனு
வாதுதாதி பர்ஷி! அக்னே அதிர்வந்
மனஸரக்ருணு
ஞேஸ்மாகம் பூர்வாவி தா தனுனும்!!
ப்ரத நாஜி தக்ஸகமான ஞஸ்ரமக்னிக்
ஹுவேம
பரமாது சதஸ்தாது! ஸனக பர்ஷ்ததி
துர்க்காணி
விஸ்வாக்ஷா மத்தே வொதி துரிதாத் யக்நி;

என்று முருகக் கடவுளை நோக்கித் தோத்திரம் புரிந்தனர். பெருமானார் அவ் வேத மந்திரங்களை யெல்லாம் கேட்டு, அஞ்சன்மின்! அஞ்சன்மின்! என அபயங் கொடுத்துப் புலிமுகமுடைய அசுர வீரனைப் பொருத உன்னினார். தம்முடைய திருக்கரத்தின் கணுள்ள ''அநந்த குணம்'' என்னும் பெரிய வில்லை வளைத்துத் தொனி செய்தார். வியாக்கிரன் மிகவும் பயந்து ''குணத் தொனியே இங்ஙனமாயின், இவர் வீரமெத்துணையதோ? ஆயினும் இத்தகைய மாவீரனுடன் யுத்தம் செய்து இறப்பினும் எஞ்ஞான்றும் புகழ் இருக்கும்'' என்று துணிவுற்றுத் தன் வில்லை வளைத்து யுத்தம் புரிந்தான். பலப்பல வடிவங்களை எடுத்துப் பாணங்களைப் பொழியா நின்றான். அக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் பரப்பிரமப் பொருளாய் குகக் கடவுள் ஓர் அஸ்திரம் விடுத்து அவன் தலையைக் கொய்து புறக்கடலில் விழச் செய்தார். தேவர்கள் யாவருந் துதித்து முன்போலப் பதவிகளிற் சென்று வாழ்ந் திருந்தனர்.

தேவருக்குத் துன்பம் செய்த மகாவீரன் ஆகிய வியாக்கிராசுரனைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்து அருளினமையால் வியாக்கிராசுர சங்கரா மூர்த்தி எனத் துதிக்கப்பட்டார்.

## வாசிட்டலிங்க புராணம்

கண்ணு தற்கொரு கண்ணை யப்பிய
கண்ண னுமொரு திண்ணனன்
பெண்ணி யாவரு முண்ண யந்திட
வண்ண வாழியை யுள்ளியெம்
அண்ண லாரடி கண்ணி டந்தவை
மண்ணை யுண்ணியு மெண்ணவாங்
கண்ண னும்முத ருங்க னென்றொரு
சண்டை கண்டனர் கற்பகமே.

விண்டி யானுன தத்த னென்றிட
வேத னேதிடு மாயனே
பண்டு நாவலர் மகதி யானென
வென்கண் மந்தனை பார்மகட்
கொண்ட நன்மரு காக நின்றனை
கூறு பேரனு மாவையே
யண்டி யுற்றபி றப்பி னுற்படை
அங்கை சேர்ந்தது காண்டியே.

அன்ன மாயனு மோர முற்கொடி
ருட்க டற்பரி போலவே
துன்ன வோர்புலி யுக்கி ரத்துறு
தூர்த்த னைப்பொர வுய்ந்தனன்
அன்ன ணஞ்சிறை யன்ன னும்மகி
டனை யுய்த்தன னன்னவர்
முன்னி நின்றமா கொண்டி ணங்குரு
மூன்றி னுனரு ளுன்றினர்.

வியாக்கி ரன்றவ மேன்மை யால்வர
வாய்மை யாற்பல வேந்தரைக்
குயாக்கி ரத்துறை யாக்கி வானவர்
கோலு மாபத மாக்கியே
சயாக்கி ரத்தின லைக்க வேன்முரு
கத்த னாருள் சாரவே
புயாக்கி ரத்தினில் வந்த பொற்கணை
பூப்ப வுண்டிட மண்டினன்.

**வியாக்கிராசுர சங்கரா மூர்த்தியே நம:**

*(சுப்பிரமண்ய பராக்கிரமம்)*

இத்தகைய புராண வரலாற்றினை யுணர்ந்த எமது முன்னோர், உலகமக்கட்கு இவ்வரலாற்றினை உணர்த்து முகமாகவும் இவ்விழா மூலம் மக்களனைவரும் உய்யும் பொருட்டும், கலியுகம் 4957இல் தெல்லிப் பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு மாவை முருகப்பெருமானை எழுந்தருளு வித்து, மாலைப்பொழுதிலே வியாக்கிராசுர வதம் செய்வித்து, தேவ பூசைகள் நடப் பித்து, மங்கள வாழ்த்தொலிகளுடன் முருகப்பெருமான் தமது திருக்கோவிலுக்கு எழுந்தருளும் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர். இதனை முன்னின்று ஆரம் பித்து நடாத்திய பெருமை இருபாலைச் சேனாதிராஜா முதலியார், நல்லூர் கந்தப் பிள்ளை ஆகியோரையே சாரும். விஜய தசமி மாலைப்பொழுதினிலே வியாக்கிரா சுர வதம் செய்யப்பட்டதாகப் புராண முண்டு. இங்கேயும் மாலைப் பொழுதினி லேயே இந் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. இத்தனை பெருமை மிக்க ஓர் உயர்ந்த வர லாற்றினை உணர்த்தும் உற்சவத்தைத் தொடர்ந்தும் இப்பூலோக மக்கள் தரிசிக் கத் தக்கதான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்த எம் மூதாதையரை நாம் ஒருகால் சிந்தித்து, என்றென்றும் இவ்விழா சீரும் சிறப்புடனும் நடைபெறவேண்டுமென்ப தற்கான தர்மங்களைத் தயார் செய்து வைக்கவேண்டிய பெரும் பொறுப்பும் எம் மிடம் இருக்கின்றது. மாவை முருகனுக்கும் தெல்லிப்பழைத் துர்க்கையம்மனுக்கு முள்ள தொடர்பு நீண்டகாலமாக நிலவி வருகின்றது. அந்தத் தொடர்பும் ஓர் புராண வரலாற்றினைக் கொண்டதாக இருப்பதும் ஒரு திருவருட் செயலேயாகும்.

இத்திருவருட் சக்தியைக் கொண்ட அன்னைக்கு ஒரு சித்திரத்தேர் உருவாகி, வெள்ளோட்டம் இடம் பெறும் இந்நாளில் மாவை முருகனையும் நினைத்து யாமெல் லோரும் இன்புறுவோமாக.

**சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில்மிகு துர்க்கையின் அருள்மிகு திருக்கோலம்

ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத் தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. இவளே சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமாயவள். அமைதியான வாழ்வையும் அளவில்லாத ஆனந்தத்தையும் அருளும் அன்னையாக மிளிர்கிருள். இவளை உபாசித்துப் பெரும் புண்ணியம் பெற்ருேர் பலர். எவனுக்கு மறுபிறவி என்பது ஒன்று இல்லையோ அவனே அம்பிகையை உபாசிக்கும் பாக்கியம் பெற்றவனுவான்.

நம் நாட்டில் தேவிவழிபாடு மிகச் சிறந்து காணப்படுகிறது. அம்பிகையின் உருவபேதங்கள் பல. அவற்றை அமைத்துக்கொண்டு வேறு வேறு நிலையில் வைத்து வழிபடுவோர் பலர்.

எக்காலத்தில் தர்மத்துக்குக் குறைவு உண்டாகி அதர்மம் மிகுதியாகின்றதோ அப்பொழுது நான் அவதரிப்பேன் என்று பார்த்தசாரதியான கண்ணன் கீதையில் அருளினுன். அதேபோல் எப்பொழுது அரக்கர்களால் துன்பமுண்டாகிறதோ அப்பொழுது நான் அவதரித்துப் பகைவர்களை நாசம் செய்வேன் என்பது தேவியின் அருள்வாக்கு. இவ்விதம் தேவியும் கண்ணனும் ஒரே கருத்துள்ள வாசகங்களை வெளிப்படுத்துவதனுல் இருவரும் ஒரே தத்துவமாக இருக்கவேண்டுமென்பது புலனுகிறது. ''அரியலால் தேவியில்லை'' என்பது தேவாரம். பரமேஸ்வரனுடைய சக்தி போக காலத்தில் பவானியாகவும், போரிலே துர்க்கையாகவும், கோப காலத்தில் காளியாகவும், இரட்சிக்கும் காலத்தில் விஷ்ணுவாகவும் பிரிந்து காட்சி தருகிறது. இதனுல் சக்தி தத்துவமும் விஷ்ணு தத்துவமும் ஒன்றென்பதை அறியலாம். சக்திகளின் பெருமையை விளக்குவது சப்தசதி மந்திரமாகும். இதில் எழுநூறு மந்திரங்கள் இருப்பதாலும், எழுநூறு வகையான பிரயோகங்கள் அமைவதாலும் சப்தசதி என்று பெயர் கூறுவர். சப்த என்பது ஏழு; சதி என்பது நூறு.

சிறப்பாகச் சப்தசதி மந்திரத்தினுல் உணர்த்தப்படும் தேவதை துர்க்கை. துர்க்காதேவி ஒன்பது பேதமுடையவளாகச் சொல்லப்பட்டிருக்கிருள். ஜெயா, விஜயா, பத்ரா, பத்ரகாளி, ஸுமுகி, துர்முகீ, ப்ரக்ஞா, வ்யாக்ரமுகீ சிங்கமுகீ என்று ஒன்பது வகையாகத் துர்க்காதேவி சொல்லப்பட்டிருக்கிருள். மேலும் ஆகமங்களில் வனதுர்க்கை, ஜலதுர்க்கை, வன்னி துர்க்கை, ஸ்தூல துர்க்கை, விஷ்ணு துர்க்கை, பிரமாதுர்க்கை, ருத்ரதுர்க்கை, மஹா துர்க்கை, சூலினி துர்க்கை என்று ஒன்பது வகையான திருக்கோலங்களும் கூறப்பட்டிருக்கின்றன. துர்க்கையை எல்லா நலம் குறித்தும் பிரார்த்திக்கலாம். பிராமண குமாரியாக நின்று உயர் நலம் அளிக்கின்ருள். சத்திரிய குமாரியாக நின்று வெற்றி தருகின்ருள். வைசியகுமாரியாக நின்று லாபம் அளிக்கின்ருள், சூத்திர குமாரியாக நின்று திருமணம், பிள்ளைப் பேறு ஆகிய வரங்களைத் தருகின்ருள். நாட்டிலே மழையில்லாது வரட்சியுற்ற நேரத்தில் மழையைப் பொழிவித்துப் பசிப்பிணியைத் தீர்த்து இரட்சிப்பதால் சாகம்பரி, சதாட்சி என்ற நாமங்கள் ஏற்பட்டன. துர்க்கன் என்ற அசுரனைக் கொன்றமையால் துர்க்கா என்னும் சிறப்பு நாமம் கொண்டு வழிபடப்படுகிறது.

மகிடாசுரனுல் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் பிரமாவிடமும், விஷ்ணுவிடமும் தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டனர். ஆங்கு வெளிப்பட்ட சினம் என்னும் சக்தி ஒன்றுசேர்ந்து உருவெடுத்த வடிவமே துர்க்கை வடிவம் என்று பேசப்படுகின்றது. துர்க்காதேவி சிங்க வாகனத்தில் ஆரோகணித்து, மகிடாசுரனை எதிர்த்துப் போருக்கெழுந்தாள். அவ்வசுரனும் படைகளுடன் போருக்கு வந்தான். அம்பிகையின் வாகனமாகிய சிங்கமே அசுரசைனியங்கள் அனைத்தையும் அழித்துவிட்டது. அசுரன் மகுட உருவில் வந்தபோது அவன் செருக்கை அடக்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை தனது திருவடியால் அழுத்தி ஆட்கொண்டாள். தேவி சதுர்ப்புஜங்களில் சங்கு, சக்கரம், தாமரை, ஜெபமாலை என்பவற்றைத் தாங்கிநிற்கும் திருக் கோலம் தியானத்திற்கு விருந்தளிப்ப தாகும். துர்க்காதேவிக்கு ஈழவளநாட்டில் மிகப் பழமையான தனிப்பெருங் கோயில் அமைந்திருப்பது என்றால் அது யாழ்ப் பாணத்தின் வடபாகத்திலுள்ள தெல்லிப் பழையிலேதான் இருக்கிறது. கிழக்குப் பார்த்த சந்நிதியாகப் பிரதான வீதியை நோக்கியவண்ணம் காட்சிதருவதும், தல விருட்சங்களாக இலுப்பையும், மாவும், மகிழும், அரசும் அமைந்து விளங்குவதும், ஆகம விதிகளுக்கமைய மூல மூர்த்தியும், பிரகார மூர்த்திகளும் அமைந்து காட்சி தருவதும், பாகசாலை, யாகசாலை, வாகன சாலை, அந்தணர்சாலை, அலுவலகம், திரு முறை மண்டபம், பக்தர்கள் விடுதி, திரு நந்தவனம், அன்னதான மண்டபம் என்ப வற்றோடு இவ்வாலயம் தோற்றமளிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஏராள மான பக்தர்கள் இப்பொழுது இங்குவந்து அவரவர் இஷ்டபூர்த்திக்கு வேண்டுதல் செலுத்தி, அதனால் நிவர்த்தியும் பெறு கிறார்கள் என்பதும் கண்கூடு. கடந்த பத்து ஆண்டுகளுக்குள் துர்க்காதேவியின் அருட் பிரகாசம் பிரவாகித்து, ஈழவள நாடெங்கணும் செறிந்து பாய்கிறது. அன்னையின் அருள்மிகு திருக்கோலத்தி னைப் பல்லாயிரம் மக்கள் எழில்மிகு சித்திரத் தேரில் வைத்துத் தரிசிப்பதற்கு இவ்வாண்டு எதிர்நோக்கியவண்ணம் இருக் கிறார்கள்.

நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி அன்னை பவனிவரும் காட்சி அடியார்களை அத்திருவருள் ஒளிக்குள் நிறுத்திவிடும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாண்டு ஆவணி உத்தராட நாளை ஆவலுடன் எதிர்நோக்கும் எம் அனைவருக்கும் அன்னை யின் கருணை முற்றாகக் கிடைக்கட்டும்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல் பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப் பெம்மான் முக்கட் சுடர்க்கிடுதல்
விருந்தே வருக மும்முதற்கும் வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின் விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம் குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே.

**— மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரதோற்சவ மகத்துவம்

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்"

என்ற சிவஞான போதச் சூத்திரத்தில் சங்கார காரணனுயுள்ள முதலேயே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்கின்றது. ஐந்தொழிலில் நடுநாயகமாக உள்ளது அழித்தல் தொழிலாகும். அழித்தல் தொழிலின் தத்துவமாக விளங்குவதுடன் கருவியாகவுமுள்ளது தேராகும். மும்மறையுள் நடுமறையாகி யசுர்வேதத்தில் நடுமத்தியாகிய நாலாவது காண்டத்தில் காணப்படும் ஸ்ரீருத்திரத்தில் ரதிப்யகா–தேரில் செல்பவராயும், ரதேப்யகா–தேர்களாயும்; ரதபதிப்யஸ்ச–தேர்களின் தலைவராகவும், ரதகாரேப்யகா–தேர் செய்பவராகவும் விதந்து கூறுகின்றமையால் உற்சவத்துள் தேர்உற்சவம் சிறப்புடையது.

பசு பதியாகிய சிவபெருமான் சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும் உலகச் சராசரப் பொருட்களை ஒவ்வொரு உறுப்புக்களாகவும் வேதங்களைக் குதிரைகளாகவும் மேருவை வில்லாகவும் விஷ்ணுவை அம்பாகவும் அக்கினியை அம்பின் கூராகவும் வாயுவை வேகமாகவும் பிரமாவைச் சாரதியாகவும் கொண்டு நம்மிடமுள்ள அசுரர்களாகிய மும்மலங்களையும் சங்காரம் செய்வது ரதோற்சவக் கருத்தாகும்.

இக்கருத்தை: 185981

விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளுங்
கருது கின்ற வூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டங்
கருதி நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

என்ற ஞானசம்பந்தர் வாக்கினல் உணர்க.

சக்தியைப்பற்றிச் சிந்திக்குமிடத்து சக்தி ஒன்றே. அதன் தொழிற்பாட்டால் அது பலவகையாகக் கூறப்படும்; நவசக்திகள் என்றும் சப்தமாதர்கள் என்றும் ஆகமங்களில் சத்தி தத்துவத்திற்கு அமைய விரித்துக் கூறுவதோடு சக்தி வழிபாட்டைத் தனியே கூறுகின்ற சாக்த நூலில் சிறப்பாக பல வடிவங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை ஆராய்வோம்.

**பாலாம்பாள்**

இவ் வடிவத்தை நோக்குமிடத்து கிரீடம், நான்கு திருக்கரம், முறையே அக்கமாலை, புத்தகம், அபயம், வரதம், செந்நிறமேனி நீலோற்பல மலரில் வீற்றிருப்பாள் மூன்று அட்சரமுடையவள்.

**காமேஸ்வரி** *(ஸ்ரீலலிதாதேவி)*

இவள் சிந்தாமணி என்னும் சிறப்புமிக்க மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாளிகையில் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் என்னும் நால்வரையும் நான்கு கால்களாகக்கொண்ட கட்டிலில் காமேஸ்வரரின் மடியில் வீற்றிருப்பவள். பதினறு வயதினள். பாசம், அங்குசம், புஷ்பபாணம், கரும்புவில் ஏந்தியவள். தலையில் பிறை சூடியிருப்பவள். செந்நிற மேனியள். இவளது மூலமந்திரம் 15 அல்லது 16 அல்லது 18 என்ற கணக்கினையுடைய அட்சரங்களால் மூன்று பேதங்களானவை. இவளே அனைத்துலகிற்கும் பேரரசி, இவளுக்கு இராஜ மாதங்கி, மந்திரிணீ என்ற இரண்டு அமைச்சர்கள் உண்டு. ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் காஞ்சியில் ஸ்ரீ கமாட்சியமையாக வைத்து இவளையே வணங்குகின்றார்கள்.

**இராஜராஜேஸ்வரி**

ஸ்ரீ லலிதாதேவியைப் போன்ற திருவுருவம் உடையவள். இவளது மூலமந்திரம் இருபத்தெட்டு எழுத்துக்கள் கொண்ட மகாசோடசீ எனப்படும். ஞானத்தின் முழு நிறைவைக் குறிக்கும் இவள் 40 வயதினள் என ஸ்ரீ வித்தியா என்ற நூல் கூறுகின்றது. இச்சத்திக்கு சித்திரை மாத வசந்த நவராத்திரி மிக விசேடமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவாட்சரிமாலா**

இத்தேவி பாலாம்பாளின் வடிவத்தையே கொண்டவள். இவளது மூல மந்திரம் ஒன்பது எழுத்துக்கள் கொண்டதாகும்.

**அன்னபூரணி**

இத்தேவி லலிதாம்பிகையின் அம்சம் போன்றவள். அத்துடன் வலக்கையில் பொன் அகப்பையையும், இடக்கையில் மணிகள் பதித்த பொற்கலசத்தையும் தாங்கி அதிலுள்ள பால் சோற்றை உயிர்களுக்கெல்லாம் வழங்கும் தாயாக விளங்குபவள். பொன்னிறம் உடையவள். பொற்கலன் பூமாலை அணிந்தவள். காசி க்ஷேத்திரத்தைத் தனக்குச் சிறப்பாக அமைத்துக் கொண்டவள்.

**அசுவாரூடாம்பாள்**

இவ் வம்பிகை சிவந்த மேனியுடையவள். சிகப்பு நிற ஆடை அணிந்திருப்பாள். சிகப்பு நிறக் குதிரையும் உடையவள். கரங்களில் சவுக்கு, பிரம்பு, சர்ப்பம், பாசம் என்பவற்றைத் தாங்கியுள்ளாள். கொடியவரை அச்சுறுத்தும் சத்தியுள்ளவள்.

**இராஜமாதங்கி (மீனாட்சி)**

அமிழ்தக் களிப்பில் திளைக்கும் இத்தேவி கடம்பமலர் சூடியவள். மடியில் வீணையை வைத்துக்கொண்டு வாசிப்பவள். செந்நிற ஆடையுடையவள். நெற்றியில் கஸ்தூரி திலகம் அணிந்தவள். பிறை சூடியவள். சங்குக்குழை அணிந்தவள். புன்முறுவல் பூத்த முகமுடையவள். கலைகளின் அறிகுறியாகக் கிளியைஏந்தியவள். மரகத மணியின் நிறமுள்ளவள். புரட்டாதி மாசம் வரும் நவராத்திரி விழா இவளுக்கு விசேடமானது. மதுரை மீனாட்சியையே ராஜமாதங்கி என்று பெரியோர்கள் வழிபடுவர்.

**லகுஷியாமா**

இத் தேவி மாதங்க முனிவரின் மகள். வைர மணிகள் பதித்த வீணை வாசிப்பவள். இந்திர நீலம் பேரழகு பொருந்திய மேனியையுடையவள்.

**வாக்வாதினி**

வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் இத்தேவி இரண்டு கைகளையுடையவள். எழுதுகோலும் புஸ்தகமும் வைத்திருப்பவள். பாரதி என்றும் இவளைச் சொல்வார்கள்.

**நகுனி**

ராஜமாதங்கியின் பிரத்தியங்க தேவதை. முத்துப்போன்ற முறுவல் உள்ளவள். பகைவராகிய நாகங்களின் நாக்கை அறுப்பவள். பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்பவள்.

**வராகி**

லலிதா தேவியின் படைத்தலைவி. தண்டினி எனவும் வழங்கப்படுவாள். மேகம் போன்ற நிறமுடைய இவள் ஐம்புகேஸ்வரம் என்னும் திருவானைக்காவில் அகிலாண்டேஸ்வரியாக வீற்றிருந்து அடியார்களின் வேண்டுகோளை நிறைவேற்றுபவள். அத்துடன் எட்டுக் கையுள்ளவள். இவ்வெட்டுக் கரங்களிலும் முறையே சக்கரம், வாள், உலக்கை, கலப்பை, அபயம், வரதம், சங்கு, கேடயம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். ஆஷாடமாச நவராத்திரி இவளுக்கு விசேடமானது.

**புவனேஸ்வரி**

உதயசூரியன் போன்ற பிரகாசமுடையவள். திருமுடியில் பிறையும் காதுகளில் தோடு முதலிய அணிகலன்களும் தரித்தவள். பாசம், அங்குசம், அபயம், வரதம் என்பவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியிருப்பவள். சாக்தர்களின் தலையாய தெய்வம் இவளேயாம். ஸ்ரீ வித்தையாகிய பஞ்சதசாட்சரி மந்திரம்இவளுக்கு பிரதானமாம். இவளது ஓரெழுத்து மந்திரத்தை உச்சரிப்போர் போக மோக்ஷம் அடைவார்கள்.

**சண்டி**

இத்தேவி மின்னல் ஒளியுடையவள். சிங்கவாகனத்தையுடையவள். ஒன்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்களால் சூழப்பட்டவள். முக்கண்ணும் பிறைமுடியும் உடையவள். சண்டன் என்னும் அசுரனைக் கொன்றவள். தனது எட்டுக்கரங்களிலும் முறையே கதை, வாள், கேடயம், அம்பு, வில், பாசம், கண்டனம் தரித்துள்ளாள். இவளது மோதிரம் ஒன்பது எழுத்துக்களாம்.

**மகிஷாசுரமர்த்தனி**

இவளைக் கொற்றவை என்பார். எருமைத் தலையையுடைய மகிஷனைக் கொன்றமையால் இப்பெயர் வந்தது. இவளையே இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் விரிவாகக் கூறியுள்ளார்.

**துர்க்கை**

தன்னை வணங்கும் அடியார்களுக்குத் துன்பத்தை நீக்கிஅவர்களுக்குத் திருவருளை வழங்கிக் காப்பதினுல் துர்க்கை என்னும் நாமத்தைப் பெற்ருள். இத்தேவி பராசத்தியின் படைத்தலைவியாவள். ஆபத்துக் காலத்தில் அன்பர்களுக்கு அருள் புரிந்து உதவுபவள். அச்சம் போக்கும் திறமையுடையவள். அரசருக்கும் வீரருக்கும் உரிய வழிபாட்டுத் தெய்வம். அக்கினிகலை, சூரியகலை, சந்திரகலைகளை யுடையவள். இவ்வம்பிகைக்குத் தேன் அபிஷேகம் செய்து புஷ்பார்ச்சனை செய்தால் உடனேயே ஆபத்து நீங்கி வெற்றியும் கைகூடும். இவள் எழுந்தருளியுள்ள ஆலயமே எமது துர்க்காதுரந்தரியும், சபையாரும் சேர்ந்து சித்திரத்தேர் செய்துவரும் ஆலயமாம். அங்கே அம்பிகை பிரத்தியட்சமாக அருள் செய்கிருள். ஆகவே நாங்கள் எல்லோரும் இந்தச்சமயத்தைக் கைவிடாமல் ஒருங்கு சேர்ந்து ஸ்ரீ துர்க்காதேவியின் அருளைப் பெறத் தவருது சென்று தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறுவோமாக.

இத்தருமம் மேன்மேலும் விருத்தியடைய எமது குலதெய்வமாகிய அன்னை நாகபூஷணி அம்பாளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

சுபம்.

**சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள்**

## ஆன்மஞானத்தின் உறைவிடம் நமது நாடுதான்

ஞானம் பிறநாடுகளிலே பரவுதற்குமுன் அதற்கு உறைவிடமாய் இருந்தது இத்தேசமே; இங்கன்றே இமயமலை எப்பொழுதும் பனியால் மூடப்பட்டதாகி, விண்ணுலகத்து இரகசியங்களை அறியப்புகுவது போல் படிப்படியாய் உயர்ந்து ஆகாயத்தை அளாவுகின்றது. இங்கன்றே ஞானிகளில் சிறந்தவர் வாழ்ந்தனர். மனிதன் எத்தகையவன், பிரபஞ்சம் எத்தகையது என்ற விசாரங்கள் முதன்முதல் நிகழ்ந்தது இங்கு அல்லவா? ஆன்மா அழிவற்றது, நியந்தாவாகிய கடவுள் ஒருவர் உளர், ஜகத்திலும் ஜீவனிலும் நிறைந்த கடவுள் அவரே என்ற முடிவுகள் இங்குத்தானே முதன் முதலிற் செய்யப்பட்டன. மதமும் தத்துவ ஆராய்ச்சியும் எட்டக்கூடிய தூரம் வரை எட்டினதும் இங்குதானே. இங்கிருந்தன்றே தத்துவஞானம் கடலினின்றும் எழும் அலைகளைப்போல் அந்நிய நாடுகளுக்கும் பரவிற்று. இனிமேலும் இங்கிருந்துதான் அந்த ஞானம் தற்காலத்திலே மெலிந்து கிடக்கும் தேசங்களுக்குச் சென்று, அத்தேசத்தவர்க்கு வலிமை ஊட்ட வேண்டும்.

— **சுவாமி விவேகானந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

### ஸ்தலம் என்பது யாது?

இயற்கை முழுவதிலும் அழகுண்டு. சில இடங்களில் அமைந்துள்ள அழகு நம் உள்ளத்தை அறவே கொள்ளைகொண்டு போகிறது. மனத்தகத்து மேலான எண்ணத்தை ஊட்டுதற்கும் அத்தகைய அழகு பயன்படுகின்றது. உயர்ந்த எண்ணங்களை எண்ணுதற்கு அழகிய இடங்கள் பெரிதும் பயன்பட்டு வந்திருக்கின்றன. ஓரிடத்தில் உதித்த உயர்ந்த எண்ணமானது பிறகு அந்த இடத்துக்கே புதிய அருள் சக்தியை நல்குகிறது. உயர்ந்த எண்ணம் அழிவற்றது என்பது ஆன்ருேர்கள் துணிபு. அவர்கள் எண்ணிய உயர்ந்த எண்ணங்களும் இயற்கையின் பொலிவும் ஒன்றுசேர்ந்து ஓரிடத்தைப் புண்ணிய ஸ்தலமாக்குகின்றன. புண்ணிய ஸ்தலத்துக்கு மூலமகிமை இங்ஙனம் அமைகிறது. தபஸ்விகளும் முனிவர்களும் பல காலங்களில் பல இடங்களில் வசித்துவந்துள்ளனர். அன்னவர்களின் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள் ஓயாது உதித்து வந்தன. இந்த எண்ணங்களின் வலுவால் அவர்களுடைய வாசஸ்தலங்கள் புண்ணிய சேத்திரங்களாய் விட்டன. நாளடைவில் அத்தகைய ேஷத்திரங்களில் பெரிய மாறுதல்கள் உண்டாகக்கூடும். அத்தகைய மாறுதல்களை முன்னிட்டுப் பழைய மகிமை மறைந்துபோய் விடுவதில்லை. மேலாம் கருத்துக்களைத் தங்கள் மனதிலே வளர்க்க முயலுகின்றவர்கள் அப் புண்ணிய ஸ்தலங்களை நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம். புண்ணிய ஸ்தலங்களுக்கு எதிரிடையாயுள்ள இடங்களையும் உலகில் காணலாம். எங்கு கீழான எண்ணங்கள் திரும்பத் திரும்ப எண்ணப்படுகின்றனவோ, ஆங்குச் செல்கின்றவர்களுக்கு இயல்பாக மனது கீழ்நிலைக்குப் போய்விடுகிறது. கீழ்மையில் தாங்களும் சிறிது சிறிதாகக் கலந்துகொள்கின்றனர். ஆத்ம சாதகர்கள் அத்தகைய சூழ்நிலையில் வசிக்கலாகாது. புண்ணிய க்ஷேத்திரங்கள் என்பவை ஆத்ம சாதனத்தில் மேல்நிலைக்குப் போக முயலுகின்றவர்களுக்கு, சாதகர்கள் என்னும் மேலான எண்ணங்களுக்கு ஸ்தலங்கள் என்னும் சூழ்நிலைகள் மேலும் உதவிபுரிகின்றன. இந்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே நம் நாட்டில் புண்ணிய க்ஷேத்திரங்கள் பல உண்டாயிருக்கின்றன. பாடல்பெற்ற ஸ்தலங்களுக்கு என்றென்றும் மறையாத மகிமை இங்ஙனம் வந்தமைவதாயிற்று.

### ஆலயங்களுக்குள் சிறந்தது:

இப்பொழுது நம்நாட்டில் தென்படும் பெரிய கோயில்கள் எல்லாம் இடைக்காலத்தில் வந்தவை. வேதகாலத்தில் இவை இருந்ததில்லை. இயற்கையின் சூழ்நிலையே வழிபாட்டுக்குரிய இடங்களாயின. வேள்வித்தீயின் மூலம் வழிபாடு பெரிதும் நிகழ்ந்துவந்தது. நதிக்கரைகளிலும் மரச்சோலைகளிலும் தெய்வவணக்கம் நிகழ்ந்து வந்தது. அத்தகைய விருட்சங்கள் நாளடைவில் ஸ்தல விருட்சங்கள் ஆயின. பின்பு ஆகமத்தை அனுசரித்து ஆலயங்கள் கட்டுவிக்கப்பட்டன. மலையைக் குடைந்தும் ஆலயங்களை அமைத்துவைத்தார்கள். இப்படி அமைந்த ஆலயங்கள் மானுடசரீரம் என்னும் ஆலயத்தின் புறச் சின்னங்களாம். மானுடசரீரமே ஆலயங்களுள் மிகச் சிறந்தது, என்று ஆன்ருேர்களால் சர்வகாலமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அண்டம் எங்கும் குடிகொண்டிருக்கும் தெய்வம் சிறப்பாக மானுட சரீரத்தில் வீற்றிருக்கிறது. ஆனுல் சரீரத்தினுள் கடவுள் எழுந்தருளியிருக்கிருர் என்னும் கோட்பாட்டைப் பாமரர்கள் எளிதில் அறிந்துகொள்ளமுடியாது. பாமரர்களுக்குப் பயன்படுதற் பொருட்டே ஆலயங்கள் அமைக்கப்பெற்றன. உலகிலும் உடலிலும் உள்ள தத்துவங்களை விளக்குதற்கு ஆலயங்கள் வந்துள்ளன. நமக்குத் தோன்றியவாறெல்லாம் ஆலயங்களைக் கட்டலாகாதென்பதும், ஆகமங்கள் விதித்துள்ளபடியே அவைகளை அமைக்க வேண்டும் என்பதும் கோட்பாடு. அதற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க காரணமும் ஒன்றுண்டு. தேசப்பட மொன்றை நமக்குத் தோன்றியவாறு வரையலாகாது. முறையாக அமைந்த படத்தின் நகலாக ஏனைய படங்களை அமைக்கலாம். முறையாக அமைந்த தேசப்படமே இயல்பாக அமைந்துள்ள தேசத்தின் சின்னம் ஆகும். மூல அமைப்பாகிய தேசத்தின் வடிவைப் படம் முற்றும் ஒத்திருக்கின்றது. ஆகையினால் அது தேசப் படம் என்று அங்கீகரிக்கப்படுகிறது. ஆலயம் ஒன்று உடலென்னும் ஆலயத்தின் புறச் சின்னமாகும். புறச் சின்னத்தை நமக்குத் தோன்றியவாறு எல்லாம் அமைத்து விடலாகாது, மூல அமைப்பாகிய சரீரத்தில் உள்ள தத்துவங்களுக்கு அது ஒத்திருக்க வேண்டும். ஆகையினால்தான் ஆலயங்கள் இன்னின்ன பாங்கில் கட்ட வேண்டும் என்று ஆகமங்கள் ஆணையிடுகின்றன. அத்தகைய ஆலயங்களின் மூலம் நம் உடலமைப்பிலுள்ள மகிமைகளையே நாம் மேலும் அறிந்துகொள்ளவேண்டும். தேசப்படத்தின் துணைகொண்டு தேசத்தை நன்கு அறிந்துகொள்வது போன்று, கட்டுவிக்கப்பட்டுள்ள ஆலயத்தின் துணைகொண்டு, நமக்கு இயல்பாக அமைந்துள்ள சரீரம் என்னும் ஆலயத்தின் தத்துவங்களை நாம் நன்கு அறிந்துகொள்ள முடியும். அந்த அறிவுக்கு ஏற்ற வாழக்கையைத் திருத்தியமைப்பதும் நம் கடமையாகும்.

### இராஜகோபுரம் :

பெரிய பிரகாரம் ஒன்று எடுத்து அதற்கு வாயில் ஒன்று வைக்கப்படுகிறது. அந்த வாயிலுக்கு உயர்ந்தகோபுரம் ஒன்று அமைகிறது. கோயிலின் உள்ளிருக்கும் கோபுரங்களையெல்லாம் விட இது உயர்ந்ததாக இருக்கும். நெடுந்தூரத்திற்கப்பாலிருந்தும் இதைக் காணலாம். ஸ்தூல லிங்கம் என்று ராஜகோபுரத்தை இயம்புவார்கள். கண்ணுக்கு அது தென்படும்பொழுது அதையே தெய்வ சொரூபமாக எண்ணி வணங்குவது முறை. எட்ட இருப்பவர்களுக்கும் கடவுளைப்பற்றிய ஞாபக மூட்டுவதற்கே அது அமைந்திருக்கின்றது. ராஜகோபுரத்தின் அருகில் வந்து அதன் அமைப்பைக் கவனித்துப் பார்த்தால் சில அதிசயங்கள் தோன்றும். கணக்கற்ற வடிவங்கள் அதன்கண் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவைகளுள் மானிட வடிவங்களை ஏராளமாகக் காணலாம். அவர்களுடைய விதம்விதமான வாழ்க்கை முறைகளும் ஆங்கு வடிவங்களில் விளக்கப்பெற்றிருக்கும். தேவர்களும் வேண்டியவாறு அதில் இடம்பெறுகின்றனர். தேவர்களின் செயல்களும் ராஜகோபுரத்தில் விளக்கப்பெற்றிருக்கின்றன. விலங்குகளும் பறவைகளும் ஏனைய சிற்றுயிர்களும் அதில் இடம்பெறுகின்றன. பிரபஞ்ச அமைப்பில் இவை யாவுக்கும் இடமுண்டு, என்பது கோட்பாடு. சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கினம், மக்களினம், தேவர்கூட்டம் ஆகிய எல்லோரும் பிரபஞ்சத்தில் இருக்கின்றார்கள். அண்டத்தினுள், இன்னதுதான் இருக்கின்றது; இன்னது இல்லை என்று பாகுபடுத்த முடியாது. எல்லாப் படித்தரங்களிலும் உள்ள அனைத்தும் ஆங்கு இடம்பெற்றிருக்கின்றன. இக் கோட்பாட்டை ராஜகோபுரம் உருவகப்படுத்தி விளக்குகிறது. ராஜகோபுரத்தில் அசுசியான சில வடிவங்களையும் அமைத்திருப்பதைக் காணலாம். நாகரிகமான பண்புக்கு அவைகள் அறிகுறிகளாகா. மனத்தகத்து மேலான கருத்துக்களை ஊட்டுதற்கும் அவைகள் உதவிபுரியமாட்டா. கீழான எண்ணங்களைத் தோற்றுவிப்பதற்கே அவை துணைபுரியும். ஆலயவழிபாட்டுக்குப் பொருந்தாத இத்தகைய பதுமைகளை ஆலயத்தின்கண் அமைப்பானேன் என்கின்ற ஆட்சேபம் பலரிடமிருந்து, வருவதுண்டு. அப்படி ஆட்சேபங்கள் வந்தாலும் அத்தகைய வடிவங்கள் சிலவற்றை அமைத்தேயாகவேண்டும் என்று சிற்பிகள் சொல்லுவார்கள். ஆகமவிதிப்படி இருக்கிறது என்றும் அவர்கள் இயம்புவார்கள். அதற்குத் தக்க காரணமுமுண்டு. இயற்கையின் நடைமுறையின் புறச் சின்னமாகப் பெரிய கோபுரம் அமைந்திருக்கிறது என்றால், இயற்கையில் அடங்குபவை எல்லாம் அதன்கண் விளக்கியாகவேண்டும். நாகரிகம், அநாகரிகமாகிய இரண்டும் இயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் இடம்பெற்றிருக்கின்றன. பாராட்டத்தக்க பெருவாழ்வும், பாராட்டத்தகாத சிற்றியல்பும் சிறுசெயல்களும் இயற்கையில் இடம் பெற்றிருக்கின்றன. நம்முடைய உடல் அமைப்பையே ஆராய்ந்து பார்த்தால் இக்கூற்று நன்கு விளங்கும். நம் உடல் அமைப்பில் விளம்பரப்படுத்தக் கூடிய பாங்கிலுள்ள அவயவங்களுண்டு. மறைத்து வைக்கவேண்டிய பகுதிகளும் அதில் இடம் பெற்றிருக்கின்றன. அதைக் குறித்து நாம் வருந்துவதில்லை; வெட்கப்படுவதுமில்லை. அது தான் உடலமைப்பென்று உள்ளமுதை உள்ளவாறு அங்கிகரித்துக் கொள்கின்றோம். அதேவிதத்தில் இயற்கையில் நலம், கேடு ஆகிய எல்லாம் இருக்கின்றன, என்பதைச் சுட்டிக் காட்டுதற்கே இந்தக் கோபுரம் அமைந்துள்ளது. வாழ்க்கையில் நம்முடைய குறிக்கோள் என்ன என்பதையும் இது விளக்குகின்றது. ராஜகோபுரத்தின் வாயில்கள் பொதுவாக ஒற்றைப்படை எண்ணில் அமைந்திருக்கும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று இங்ஙனம் அதில் அமைந்துள்ள வாயில்கள் ஒன்றன்மேலொன்றாகப் பெருகிக் கொண்டே போகும். அத்தகைய வாயில்கள் தத்துவத்திற்கு விளக்கமாக அமைந்துள்ளன. மூன்று வாயில்கள் உள்ளவிடத்து ஜாக்கிரத, சொப்பன, சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தைகளை அவை குறிக்கின்றன. ஐந்து வாயில்கள் உள்ளவிடத்து ஐம்பொறிகளை அவை குறிக்கின்றன. ஏழு வாயில்கள் உள்ளவிடத்து மனம், புத்தி என்னும் இன்னும் இரண்டு தத்துவங்கள் சேர்க்கப்படுகின்றன. ஒன்பதுள்ளவிடத்து சித்தம், அகங்காரம் என்னும் இன்னும் இரண்டு தத்துவங்கள்சேர்க்கப்படுகின்றன. இங்ஙனம் நம்முடைய அமைப்பிலுள்ள வெவ்வேறு தத்துவங்களுக்கும் கோபுர வாயில்கள் சின்னங்களாக அமைந்திருக்கின்றன. இத்தனை வாயில்களுள் கோயிலினுள்ளே செல்லுதற்குத் தரைமட்டத்திலுள்ள ஒரு வாயில்தான் உதவுகிறது. ஏனையவைகள் ஆங்கு அமைக்கப்பெற்றிருந்தும் ஆலயத்தினுள் செல்லுதற்குப் பயன்படுவதில்லை. இதன்மூலம் ஒரு கருத்து நமக்குப் புகட்டப்படுகின்றது. புறக் காரணங்களும் அகக் காரணங்களும் பல நம்மிடத்து இருக்கின்றன. எனினும் கடவுள் நாட்டம் கொள்ளும்போது மனது என்னும் ஒரு காரணம்தான் நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஏனைய கரணங்களை எல்லாம் இருக்கிறபடி வைத்துவிட்டு, மனது இறைவனை நாடி உள்முகமாகப் போக வேண்டும் என்பது கோட்பாடு. பஞ்சேந்திரியங்களைக் கொண்டும், மனம், புத்தி முதலியவைகளைக் கொண்டும் புற உலகை அறிகிறோம். புற உலகை அறிகிற செயலை அப்படியே வைத்துவிட்டு, மனத்தைத் துணையாகக்கொண்டு, பரம்பொருளிடத்து உள்முகமாகப் பயணம் போக வேண்டும் என்னும் கோட்பாட்டை ராஜ கோபுர வாயிலினுள் பண்ணும் பிரவேசம் விளக்கிக் காட்டுகின்றது.

**ரதம் என்னும் சின்னம்:**

ஒவ்வொரு ஆலயத்திேனாடும் சம்பந்தப்பட்டதாக ரதோற்சவம் என்பது ஒன்று உண்டு. ஆலயம் என்னும் சின்னத்தின் மற்றொரு பகுதியாக அது அமைந்திருக்கின்றது. ஓடுதல் என்னும் செயலில் ரதம் உடல் தத்துவத்தை நன்கு விளக்குகிறது. சரீரத்தை ரதம் என்றும், அதன் உள்ளிருக்கும் ஆத்மாவை ரதி அல்லது ஊர்ந்து செல்பவன் என்றும் கருதவேண்டுமென ஞான சாஸ்திரங்கள் புகட்டுகின்றன. சரீரத்திலுள்ள இயல்புகளை எல்லாம் ரதத்தில் அமைப்பது வழக்கமாயிருந்து வருகிறது. ஒன்று நிலைத்திருக்கும் சின்னம், மற்றது இயங்குகின்ற சின்னம். அவைகளின் மூலம் விளக்கப்படும் கருத்து ஒன்றேயாம்.

**மனம் மாறியமைதல்:**

இராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் நம் காட்சிக்கு வருவது பலிபீடம். அதனருகில் சென்று வீழ்ந்து வணங்கவேண்டும். வீழ்ந்து வணங்குகின்றபொழுது வழிபடுகின்ற மனிதன் தன் மனதில் எண்ணும் எண்ணமே மிக முக்கியமானது. வெறுமனே வீழ்ந்து வணங்குவதால் நன்மை ஒன்றும் வந்துவிடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்து வணங்கும்பொழுது தனது கீழான இயல்புகளையெல்லாம் அந்த இடத்திலே பலிகொடுக்க வேண்டும். இனி அவை தலை எடுப்பதற்கு அவகாசம் இல்லை என்றும் ஆழ்ந்து எண்ணுதல் வேண்டும். மனிதனிடத்துள்ள கீழ்மையெல்லாம் ஆங்குக் கீழே வீழ்ந்துவிட்டது. மேன்மையும் மேலான எண்ணமுமே எஞ்சியிருக்கிறது என்னும் எண்ணத்துடன் மனிதன் எழுந்திருக்க வேண்டும். விலங்குத்தன்மை வாய்ந்த மனிதன் கீழே வீழ்ந்து மாய்ந்து போய்விட்டான்; மனிஷத் தன்மைவாய்ந்த மனிதன் எழுந்திருக்கின்றான் என்று எண்ணம் வலிவு பெறுகிறது. அந்த எண்ணத்தின் வலிவு அவன் புதியதொரு பிறவி எடுத்துக்கொண்டதற்குச் சமானமாகிறது. புதியதாக வருவித்துக் கொண்டுள்ள மேலான மனப்பாங்கினை இனி, தெய்வத்துக்குரியதாக மாற்றிவிடவேண்டும் அதன் பொருட்டுச் சாதகன் கோயிலினுள் வலம் வருகின்றான். அவன் வலம் வரவேண்டிய முறையைப் பலிபீடத்திற்கு அடுத்தபடியில் இருக்கும் துவஜஸ்தம்பம் அல்லது கொடிக்கம்பம் விளக்குகிறது. கொடி உள்முகமாகத் திரும்பிக் கொண்டிருக்கிறது. கோயிலைச்சுற்றி நடக்கும்பொழுது உள்ளிருக்கும் தெய்வம் தனது வலது கைப் பக்கம் இருக்கும்படி பக்தன் பார்த்துக் கொள்கின்றான். அதுவே வலம் வருதல் பிராணாயாமத்தின் சின்னமாகும். ஒழுங்குபட்ட மேலாம் மனது பிராணாயாமத்துக்குத் தகுதியுடையதாகிறது. மனத்தகத்து உண்டாகும் மாறுதலுக்கு ஏற்பச் சுவாசிக்கின்ற வாயுவில் வேறுபாடு உண்டாகிறது. கீழான மனப்பான்மையுடையவர்க்குச் சுவாசத்தின் போக்குவரவில் தடுமாற்றம் உண்டு. மேலான மனப்பான்மை யுடையவர்க்குச் சுவாசத்தின் போக்குவரத்து அல்லது பிராணாயாமம் முறையாக நிகழ்கிறது. தங்குதடையின்றி அமைதியாக வலம் வருவது போன்று பிராணாயாமம் ஒழுங்காக நிகழ்ந்து விடுகிறது. சூக்ஷ்மமாக உடலின்கண் நிகழும் நிகழ்ச்சி பிராணாயாமம். வலம் வருதல் என்னும் சரீரத்தின் ஸ்தூலமான செயல் அதன் புறச்சின்னம் புறச்சின்னமாகிறது. துவஜ ஸ்தம்பத்திற்கு அடுத்தபடியில் இருப்பது தெய்வத்திற்குரிய வாகனம். சிவபெருமானுக்கு நந்திவாகனம். மகாவிஷ்ணுவுக்குக் கருடன் வாகனம். அம்பிகைக்குச் சிங்கவாகனம். வாகனம் எதுவாயினும் அது ஜீவாத்மனைக் குறிக்கின்றது. மூலப் பொருளாகிய கடவுளைப் பார்த்தவண்ணமாய் வாகனம் அமைந்திருக்கின்றது. கடவுளைச் சென்றடைய வேண்டியது ஜீவாத்மாவின் குறிக்கோள். கடவுளைச் சென்றடைவதற்குச் சர்வகாலமும் மனது கடவுள் நாட்டத்திலேயே இருக்க வேண்டும் என்னும் கோட்பாட்டை வாகனம் விளக்கிக்கொண்டிருக்கின்றது. சுற்றி வருகின்ற பக்தன் ஆலயத்தின் உள்ளிருக்கும் தெய்வத்தையும், அதைப் பார்த்தவண்ணமிருக்கும் வாகனத்தையும் சேர்த்து வைத்து வலம் வருகின்றான், குறுக்கே நுழைவது முறையன்று. வழிபடுகின்ற அனைவர்க்கும் வழிபாட்டுக்கு ஒத்தாசை செய்யவேண்டும்; இடைஞ்சல் செய்யலாகாது என்பது அதன் கருத்து. பிறர்க்கு இடைஞ்சல் செய்கின்ற அளவுக்குத் தானே கடவுள் வழிபாட்டுக்குப் புறம்பாய் விடுகிறான். பிறர் வழிபாட்டுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து வைக்கும் அளவுக்கு ஒருவன் தானே வழிபாட்டில் முன்னேற்றம் அடைகின்றான். பிறரைப் புறக்கணித்து யாரும் முன்னேற்றமடைய முடியாது. பிறர்க்குப் பணிவிடை செய்து யாரும் முன்னேற்றம் அடையலாம். இக் கோட்பாடு ஆலய வழிபாட்டில் அடங்கி இருக்கிறது.

**உட்புகுதல்:**

கோயிலின் கர்ப்பக் கிருகத்துக்குச் செல்லும்பொழுது அது இருள் சூழ்ந்திருக்கின்றது. சூரியவெளிச்சத்திற்கோ ஆங்கு இடமில்லை. ஜன்னல் முதலியன வைத்து ஆலயத்தை ஏன் அமைப்பதில்லை என்று குறைகூறுபவருளர். ஆகமவிதி அதற்கெல்லாம் இடம் தருவதில்லை என்ற விடை வருகிறது. நம் உடலமைப்பின் புறச் சின்னமாகக் கர்ப்பக் கிருகம் அமைந்திருக்கின்றது. கருவி கரணங்களை ஒடுக்கி, மனத்தை உள்முகமாகத் திருப்பினால் என்ன அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவம் உண்டாகிறதோ அதற்குச் சின்னமாக ஆலயத்தின் கர்ப்பக்கிருகம் அமைந்திருக்கின்றது. உடலுக்குள்ளே நம் நெஞ்சத்தினுள் ஒரே காரிருளைத் தான் கண்மூடி இருக்கும்பொழுது நாம் காண்கிறோம். புற உலகிலிருந்து ஆங்கு வெளிச்சமொன்றும் வருவதில்லை, கர்ப்பக்கிருகத்தின் அருகில் சென்று தரிசனத்திற்காகப் பக்தன் காத்திருக்கின்றான். திரை மூடப்பட்டிருக்கிறது. சிறிது நேரத்தில் மணியோசை கேட்கிறது. இனி விரைவில் தரிசனம் கிட்டும் என்று பக்தன் ஆர்வத்துடன் அதை எதிர்பார்த்து நிற்கிறான். திரை நீங்குகிறது. உள்ளே கர்ப்பூர ஆராதனை காட்டப்படுகிறது. அதன் வெளிச்சத்தில் தெய்வத்தின் விக்கிரகத்தைப் பக்தன் தரிசிக்கிறான். விக்கிரகம் என்னும் எண்ணம் அவன் மனதில் உதிப்பதில்லை. தெய்வத்தையே தரிசிப்பதாக உணருகின்றான். மனக்கருத்து நிகழவேண்டிய ஞானக்காட்சியின் புறத் தோற்றமாகும். இது மனதினுள் சிந்தையைச் செலுத்தும் ஆத்ம சாதகன் காரிருளையே தன்னுள் காண்கிறான். ஆயினும் மனத்தை உள் முகத்தில் வைத்திருக்கப் பழகவேண்டும். அப்பழக்கம் உறுதிபெற நெடுங்காலம் பிடிக்கும். மனத்தை உள்ளத்தினுள் ஒடுக்கிவைத்துப் பழகுபவனுக்கு ஓர் அனுபவம் கிட்டும். தனது உள்ளத்தினுள்ளே ஒரு வித இனிய ஓசையை அவன் கேட்பான். புகை போன்றும், மின்மினிப் பூச்சிகளின் நடமாட்டம் போன்றும் சில காட்சிகளைத் தன்னுள் காண்பான். ஒளி, ஒலி ஆகிய இரண்டும் மனதினுள் உதிப்பது சாதகன் சாதனத்தில் முன்னேறி வருவதன் அறிகுறியாகும். இறுதியில் மனத்தகத்திருக்கும் அஞ்ஞானம் என்னும் திரை நீங்குகிறது. ஞான ஒளியின் தரிசனம் கிட்டுகின்றது. அந்த ஞான ஒளியும் ஆத்ம சொரூபமும் ஒன்றேயாம். அங்ஙனம் மனத்தகத்துக்கு உண்டாகின்ற ஆத்ம தரிசனத்திற்குப் புறச்சின்னமாக ஆலய தரிசனம் அமைந்திருக்கின்றது. மாந்தருக்குத் தோன்றியபடி அதை மாற்றியமைப்பதற்கு ஆகம சாஸ்திரம் இடம் தருவதில்லை. வேண்டுமானால் நம் விருப்பப்படி மாற்றியமைத்துக் கொள்ளலாம். ஆனால் அது ஆத்ம தரிசனத்தின் புறச்சின்னமாகாது.

**பூஜா விதி :**

ஆலயத்தினுள் எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்குப் பலவிதமான உபசாரங்களுடன் ஆராதனை நிகழ்கின்றது. இத்தகைய ஆராதனைகளெல்லாம் ஆத்ம சாதகன் அடைந்து வரும் மனபரிபாகத்தின் புறச் செயல்களாம். ஆராதனை செய்கின்றவர்கள் சதாசாரமே வடிவெடுத்திருக்க வேண்டும். நல்லொழுக்கம் அவர்களிடம் ஓங்குமளவு—வழிபாடு மேம்பாடுடையதாகிறது. நல்லொழுக்க மில்லாதவனுக்கு ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் ஒருபொழுதும் கிடையாது. தெய்வத்தின் அபிஷேகத்திற்காகத் தூய நன்னீர் கொண்டுவரப்படுகிறது. அதைக் கொண்டு இறைவன் நீராட்டப்படுகிறான். மனத்தகத்து அன்பை வளர்ப்பதற்கு அறிகுறியாகப் புறத்தே ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் தெய்வத்திற்குத் திருமுழுக்குச் செய்விக்கப்படுகிறது. நீராடிய பிறகு நாம் ஓரளவு உள்ளத்தெளிவை எய்துகிறோம். அன்பைப் பெருக்குமளவு நமக்கு உள்ளத்தெளிவு உண்டாகிறது, என்பதை நாம் உணரமுடியும். பால், தயிர், நெய், பஞ்சாமிர்தம் முதலியவைகளைச் சொரிந்தும் அபிஷேகம் செய்வது வழக்கம். இவை யாவும் உடலை வளர்ப்பதற்கு நல்லுணர்வு ஆகின்றன. நல்லுணவு படைத்து உடல் வளர்ப்பது போன்று நல்லெண்ணங்களை எண்ணி உள்ளத்தை வளர்க்க வேண்டும் என்பது கோட்பாடு. எண்ணத்திற்கு ஏற்ப உள்ளத்தில் உயர்வோ தாழ்வோ உண்டாகிறது. நல்லெண்ணத்தை வளர்ப்பதே ஆலய வழிபாடாகிறது. மூர்த்தியை முழுக்காட்டியபிறகு அவரை அலங்கரிக்கின்றோம். ஆடை, ஆபரணம் முதலியன சாத்தி அலங்கரிப்பது வழக்கம். நம் உடல் வாழ்க்கையை எங்ஙனம் ஓம்புகின்றோமோ, அதே கோட்பாட்டைத் தெய்வத்தின்கண் காண அன்பர்கள் முயலுகின்றனர். தெய்வத்திற்கு உணவும் உடையும் தேவையானவை அல்ல. இவை யாவையும் கடந்த நிலையில் இருப்பது பரம்பொருள் ஆனால் இத்தகையவைகளை ஏற்று அங்கீகரித்து மகிழ்வுற்றிருக்கும் மூர்த்தியாகச் சாதகன் தெய்வத்தைப் பற்றிக் கருதுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மூலம் அவனுடைய மனது அமைதி அடைவதே, ஆலயவழிபாட்டின் பயனாகும். மூர்த்தியை அலங்கரித்தான பிறகு அவருக்கு இனிய நல்லுறவு நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது. இறைவன் அதை அங்கீகரிக்கிறார் என்றே அன்பன் உணருகின்றான். ஆத்மசாதனத்தில் முன்னேற்றம் அடைந்தவர்கள் உணவைத் தெய்வத்திற்கு நைவேத்தியமாகப் படைப்பதில் பொருள் மிக உண்டு என்று உறுதி கூறுகின்றனர். மிக அண்மையில் தோன்றி ஆலய வழிபாடு செய்து வந்த ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் இதற்கு அத்தாட்சி கூறுகிறார். அன்புடன் தெய்வத்திற்குப் படைக்கப்படும் நைவேத்தியத்தை மூர்த்தியினிடமிருந்து அருட்ஜோதி ஒன்று கிளம்பி வந்து ஸ்பர்சிக்கின்றது. அத்தகைய அருள் ஸ்பர்சம் ஆனபின்பே அது பிரசாதமாகின்றது. ஈசுவரப் பிரசாதமாக அன்பன் அதை ஏற்றுக் கொள்கின்றபொழுது, அவனுடைய அந்தக் கரணசுத்திக்கு அது பேருதவி புரிகின்றது. நைவேத்தியம் படைத்தானபிறகுதெய்வத்துக்கு ஸ்தோத்திரம், அர்ச்சனை முதலியன சமர்ப்பிக்கப்படுகின்றன. நம் வீட்டுக்கு வரும் நண்பர் ஒருவருக்கு நல்லுணவு படைத்தான பிறகு நாம் அவருடன் உரையாடுகிறோம். உரையாடி அவரை மகிழ்விக்கிறோம். அதே பாங்கில் ஆலயத்தில் கடவுள் வழிபாடு நிகழ்கின்றது. தெய்வத்துக்கு உணவுவகைகளை நைவேத்தியமாகப் படைத்தானபிறகு அவரை நாம் புகழ்ந்து பாடுகின்றோம்; போற்றுகின்றோம்; அர்ச்சிக்கின்றோம்; ஆராதிக்கின்றோம்; அதன்மூலம் நமக்கு மனப்பூரிப்பு ஏற்படுகிறது. ஆராதனையின் மூலம் ஆராதிக்கப்பெறும் தெய்வ சொரூபமாக படிப்படியாக நாம் மாறி அமைக்கின்றோம். நாம் மேலோராக மாறியமைவதே பூஜையின் விளைவு. மேலோராக மாறியமையவில்லை என்றால் நாம் செய்தது சரியான பூஜையன்று என்னும் முடிவுக்கு வந்தாகவேண்டும்.

**நைவேத்தியம் :**

கோயிலுக்குச் செல்கின்றவர்கள் வெறுங் கையுடன் செல்லலாகாது என்பது ஐதிகம். இக்கோட்பாடு இன்றும் பரந்த பாங்கில் வழக்கத்தில் இருந்து வருகின்றது. பெரியோர்களையும் குழந்தைகளையும் கடவுளையும் தரிசிக்கச் செல்கின்றவர்கள் வெறுங்கையுடன் போகலாகாது. நல்ல உணவுப் பொருள் ஏதேனுமொன்றை எடுத்துச் செல்லவேண்டும். உணவுப் பொருளின் மூலமாகவே குழந்தைகளோடு நாம் ஒற்றுமை பாராட்டமுடியும். அக் கோட்பாடு பிறகு பெரியோர்களுடைய இணக்கத்திற்கும் முதற்படியாகின்றது. கடவுள் வழிபாட்டிலும் அதே கருத்து அடங்கியிருக்கிறது. குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் எடுத்துச்செல்லும் பொருள்கள் அவர்களுக்கு விருப்பமானவைகளாக இருக்கவேண்டும். கடவுளுக்கு எடுத்துச்செல்லும் பொருள் தனக்கு மிக விருப்பமானதாக இருக்கவேண்டும். ஆலய வழிபாட்டுக்கு அது உகந்ததாகவும் இருக்க வேண்டும். தனக்கு விருப்பமான பொருளைக் கடவுளுக்குப் படைப்பதில் நலன் ஒன்று ஆத்ம சாதகனுக்கு விளைகின்றது. கடவுளுக்குப் படையாது தான் அதை உண்பதில்லை என்னும் கொள்கையிலிருந்து உணவுப்பொருள் மீது வைத்த பற்றுதல் குறைகிறது. கடவுளுக்குப் படைப்பதன் மூலம் அது தூய உணவாக மாற்றப்படுகிறது. அது ஈசுவரப் பிரசாதமான பிறகு மற்றவர்களுக்கெல்லாம் வழங்கியான பின்பே எஞ்சியிருக்கும் ஒரு சிறு பகுதியைத் தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். தெய்வத்தின் பெயரால் மன்னுயிர்களை எல்லாம் தன்னுயிர்போன்று கருதும் மனப்பான்மை இதினின்று உண்டாகிறது. எல்லா உயிர்களும் கடவுளுக்குச் சொந்தம். எல்லா உயிர்களையும் ஓம்புதல்மூலம் கடவுள் நன்கு வழுத்தப்படுகின்றார். உணவில்லாது கடவுள் வழிபாடு நிகழலாகாது என்பதன் கருத்து இதுவேயாம். மாந்தர் சேகரிக்கும் நல்ல உணவுப் பொருள்களில் பெரும்பகுதி ஆலயத்துக்கு வந்துவிடுவது முறை. கடவுளின் பெயரால் பிறகு அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்குப் பகுத்துக் கொடுக்கப்படுகிறது. கடவுளின் பெயரால் கொடுக்கப்படுகின்ற பொழுது கொடுக்கின்றவனுக்குத் தான் கொடையாளி என்கின்ற அகங்காரம் இருக்காது ஈசுவரப்பிரசாதத்தை ஏற்கின்றவர்களுக்குப் பிறரிடமிருந்து பொருளை ஏற்பது இகழ்ச்சி என்ற மனப்பான்மையும் வராது. கொடுப்பவரும் ஏற்பவரும் கடவுளுக்குரிய வராய் விடுகின்றனர். மனப்பான்மை மேன்மையடைவதற்குப் பொருளைக் கடவுளுக்கு நைவேத்தியமாகப் படைப்பதே சிறந்த உபாயமாகும். பலர் கருதுகின்ற படி இதில் பொருள் நஷ்டமில்லை. பொது மக்களுக்குப் பொருள் நன்கு விநியோகிக்கப்படுகிறது.

**கிரியைகள் :**

நமது ஆலயங்களில் கையாளப்படும் கிரியைகள் தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளன. தீப ஆராதனையை அதற்குச் சான்ருக எடுத்துக் கொள்வோம். அஞ்ஞானம் என்னும் திரை நீங்கியவுடன் ஜோதிப் பிழம்பாகப் பல விளக்குகள் கொண்ட அடுக்குத் தீபம் ஒன்று சுற்றப் படுகிறது. அஞ்ஞான இருளினின்று ஞான பூமிக்குள் பிரவேசிக்கின்ற ஆத்மா ஒரே ஒளிப்பிழம்பைக் காண்கிறது. அந்த ஒளிப் பிழம்பில் அவன் ஒன்றித்து விடுவதற்குச் சிறிது நேரமாகின்றது. பரம்பொருள் என்றைக்கும் அணையாத ஆத்மப் பிரகாசமாயிருக்கிருர். அடுக்குத் தீபத்தில் கணக்கற்ற விளக்குகள் இருக்கின்றன. அதன் பிறகு காட்டப்படும் தீபங்கள் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றன. கடைசியில் ஒரு தீபத்தில் வந்து ஆராதனை முற்றுப்பெறுகிறது. இதன் அடிப்படைத் தத்துவம் ஏகமாயுள்ள பரமாத்மனே எண்ணிறைந்த ஜீவாத்மாக்களாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிருர் என்பதே யாம். கடவுள் ஆராதனையில் பஞ்சேந்திரியங்களும் இடம் பெறுகின்றன. பஞ்சேந்திரியங்கள் பொதுவாகப்பிரபஞ்சத்தை விஷயமாக்குதற்கென்று அமைந்தவை. அவ்வைந்து பொறிகளையும் பரமன் நுகர்தற்கென்று பயன்படுத்துங்கால் அது நல்ல ஆத்ம சாதனமாகிறது. வேத ஆராதனையில் கண்கொண்டு காண்பது ஜோதி சொரூபமான பரம்பொருள். காதால் கேட்பது அவனிடத்திலிருந்து உண்டாகும் நாதம். அதற்குச் சின்னமாக மணியோசையும் சங்கு வாத்தியமும் அமைகின்றன. வேதமோதுதலும் ஆங்கு நடைபெறுகிறது. மூக்கால் முகர்வது ஆராதனையோடு சம்பந்தப்பட்ட நறுமணம் கமழும் தூபமாகும். ஸ்பரிசித்து இன்புறுதற்கு பரமனுக்குச் சாத்திய பூமாலை தரப்படுகிறது. நாவினுல் சுவைத்து வணங்குதற்கு அவனுடைய பிரசாதம் வழங்கப்படுகிறது. இங்ஙனம் பஞ்சேந்திரியங்களைக் கொண்டும் பரம்பொருளே நுகரப்படுகிருர். இந்த நிகழ்ச்சியில் ஆலய வழிபாடு உச்ச ஸ்தானம் பெற்று விடுகின்றது. உலகை அறிதற்கென்று அமைந்த பொறிகளைப் பரமனை அறிதற்கென்று பயன்படுத்துமிடத்து அது நல்ல பழக்கமாகிறது.

கோயிலைப் பற்றிய விரிவான தத்துவம் சிதம்பரம் போன்ற ஆலயத்தில் அமைந்திருக்கிறது. உபாசனைக்குரிய மூர்த்தியாகிய நடராஜா நான்கு ஸ்தம்பங்களை உடைய ஒரு கொலு மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார். அந்த நான்கு ஸ்தம்பங்கள் நான்கு வேதங்களின் சின்னமாகும். அதற்குச் சற்று முன்பு ஆறு தூண்களுடைய மண்டபம் உள்ளது. ஆறு சாஸ்திரங்களுக்கு அவை சின்னமாய் அமைந்துள்ளன. அதற்குச் சற்று வெளியே பதினெட்டு தூண்களையுடைய மண்டபம் இருக்கிறது. பதினெட்டுப் புராணங்கட்கு அவை அறிகுறியாய் அமைந்துள்ளன. நடராஜாவின் அருகில் செல்லுதற்கு ஐந்து படிகளின் மேல் ஏறியாக வேண்டும். சிவனுடைய ஐந்து திருநாமமாகிய பஞ்சாட்சரம் அல்லது ஐந்தெழுத்தின் சின்னமாக இந்த ஐந்து படிகள் அமைந்துள்ளன. நடராஜாவுக்கு இடது புறம் சிவகாமியம்மையார் எழுந்தருளியுள்ளார். வலதுபுறம் சிதம்பர ரகசியம் அமைந்திருக்கிறது. இதிலும் மேலான கோட்பாடு புதைந்திருக்கிறது. பராசக்தியின் அருளால் சகுணப் பிரம்மமாகிய நடராஜாமூர்த்தியின் தரிசனம் கிட்டுகிறது. சகுணப்பிரம்மம் பிறகு நிர்க்குணப் பிரம்மத்துக்கு வழிகாட்டுகிறது. அது மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியைக் கடந்து இருப்பதால் ரகசியம் என்று இயம்பப் படுகிறது. நிர்க்குணப் பிரம்மத்தை யடைந்த ஜீவன் திரும்பவும் ஜீவபோதத்துக்கு வருவானாகில் சகுண பிரமத்துக்கு வந்து கீழிறங்கி வருகிறான். சிதம்பரத்தில் நிகழும் தீபாராதனை இக் கோட்பாட்டை விளக்குகிறது.

**மனப்பான்மை :**

மனம், மொழி, மெய்யாகிய திரிகரண சுத்தியுடன் ஆலய வழிபாட்டுக்குப் போக வேண்டும், என்பது கோட்பாடு. ஆலயத்துக்குள் நுழையும்பொழுதே உலக விவகாரங்களை ஒதுக்கிவிடவேண்டும். கடவுளைப் பற்றிய சிந்தனையே சித்தமிசை குடிகொண்டிருக்க வேண்டும். பதைபதைப்புக்கோ, வேகம் நிறைந்த நடமாட்டத்துக்கோ ஆங்கு இடமில்லை. அமைதியும் சாந்தமும் வடிவெடுத்தவனாக வழிபடுபவனை விடுகிறான். கோயிலுக்குள் கூச்சல் இட்டுப் பேசுகின்றவர்கள் வழிபடுபவராகார். கோயிலின் புனிதத்தையும் ஒருவிதத்தில் அவர்கள் பாழ்படுத்திவிடுகின்றனர். ஒருவரோடொருவர் பேசாதிருந்து வழிபாடு செய்வது சாலச் சிறந்தது. வழிபாட்டை முடித்தானபிறகு ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்திருந்து தியானம் பண்ணுவது முற்றிலும் அவசியம். பல பெரியோர் ஆழ்ந்து எண்ணிய உயர்ந்த எண்ணங்கள் நிறையப் பெற்ற இடம் ஆலயம். ஆங்கு வழிபாடு செய்பவன் அமைதியுற்று அமர்ந்திருப்பானாகில் அந்த உயர்ந்த எண்ணங்கள் அவனது மனத்தகத்துப்பிரதிபலிக்கும். அதுவே ஆலய வழிபாட்டினின்று வழிபடுபவன் பெறுகின்ற பெரிய பேறு ஆகும். இத்தகைய மனப்பான்மையுடன் எத்தனைபேர் ஆலயத்துக்குள் வந்து வணங்குகிறார்களோ அதற்கேற்ப ஆலயத்தினுள் ஏற்கெனவே அமைந்துள்ள அருள் பன்மடங்கு பெரியதாகின்றது. அருளைத் தானே அடைவதன் மூலம் ஆலயத்தின் கண் அன்பன் அருளைப் பெருக்குகின்றான். ஆலய வழிபாட்டின் ஒப்பற்ற பயன் இதுவேயாம்.

**சுவாமி சித்பவானந்தர்**
திருப்பராய்த்துறை,
தமிழ்நாடு.

## "நமது செயலும் அதன் பயனும்"

"நாம் செய்துவரும் செயல்கள் நல்லனவா அல்லனவா என்பதை இறைவன் அறிவான். நாம் புரியும் நற்செயல் அல்லது குற்றம் இறைவன் ஆணையில் இயங்கி வரும் ஒரு நுண்ணிய அமைப்பின் மூலமாகப் பதிவு செய்யப்படுகின்றன. அதுவும் அப்போதைக்கப்போதே பதிவு செய்யக்கூடியதாக உள்ள அமைப்பு நாம் செய்யும் புண்ணியச் செயல்கள் வரவாகவும், பாபச் செயல்கள் கழிவாகவும் பதிவாக்கப்படுகின்றன. நாம் அனுபவிக்கும் இன்பங்களும், சலுகைகளும் கூட இக்கணிப்பில் கழிவினத்தில் சேர்க்கப்படுவனவாகும். அதேபோல நாம் செய்யும் பாவச்செயல்களும் வரவினத்தில் கழிவாகக் கொள்ளப்படுவனவாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றதனாலாய பயன்

பொருட்பரப்பின் எம்மருங்கினையும் தவறவிடாது விளக்கியருளிய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

எனக் கூறி, மெய்யுணர்வுடையோனாகிய இறைவனின் இன்பத்திருவடிகளை வணங்காராயின், நூல்களைக் கற்றதினால் ஆயபயன் யாதுமில்லையென அறிவுறுத்தினர். கல்வியின் பயன் உண்மையறிவு பெறுதலேயாம். மெய்யறிவு பெற்றோர் முழுமுதற் பரம் பொருளின் திருவடிகளைப் பற்றிப் பிறவிக்களை தீரவே முந்துவர். அவர்கள் உலக நிலையாமையினை நன்குணர்கின்றாராதலால் உலகப்பற்றை இலகுவில் நீக்கி, ஆத்ம ஞானம் பெற்றுய்கின்றனர். அவ்வளவு உயர்ந்த அறிவைப் பெறாவிட்டாலும், ஆத்ம வளர்ச்சிக்கு வேண்டிய அறிவைச் சிறிது சிறிதாக வளர்த்துக்கொள்ள வேண்டியது மக்கள் எல்லார்க்கும் இன்றியமையாத கடமையாகும்.

நாம் உலக முன்னேற்றத்தையும், உத்தியோக பதவிகளையும் இலட்சியமாகக் கொண்டு, அதற்கு வேண்டிய கல்வியை ஐந்து வயது முதல் சிரமமும் களையும் நோக்காது முயன்று கற்கின்றோம். அக்கல்வியும் வேண்டியதே. ஆனால் தனியே அதில் மூழ்கிவிடக்கூடாது. அக் கல்வியால் பட்டம், பதவிகளைப் பெற்று உலகில் முன்னேற்றலாம் என்பது உண்மை. ஆனால் அம் முன்னேற்றம் நிலையானதன்று. இன்றோ, நாளையோ, இன்னும் சில காலத்திலோ நமது அனுமதி பெறாமலே மரணம் நம்மைத் தழுவிக்கொள்ளும். நமனார் நமதுயிரைக் கைப்பற்றும் அந்த நேரத்தில் நாம் அழுந்திய உலகமும், தேடிக் குவித்த செல்வமும், அன்பு செலுத்திய உற்றார், பெற்றார், உறவினரும் உதவமுடியாது, அப்பொழுது நாம் தனியராய் நின்று தத்தளிக்கவே நிகழும். அந்நேரம் திடீரென இறைவன் திருவடிகளைப் பற்றிநிற்கவேண்டுமென்னும் நினைவு தோன்றாது, இளமைப் பருவம் முதல் இறைவன் திருவடியை மனதில் பதித்துப் பக்தியோடு வழுத்தி வந்தோருக்கே இறக்கும் தறுவாயிலும் முதல்வனருள் நினைவிற்றோன்றி அபயம் அளித்து, அச்சம் தீர்க்கும். ஆகையால் எமக்கும் அப்பரம்பொருளுக்குமிடையே தொடர்பையும், அப்பரம்பொருளுக்கு எம்மீதுள்ள பரிவையும், மெய்யறிவாலுணர்ந்து, அன்பு செலுத்தி, இறைவனிடத்து நம்மை ஒப்படைத்து நிற்போமாயின், அவரருள் நம்மை மேவி, ஆட்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. அப்பொழுது இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும் தெய்வீக வாழ்வு வாழலாம். இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் இறைவன் திருவடிக்கீழ் வாழலாம். இறப்புக்கு அஞ்ச வேண்டியதுமில்லை.

அம் மெய்யறிவைப் பெறுவதற்கு வாய்ப்பான பிறவி ஆறறிவுடைய இம் மனிதப் பிறவியேயாம். இப்பிறவி தப்பினால் வேறெப்பிறவியிலும் அப்பேற்றை அடைய முடியாது. ஆகையால் இப்பிறப்பினில் முற்றிலும் மெய்ஞ்ஞானிகளாக முடியாவிட்டாலும், அடுத்த அடுத்த பிறவிகளிலாவது மெய்யறிவு பெற்று, முழுமுதற் கடவுளை அடைய இப்பொழுதே முயல வேண்டும். மனதையுடையவன் மனிதன். கணப்பொழுதும் சும்மா இருக்காது ஒன்றைவிட்டொன்றைப் பற்றிச் சுழலும் மனதைக் கீழ் நெறியில் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாது, இறைவன்பாற் செல்ல நாடொறும் பயிற்சி அளித்து வந்தால், சுலபமாக ஆத்மீகத்துறையில் முன்னேறலாம்.

மனவொடுக்கத்திற்கு ஆலயவழிபாடு சாலவும் சிறத்ததாகும். அதற்காகவே அறிஞர் ஆலயங்களை அமைப்பித்தனர். தத்துவங்களை உணர்த்தும் திருவிளக்குப் பூசையைக் கண்ணுற்று மனமொடுங்கியும், ஊனையும் உயிரையும் உருக்கும் தேவார, திருவாசக ஞானப் பாடல்களைக் கேட்டு மனமுருகியும், அர்த்தபுஷ்டி நிறைந்த சமயச் சொற்பொழிவுகளைக் கேட்டு மெய்யறிவு பெற்றும், மக்கள் பக்திநெறிச் செல்வதற்குத் திருக்கோவில்களே வாய்ப்பளிக்கின்றன. ஆலயங்களில் ஆற்றப்பட வேண்டிய பணிகள் செவ்வனே அறிஞர் அறிவுறுத்தியவாறு ஆற்றப்பட்டால் அங்கே சென்று மக்கள் வழிபட்டுப் பக்திப் பெருக்கில் மூழ்கிச் சுற்றதனுலாய பயனை அடைவார்களென்பதில் ஐயமில்லை.

தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலயம் சிறந்த பணிகளையும், கிரமமான பூசை ஒழுங்கினையும் கொண்டு விளங்குவதால், செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் பெருந்தொகையான மக்கள் வந்து குவிந்து இறைவியைப் பயபக்தியோடு வணங்கிக் கற்றதனுலாய பயனைப் பெறுகின்றுர்கள். பெண்பாலார் கூட்டங் கூட்டமாக வந்து துர்க்கா அன்னையைத் தொழும் காட்சியையும், துர்க்காதேவியின் அருள்மிகு திருக்கோலத்தினையும் கண்ணுறுபவர்கள் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்னும் அப்பர் சுவாமிகள் திருவாக்கினையே நினைவுறுவார்கள். இவ்வாலயம் இன்னும் சிறந்த பணிகளையாற்றி மேலும் மேலும் பொலிவுற்று, அருளொளி விளக்காய்த் திகழவேண்டுமென இறைஞ்சி நிற்பாம்.

சிவநாயகி தியாகராசா
தெல்லிப்பழை

"கடவுள் இல்லை என்றே, கடவுளை முட்டாள் என்றே, கடவுளை நிந்தித்தோ ஒருவன் எவ்வளவு தூற்றினுலும் அதை அவர் லட்சியம் செய்ததில்லை. ஆனல் கடவுள் பக்தனுக்கு ஒருவன் தீங்கு நினைந்தால் அவர் பொறுக்கமாட்டார். சூரியனின் உஷ்ணத்தைத் தாங்கமுடியும். ஆனல் சூரியனின் வெப்பத்தைத் தாங்கும் பொடிமணலின் உஷ்ணத்தை நாம் கால்களால் தாங்கமுடியாது. அதுபோல, பிரகலாதனுக்கு இழைத்த கொடுமையைத் தாங்கமுடியாமல்தான் கடவுள் நரசிம்மாவதாரம் எடுத்தார்."

—கிருபானந்தவாரியார் வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரோடும் வீதி

பூரணத்துவம் அடைவதே மக்கள் வாழ்க்கையின் இலட்சியமாக அமைகின்றது. எப்போதும் இனியானுக்கு கைப் போதும் மலர்தூவி, ஐம்புலனும் அகத் தடக்கி, பொன்னையும் மணியையும் பறலைக் கற்களுடன் ஒப்ப நோக்கும் சூழ்நிலை எய்தி, இறைவன் புகழ்பாடி, அவனுடன் ஒன்றிப் பூரணத்துவம் எய்திய நாயன்மாரதும், ஆழ்வாரதும் திருச்சரிதங்களைப் பெரிய புராணமும், திவ்வியப் பிரபந்தமும் எம் முன் விளக்குகின்றன. நிறைமதி நன்னாளில் ஞான ஒளி பெற்ற சித்தார்த்தனின் வாழ்க்கை புத்தனாகப் பூரணத்துவம் பெற்று ஒரு புதிய சமயத்தையே தோற்று வித்தது.

கல்கத்தா வீதிகளில் கேட்பாரற்றுக் கிடக்கும் இலட்சோபலட்சம் ஏழைகளுக்கு அன்பென்னும் அமுதைத் தன் புன்னகையின் ஒளியில் சிந்தி, அவர்களில் யேசுவைக் கண்டு மகிழும் ஒரு முருகியல் வாழ்வில் பொங்கி நிறையும் அன்னை திரேசாவின் தொண்டென்னும் வாழ்வு இன்று சரியைத் தொண்டிற்குக் கலங்கரை விளக்கெனத் திகழ்கிறது.

எனினும் உலகில் தோன்றி மறையும் புல்லாயிரக் கணக்கான மக்கட் பரப்பில் எதிர்நீச்சலிட்டு வென்று முழுமைபெற்ற இவர்களைப் போன்றோர் எமக்கு வழிகாட்டிகளாக அமைய முடிகின்றது. இதனாலேயே மக்கள் வாழ்வை நன்னெறிப்படுத்துவதையே நோக்காகக்கொண்ட சமயங்கள் தத்தம் முறையில் கோவில்களை அமைத்து புடை புரண்டு ஓடும் மக்களின் உள்ளமெனும் காட்டில் திசைதிருப்பிக் கால்வாய் மூலம் பயிருக்குப் பாய்ச்சும் அரும் பணியை மேற்கொண்டுள்ளன.

தல விசேடமோ, தீர்த்த விசேடமோ அற்றதொரு சிறு கிராமத்தின் ஒரு சிறு கோயில் இப்பணியில் மேம்பட்டு நின்று, ஈழவள நாட்டில் மாத்திரமல்ல, உலகின் மற்றைய பாகங்களிலும் வதியும் மக்களையும் தன்னிடம் ஈர்த்துக்கொண்டு இருப்பது துர்க்காதேவி ஆலயத்தின் தனித்துவமே. மகிடாசுர மர்த்தனியாகிய துர்க்காதேவி துஷ்ட நிக்கிரக ரூபமாக விளங்குவதாயினும், தெல்லிநகர் உழுகுடைப் பதியில் எழுந்தருளிய மூர்த்தியாகிய இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் மூன்று வெவ்வேறு சக்திகளது ஒருமித்த வடிவாய், தன் அறியவொண்ணுச் சக்தியால் உயிர்ப் பூட்டி, தண்ணென் கருணையால் இஷ்ட பரிபாலனம் செய்யும் அருள் வடிவாய், துன்பம் துடைக்கும் புன்முறுவல் பூத்த செவ்விய சொரூபியாய் கொலுவீற்றிருந்து, தன் அடியவரை ஆற்றுப்படுத்தும் கம்பீரம் தனித்துவம் வாய்ந்தது.

தேவியின் ராசாங்கத்தில் கட்டமையுடன் கூடிய வழிபாட்டிற்கும், அன்பால் ஒடுங்கிய தொண்டிற்கும் மாத்திரமே இடமுண்டு. மற்றையவை எல்லாம் தூரக் கைகட்டி நிறுத்தப்பட வேண்டியவை. எழுதா மறையால் நிலவும் பல நல்ல கோட்பாடுகளால்,ஒழுங்கான பூசை முறைகளால், மஹோற்சவ காலங்களில் கூட இடிபடுதல், சொற்போர் நிகழ்த்தல் முதலிய அசிங்கங்கள் இல்லாத சித்தமொடுங்கிய வழிபாட்டால், சாதி வேறுபாடற்றதொரு சமத்துவ நிலையால், சிறிது சிறிதாக இக்கோவிலை மையமாகக் கொண்டு சுற்றுக் கிராமங்களில் வதியும் மக்கள் தம்மைத் தாமே திருத்திக்கொள்வது கண்கூடு.

இன்று உலகில் முக்கிய பிரச்சினையாகத் திகழ்வது மாணவர் சலனம். வேலை வாய்ப்பு, வருவாய் இரண்டும் இன்மை இவர்களது சலனத்திற்கு அடிப்படைக் காரணமாகும். எனினும் தேவி மாணவர்களைத் தன் ஆலயத் திருப்பணி வேலைகளுக்குக் கடுமையாய் உழைக்கச்செய்து, அதற்கு ஈடாகத் தன் புன்னகையின்மூலம் அவர்கள் உள்ளத்தில் பேரமைதியையும், மாறாத நம்பிக்கையையும் நிலவச் செய்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெரும் பிரச்சினைக்கும் வழிகாட்டுகிறுள். நம்பிக்கையுடன் ஒருவன் சரியான நெறியில் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் அவனைப் பூரணத்துவம் நோக்கி முன்னேறச் செய்யுமென்பது முனிபுங்கவர் யோகநாதனின் திருநோக்கு. மாணவியளோ சிங்கப்பூர் சுப்பர் மார்க்கட்டே கோவிலுக்குள் புடைபெயர்ந்தது போன்று, வண்ணச்சேலைகள் காற்றில் பறக்க, மணமற்ற மலர்களைத் தலையில் சூடி, மணமுள்ள மாலைகளைத் தட்டிலேந்தி, அன்னமென மஞ்ஞையென அடிபெயர்த்து, அம்பாள் அருளை வேண்டிவருவது இவ்வாலயத்திற்குத் தனிச் சிறப்பாகும். இதை அவதானித்த வேற்றுச் சமயத்தவர்கூட "செவ்வாய்க்கிழமைகளில் உங்கள் ஊர்ப் பெண்கள் தட்டேந்திக்கொண்டு கோவிலுக்குச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். சிகிரியா அழியாச் சித்திரங்களை நினைவூட்டுகின்றன", என்று குறிப்பிடுமளவிற்கு இவர்களது சீரிய உடையிலும், உயர்ந்த நோக்கிலும் இவ்வாலயம் ஒரு புரட்சியைச் செய்திருக்கின்றது எனலாம்.

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தன் சுயசரிதையில் தமிழகத்தில் பிராமண ஆதிக்கமும், மதத் துவேசமும் உச்ச கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் சமயச் சார்பு உடையவர்க்கும் இல்லாதவர்க்கும் இடையே நடந்த ஒரு சர்ச்சையை மிக ரசமாகக் கூறுகின்ருர். அதில் ஒரு பாடல் இங்கு நோக்கத்தக்கது.

"ஏரோட்டும் மக்களெலாம்
ஏங்கித் தவிக்கையிலே
தேரோட்டம் ஏதுக்கு
தியாகராசா"

எனத் திராவிடப் பெரியார் ஒருவர் எழுதிய பாடலுக்கு மாற்ருக,

"ஏரோட்டும் மக்களெல்லாம்
ஏங்கித் தவிக்கையிலே
காரோட்டம் ஏனுக்கு"

என அப்பெரியாரைக் குறிப்பிட்டுக் கேட்டிருந்தார்கள் எதிர்க்கட்சியர்.

மேற்பரப்பில் விளையாட்டுப் பாட்டாகத் தோன்றினுலும் நன்ருகச் சிந்தித்தால் அரசியலிலும், தம் மதங்களிலும் நாம் அறவே ஒழிக்கவேண்டிய ஒரு விடயம் இதற்கு அடிப்படையாக அமைகிறது. பொதுமக்கள் தரும் நிதியை நாம் நமக்கு என்று எடுத்துக்கொள்ளாமல் அவன் எதற்குக் கொடுத்தானே, அதற்குப் பயன்படுத்தவேண்டிய கட்டியத்தை இது உணர்த்துகின்றது. அடிமைத் தளையில் அல்லலுற்ற ஒரு உபகண்டத்திற்கு சாத்வீகப் புரட்சியின்மூலம் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த காந்தியடிகளின் வாழ்வு முழுமையுற்றது, பொதுமக்கள் சொத்தை அவர் கையாண்ட சத்திய நெறியால் எனலாம்.

தேவிக்கென்று உருவாகி, கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் இச்சித்திரத்தேர் பொது மக்களின் வியர்வைத்துளிகளைக் கலன்களாகக் கொண்டு, தேர்த் திருப்பணிக்குழுவின் உழைப்பால் அவை வலுவான இழையங்களாக நெய்யப்பட்டு, சிற்ப ஆசாரிகளது கைத்திறனல் உறுப்பமையப்பட்டுத் திருவருளினுல் பூரணத்துவம் பெற்றதாகும். கசங்கிய சேலையின் முடிச்சிலிருந்து ஆர அமர உருவப்படும் பத்து ரூபா நோட்டும், அவள் தந்த செல்வத்தை அனுபவிக்கும் வள்ளல்களின் ஆயிரம் ரூபாக் கட்டும் சம அந்தஸ்துப் பெற்றுச் சதம் தப்பாது அம்பாளின் திருப்பணிக்கு ஈடு செய்தது பொது மக்களுக்கு உவகையும், நிர்வாகத்திற்குப் பெருமையும் கொடுக்கும்.

நிலையான பொருட்கு (ஆத்மா) சலனத்தைக் கொடுப்பதையும் (தேர்-உடல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகன்ற பெருவட்டம் குறுகிக் குறுகின் பூரணத்துவத்தை நோக்கி ஒருமைப்பாட்டுடன் உயரும் தத்துவத்தை விளக்குவதாயும், இகலோக இன்பத்தை முதற் தட்டு விளக்க, இரண்டாந்தட்டு கிங்கரர், கந்தர்வர் வாழ்க்கை முறையை விளக்க, மூன்றுவது தட்டு இறைவனின் லீலைகளை எடுத்து இயம்புவதாய் அமையுமெனவும் தேரின் விளக்கம் பலவாகக் கூறப்படினும். அன்பில் மாத்திரம் திளைக்கும் அடியவர்க்குத் தத்துவங்களும் விளக்கங்களும் வேண்டப்படாதவை. 'மாயோனை நோக்கி மனமென்னும் தேரேறிச்'' செல்லும் ஆழ்வாரின் அடியொற்றிச் செல்லும் அம்பாள் அடியவர்க்கு தம் உள்ளத்தில் நீக்கமற வீற்றிருக்கும் தம் அன்னையை, ஊர்திகளில் மிக உயர்ந்ததும் நுண்ணிய வேலைப்பாடுகளும், கலைத்திறன் மிகுந்ததுமான அழகிய தேரில் அருள்பாலித்து, உலவிவரச் செய்யும் ஒரு உன்னத விழாவே தேர்விழா ஆகிறது.

கல்லும் முள்ளும் நிறைந்த பாதையை நீத்து, தன் சித்திரத்தேர் பவனி வருதற்கு, தன் அன்பரின் உள்ளமெனும் மென்மலர்ப் படுக்கையை வீதியாகக் கொண்டதே, சரியை, கிரியை, யோக, ஞானமார்க்கங்களில் பூரணத்துவத்தை நோக்கி எம்மை ஆற்றுப்படுத்திக் கொண்டிருக்கும் தேவியின் திருவருளின் பூரணத்துவமாகும்.

**திருமதி சகிதேவி கந்தையா**
(பொருளாளர்
துர்க்காதேவி ஆலயம்
நிர்வாகசபை)

உருகி உருகி நெக்குநெக்குள்
உடைந்து கசிந்திட் டசும்பூறும்
உழுவ லன்பிற் பழவடியார்
உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப்
பெருகு பரமா னந்தவெள்ளப்
பெருக்கே சிறியேம் பெற்றபெரும்
பேறே ஊறும் நறைக்கூந்தல்
பிடியே கொடிநுண் நுசுப்பொசிய
வருகுங் குமக்குன் றிரண்டேந்தும்
மலர்ப்பூங் கொம்பே தீங்குழலின்
மதுரங் கனிந்த பசுங்குதலை
மழலை அரும்பச் சேதாம்பல்
முருகு விரியும் செங்கனிவாய்
முத்தம் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே.

**— மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்**

## அல்லல் தீர்ப்பது

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்புமென் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே.

**—அபிராமி அந்தாதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரிலே

ஒரு கோயிலில் தேரோட்டம் என்ருலே, அக்கோயிலில் பெரியவிழா நடக்கிறது என்று மக்கள் கூடுவதைக் காணலாம். இது, தேர்த்திருவிழா மிக்க சிறப்புடைய தொன்று என்பதையே காட்டுகிறது. தமிழ்நாட்டில் சிதம்பரம், மதுரை, திருவண்ணுமலை, திருப்பதி, இராமேஸ்வரம் முதலிய கோயில்களில் வருடத்தில் பல தடவைகள் தேரோட்டம் நிகழ்வதை அறிகிருேம். ஈழத்திலும் இந்துமதக் கோயில்கள் பலவற்றில் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. சிற்ப வேலைப்பாடுகளமைந்த அழகிய தேரின்மீது, தெய்வங்களின் திருவுருவங்களை வைத்து, வீதிவலம், ஊர்வலம் வரச்செய்வது அந்த ஊருக்குச் சிறப்பையும், புனிதத்தன்மையையும் அளிக்கிறதென்றே கூறவேண்டும்.

தேரினது அமைப்பை உற்றுநோக்குமிடத்து அது ஒரு சிறிய கோயில் போன்றிருப்பது தெரியவரும். இதன் அடிப்பாகத்தில், பூலோக வாழ்க்கை, ஆகாய வாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை ஆகியவற்றைச் சித்திரிக்கும் அழகிய உருவங்களைக் காணலாம். தெய்வ வடிவங்களை மூஷிகம், ரிஷபம், மயில், குதிரை முதலிய வாகனங்களில் எழுந்தருளச்செய்து, வீதிவலம் வருவதைவிட கோயிலே போன்ற உருவமைந்த தேரில் எழுந்தருள்வித்து வலம்வரச்செய்வது, பரம்பொருள் தம் பரிவாரங்களுடன் தமது கோயிலிலிருந்தபடியே, ஒவ்வொருவரது வீட்டுக்கும் வந்து, அவர்களனைவரதும் தீவினைகளை அழித்து அருள்பாலிக்கிறது என்ற கருத்தை இத்தேர்த்திருவிழா காட்டுகிறது. கோயிலினுள்ளே சென்று வழிபட இயலாதிருக்கிற சகலரதும் நலன்கருதித் தெய்வங்களை அவர்களது அண்மைக்குக் கொணரும் இவ்விதத் திருவிழாக்களை ஏற்படுத்திவைத்த நம் முன்னேர் பெரிதும் போற்றப்பட வேண்டியவர்களே.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'

'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'

என்பனவெல்லாம், பெற்றெடுத்துப் பேணி வளர்த்து, அன்புகாட்டி ஆதரவு நல்கும் தாயினுடைய சிறப்புக்களை நன்கு காட்டுகின்றன. தந்தையை அறியமுன்னரே தாயைத்தானே காண்கிறது குழந்தை. மனம் விட்டுப் பேசுவதும் பழகுவதும் தாயிடம்தானே! இயற்கையோடொப்ப நோக்கினுலும் சிவமாகிய தந்தையிலும் பார்க்க, சக்தியாகிய தாயிடம் நெருங்கி அன்பு கொள்வதும் பக்தி செய்வதும் ஒரு பக்தனுக்கு அமைந்தஇயல்பாகிறது. பூரணியும், புராதனியும் 'சுமங்கலையும் ஆகிய தேவியானவள், 'பின்னையும் கன்னி என மறைபேசும் ஆனந்த ரூபமயிலே' என்று அழைக்கப்படுகின்ற அதேவேளையிலே, அகிலாண்ட கோடியீன்ற அன்னை எனப் பக்தர்களால் புகழவும் படுகின்ருள். 'அம்மைநீ' என்றும், 'தாயவன் காண்' என்றும், 'ஈன்ருளுமாய்' என்றும் பரம்பொருளை அடியார்கள் பாராட்டியுள்ளமையைப் பார்க்கும்போது, தாயைத் தெய்வமாகப் பேணுவது, உலகநியதிக்குட்பட்டதென்பதும், இந்த நினைவின் முதிர்ச்சியால் தெய்வத்தைத் தாயாக நினைத்துப் போற்றுமொரு நிலை மக்களை ஆட்கொள்ளுகிறதென்பதும் பெறப்படுகின்றது.

'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலஎனக்
கென்றிரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே'

என்கின்ருர் தாயுமானசுவாமிகள்.

தெய்வத்தைத் தாயாக நினைத்துப் பக்திசெய்வது சக்தி வழிபாடாகும். பெற்றவளோடு பிள்ளை பழகுவதற்குச் சட்டதிட்டம் ஒன்றுமே கிடையாதல்லவா! அவ்வாறே தாயாகத் தெய்வத்தை வழிபடுவதற்கும் சட்டதிட்டங்கள் அவசியமின்று. பிள்ளையும் தாயும் என்ற தொடர்பில் அன்புப் பிணைப்புண்டு தாயாகத் தேவியை வணங்குவதனுல் அவளது பேராற்றலை நாம் உணர முடிகிறது. இப் பிரபஞ்சத்தை நிலைகுலையாமல் இயங்கவைப்பது அன்னை பராசக்திக்கு ஒரு விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். அவளே படைத்தல், காத்தல், அழித்தலைச் செய்யும்போது, முறையே, பிராம்மணி, வைஷ்ணவி, ருத்ராணி எனப் பெயர் பெறுகின்றாள். தேவியின் மூர்த்தி பேதங்களில் முக்கியமானவை துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி என்னும் மூன்றுமாகும். எங்கும் நிறைந்த அன்னை பராசக்தி. ஈஸ்வரனுக்கு ஒப்பாகும்போது துர்க்கை எனப் போற்றப்படுகின்றாள். துர்க்காதேவியானவள் ஆண்டுக்கொரு தடவை பூவுலகிற்கு எழுந்தருளுகின்றாள் என்றும், அப்படி வரும்பொழுது தனது அம்சங்களான லட்சுமி, சரஸ்வதி, கணேசன், கார்த்திகேயன் ஆகியோருடன் சேர்ந்தே வருகை தருகிறாள் என்றும், இவளுடைய வருகை புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி காலமாகுமென்றும் பேசப்படுகின்றது.

தனிமனித வாழ்வும், சமூகவாழ்வும் சிறப்புற்றிருக்கத் தைரியம் வேண்டியது என்பதை வீரத்தின் சின்னமான துர்க்காதேவி விளக்குகின்றாள். அவளுடைய ஆணை, இராணுவ வீரனுடைய ஆணை போன்றது. ஆதலால் அந்த ஆணையை மீறி யாருமே வாழமுடியாது. இவ்வுலக வாழ்க்கையை நன்கு நடத்தச் செல்வமும் வேண்டியது என்பது.

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என வள்ளுவர் பெருமான் கூறியிருத்தல் நோக்கத்தக்கது. வீரமும், செல்வமும் ஒவ்வொருவரையும் முழுமனிதனுக்கிவிடா. ஆகவே, மனிதரில் மனிதனாக வாழக் கல்வி அவசியம் என்பது புலனாகின்றது. கல்வியும் சேரும்போதுதான் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான். செம்மையான வாழ்வுக்குத் தேவையான வீரம், செல்வம், கல்வி என்னும் மூன்றினையும் தந்து, நமது வாழ்வு வளம்பெறச் செய்யவே, உலக மாதாவான துர்க்காதேவி, லட்சுமி, சரஸ்வதி சகிதம் மண்ணுலகுக்கு வருகிறாள். இவ்விருவரும் போதாதென்று கணேசனையும், கார்த்திகேயனையுமல்லவா உடனழைத்து வருகிறாள். இகம், பரம் இரண்டினுக்கும் உற்றதுணையாகிய வாக்கும், மனமும், ஞானமும், நல்லறிவும் தருபவன் கணேசன். அறிவைச் செயலாக மாற்றும் ஆற்றல் கார்த்திகேயனுக்குண்டு. வீரம், செல்வம், கல்வி, ஞானம், செயற்திறன் ஆகிய யாவும், தன் குழந்தைகளாகிய மண்ணுலக மாந்தர்க்கு வாரி வழங்கி, வாழ்வை மலர்ச்சியுள்ளதாகச் செய்ய, தாயாகிய துர்க்காதேவி, லட்சுமி, சரஸ்வதி கணேசன், கார்த்திகேயன் ஆகிய தனது பரிவாரங்களுடன் மண்ணுலகுக்கு எழுந்தருளி வருகின்றாள் என்னும் கோட்பாடு எவ்வளவு பொருள் பொதிந்ததாயிருக்கிறது.

எட்டுத் திக்குகளிலும் மேல், கீழ் ஆகிய இடங்களிலும் பரந்து நிற்பவளும், அவற்றை ஆளுபவளும் தானே என்பதை வலியுறுத்துகின்றன துர்க்காதேவியின் பத்துக்கைகளும். மேலும் தேவி சிங்க வாகனத்தில் ஏறி, மகிஷாசுரனை வீழ்த்தி, அதம்செய்து மகிஷாசுரமர்த்தனியாகவும் காட்சிதருகிறாள். இவ்வாறான நினைவில் துர்க்காதேவியை வணங்குவோர் தங்கள் பகைவரையும் தடைகளையும் வெல்லுவர் என்றும், திருமகளிடத்திலிருந்து செல்வமும், கலைமகளிடத்திலிருந்து கல்வியும், விநாயகரிடத்திலிருந்து ஞானமும், முருகனிடத்திலிருந்து ஆற்றலும், தேவியிடத்திருந்து வீடும் பெறுவர் என்றும் நம்புகின்றனர். இதனையே பாரதியாரும்,

'நம்பினோர் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால்
அதிக வரம் பெறலாம்'

என்று ஆணையிட்டுக் கூறுகின்றார்.

இத்துணைப் பெருமை வாய்ந்த அம்மை இன்று சித்திரத் தேரிலே எழுந்தருளி வீதி வலம் வருகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தாளும், அண்டமெல்லாம் பூத்தாளும், புவியடங்கச் காத்தாளும் ஆகிய, தெல்லிப்பழைத் துர்க்கை அம்பாளுக்கு ஒப்பற்ற தேரொன்று பெரும் பொருட் செலவில் ஆக்குவிக்கப் பெற்றுள்ளது.

'விரும்பித் தொழும் அடியார்
விழிநீர் மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்தமாகி'

நிற்க, அன்னை புதிய தேரிலே ஏறிப் புறப்பட்டுப் பவனிவரும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு அநுபவிப்பவர்கள் புண்ணியப் பேறுடையவர்களே. இத்தகைய நல்வினைக்கு நம்மை இலக்காக்கி, இக் கோயிலிலே, பொருள் பொதிந்த இத் தேர்த்திருவிழா ஒழுங்காக நடந்துவரச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கும் இவ் வாலய பரிபாலனசபைத் தலைவியாரான, துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நமது பாராட்டு தலுக்கும் போற்றுதலுக்கும் உரியவராவர்.

'துணையும் தொழுந் தெய்வமும் பெற்ற தாயு'மாய் விளங்கும் துர்க்கை அம்பிகையின் பேரருள் நம்மனைவர்க்கும் என்றும் கிடைப்பதாக.

**திருமதி கங்கேஸ்வரி கந்தையா**
செயலாளர்,
இந்துமகளிர் மன்றம்,
மட்டக்களப்பு.

## கோயிலில் ஏன் தேங்காய் உடைத்து அருச்சனை செய்கிறோம்?

குடுமி, கண்கள் ஆகியவற்றைத் தேங்காய் உடையதாக இருப்பதால் அறிவுணர்ச்சிக்கு இருப்பிடமான தலையை அது குறிக்கிறது. தேங்காயைச் சுற்றியுள்ள ஓடு அறிவைச் சூழ்ந்துள்ள ஆணவ மலத்தைக் காட்டுகிறது. ஆணவ மலத்தை நீக்கி அறிவைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என இறைவனைக் கேட்பதே தேங்காய் உடைப்பதன் கருத்தாகும். நம் அறிவி லேயே இறைவனை அடைந்துவிடலாம் எனக் கருதுபவர்களும் உண்டு. ஆனால் அது ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டிருக்கும்போது இறைவனை அறியமுடியாது. சிதறத் தேங்காய் உடைப்பதுபோல் உள்ளம் நெக்குருகி வழிபட்டால் இறைவனைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் உய்ய.....

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என அறிஞர் கூறுவர்! மனித உருவில் வந்தவர்கள் எல்லாரும் மனிதர்களாகிவிட முடியாது. மனிதப் பண்பாடு பெற்றவர்கள் தான் மனிதர் என்று அழைக்கத் தகுதி பெற்றவர்கள்.

கிடைத்தற்கரிய மனிதப் பிறவியும் பெற்றோம். பெற்ற பிறவியைப் பயனுள்ள தாக்க மனிதப்பண்பாட்டோடு வாழ வேண்டுமென்பதும் இயல்பு.

நற்குணங்கள் எதுவுமில்லாத கீழ்த் தரமான நிலையுடைய மக்களை வள்ளுவர் கயவர் என்ற பெயரால் அழைப்பர். ''மக்களே போல்வர் கயவர்'' என்று கூறுகின்றார். வெளித்தோற்றத்தில் கயவர் கள் மற்ற மனிதர்களைப் போலவே காணப் படுவார்கள். நன்மை தீமைகளை ஆராய்ந்து நடக்கிறவர்களுக்குத் தீமை செய்துவிடக் கூடாது என்ற கவலை இருந்துகொண்டே இருக்கும். அந்தக் கவலை கயவர்களுக்கு இயல்பாகவே இல்லை.

மனிதன் மனிதனாகப் பிறந்தும் பறவை யைப்போல ஆகாயத்திலே பறக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான். சந்திரமண்டலத் திற்குச் சென்று திரும்பிவிட்டான். மீனைப் போல நீந்தக் கற்றுக்கொண்டிருக்கிறான். முப்பது மைல் நீளமான பெருங் கடலை நீந்தித் திரும்பியும் வந்துள்ளான். ஆனால் அவன் இன்னும் மனிதனாக வாழுவது எப்படி என்பதை மட்டும் இன்றுவரை கற்றுக்கொண்டானில்லை.

தமிழர்களிடத்தில் இரு பெரும் பண் பாடுகள் உண்டு. ஒன்று விருந்தோம்பல். அடுத்தது சேர்ந்து வாழுந் தன்மை. தமிழன் எந்தத் தேசத்தில் சென்று வாழ்ந் தாலும் அவர்களோடு ஒன்றியே வாழக் கற்றுக்கொண்டிருக்கிறான். யார் தன் தேசத்துக்கு வந்தாலும் அவர்களைத் தன் னோடு அணைத்து வாழவும் கற்றுக் கொண் டிருக்கிறான்.

உலகம் ஒன்று; உலக மக்கள் அனை வரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள், ஆதலால் யாருடனும் பகைமை பாராட் டிக் கொள்ளக் கூடாது. யாரையும் வெறுக் கக் கூடாது என்பது அவனது புனிதப் பண்பாடு.

இந்துமதம் எந்த ஒரு தீர்க்கதரிசியா லும் உண்டாக்கப்பட்டதல்ல. உலகம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானது இந்துமதம். இது சாகாநிலை பெற்றது. என்றும் வியாபித்து நிலைத்து இயங்கக்கூடிய நிலைத்தன்மை பெற்றதுங் கூட.

உலகின் ஜீவநாடியாக விளங்குகிறவன் இறைவன். ஆங்கிலத்தில் மதம் (Religion) என்ற சொல்லுக்குத் திரும்பக்கொணர்தல் என்பது பொருள். அதாவது எல்லா மதங் களும் எல்லா ஜீவன்களும் எந்த ஒரு பிரம்மத்திலிருந்து தோற்றுவிக்கப் பட் டனவோ அதையே மீண்டும் சென்று அடைகின்றன. கடலில் இருந்து ஆவியான நீர், மேகமாகி மழையாய் மாறி, பின்பும் கடலையே சேர்வது போலத்தான் மதங் களும் ஜீவன்களுமாகும்.

இந்துமதம் பெருமளவில் சமரசப் பான்மை உடையது. கருணை உள்ளம் படைத்தது, இக்கொள்கையே இந்துமதத் தின் அடிப்படைத் தத்துவமாகும். அது எம்மதத்தையும் தூற்றுவதில்லை. அதைத் தூற்றக்கூடிய மதங்களையும் பெருமை யுடன் ஏற்றுக்கொள்கிறது. அதுமட்டு மல்ல. அவைகளுக்குத் தேவைப்படும் அளவில் தனது பூர்விக மக்களையும் சந்தடி யில்லாமல் தந்துதவி அவைகளையும் தழைக் கச்செய்யும் தனித்தன்மை பெற்றுவிட்டது. உண்மை எங்கிருந்து வந்தபோதிலும் எத் தகைய உடை உடுத்தி வந்தபோதிலும் அதை ஏற்றுப் பாராட்டுகிறது. பெருமை யுடனும் ஏற்றுக்கொள்கின்றது. வட மொழியில் மதம் என்ற சொல்லிற்கு இழுத்துச்செல்வது என்பது பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவாத்மாவைப் பரமாத்மாவிடம் இழுத்துச் செல்வது என்பது அதன் பொருள்.

உலகத்தை முதலில் நினைத்து வாழ்ந்தமையும் உலகத்தை நோக்கி இலக்கியம் செய்த பெருமையும் தமிழனுக்குரியதாகும். ''உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்'' என்று இராமாயணம் தொடங்குகிறது. பத்துப்பாட்டில் முதல் வைத்து எண்ணப் படுவதாகிய திருமுருகாற்றுப்படை ''உலகம் உவப்ப'' என்று தொடங்குகிறது. ''ஆதி பகவன் முதற்றே உலகு'' என முதலாவது குறளிலேயே பார்க்கின்றோம்.

'ஓம்' என்ற ஒலியிலிருந்தே எல்லாம் ஆரம்பமாயின. அறிவு, உண்மை, இன்பம் என்பதே இந்த ஒலியின் தத்துவம் ஆகும். இதனையே மற்றவர்களும் ''ஆமென்'' என்றும் இன்னும் பலவாறாகவும் குறிப்பிடுகின்றனர்.

மக்களாகப் பிறந்திருக்கும் நமக்கு இருக்கவேண்டிய சிறப்பு என்ன? சமுதாயத்தை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம்? சமுதாயத்திற்கு நாம் எப்படிப் பயன்படுகிறோம்? என்பதாகும்.

நம்முடைய சொந்த நலனுக்காகச் சமுதாயத்தை வேண்டியவாறு நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் சமுதாயத்திற்கு நாம் நன்கு பயன்படுவதில்லை. தெய்வப் பற்றுடையான் ஒருவனே மக்களுக்கும் தன் ஆத்மாவுக்கும் உலகிற்கும் பயன்படுகிறான். அவனது சேவை உலகுக்கே அதிகம் தன்னைவிடப் பயன்படுகிறது என்பதும் தெளிவு.

கடவுளுக்கு இறைவன் என்ற பெயருண்டு. அரசனுக்கு இறைவன் என்ற பெயருமுண்டு. கடவுள் எல்லா உயிர்களையும் சமத்துவமாக நடத்துவதுபோல ஒரு நாட்டின் மன்னனும் தலைவர்களும் நாட்டிலுள்ள எல்லாரையும் சமத்துவமாகக் கருதி நடத்தவேண்டும்.

எங்கும் ''அரன் நாமமே'' சூழ வேண்டுமென்பது சமயாச்சாரியர்களின் அடங்கா ஆசை. அரன் என்றால் சுகத்தைத் தருபவன் என்பது பொருள். சுகத்தைத் தருபவனாகிய இறைவனுடைய பெயர் உலகமெங்கும் சூழ்க; உலகமெங்கும் நிலவுக; உலகமெங்கும் நிறைக என்று விரும்புகிறார். நல்லவர்களின் பெயர் உலகமெல்லாம் பரவினால் அதனால் நன்மை தான் ஏற்படும். ஆகையால்தான் அரன் பெயர், அகிலமெல்லாம் சூழ்க என்றார். அவனருள் இன்றேல் வேறேது அசையும்?

சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் என்ற பொருளும் உண்டு. அன்பும் சிவமும் வேறல்ல. அன்பே சிவம். சிவமே அன்பு. அன்பும் மங்கலமும் எங்கும் பரந்தால் மக்களுக்கு வேறு என்ன குறை. அரன் நாமம் உச்சரிக்கப்படும் இடத்தில் மந்திர அலை சூழுகின்றது. அது தியானிக்கப்படும் இடத்தில் ஆத்மீக அலை பரவுகிறது. அந்த அலைக்குள் அகப்படுவோர் அனைவரும் அதே மயம் ஆகின்றனர் என்பதும் பொய்யல்லவே. இன்றைய விஞ்ஞானிகளும் ஒருமுகமாக ஒப்பும் உண்மையல்லவா இது.

இறைவனுடைய நாமம் எத்த நேரமும் நாவிலும், இறை தியானம் எந்த நேரத்திலும் உள்ளத்திலும் இருக்குமானால் மரணத்திற்கோ அன்றி வேறு எதற்கோ உலகில் நாம் அஞ்சத் தேவையில்லை, ''நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே'' என்ற அளவுக்கு இறைநாமம் சொல்வதில் ''நா'' பழக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் நமது வினை ஒழிகின்றது. பாவம் நீங்குகின்றது. ஆகாயம் அளாவ அடுக்கிய விறகினுள்ளே ஒரு நெருப்புத் தழல் புகுந்துவிடுமானால், அவ்வளவு விறகும் ஒரு பிடி சாம்பலாகி விடுகின்றது. அதைப்போலப் பிறவிதோறும் நாம் செய்துவந்த பாவம் ஒருமுறை சிவாயநம என்று உச்சரித்த மாத்திரத்திலே நீங்கி விடுகின்றது.

விஞ்ஞானம் விளக்க முடியாததைச் சமயம் விளக்குகின்றதெனில், விஞ்ஞானமுஞ் சமயமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகக் கருதலாகாது. விஞ்ஞானமாகிய அறிவியல் ஐம்புலன்களுக்குத் தென்படும் புறப்பொருள்களை மட்டுமே ஆராய்ந்தறிய முயல்கிறது. ஆனால் சமயமாகிய அருளியல் ஐம்புலன்களுக்கு எட்டாமல் அப்பாற்பட்டு விளங்கும் ஆத்மா பொருளையும் ஆழ்ந்து உணர்ந்து உய்ய வழி செய்கின்றது. இவை இரண்டினுடைய எல்லையும், குறிக்கோளும், செயல்முறையும் தனித்தனியாக விளங்கியபோதிலும் இந்த உண்மையைப் பலர் நிரூபித்துள்ளனர். விஞ்ஞானம் எங்கு செயலற்று நிற்கின்றதோ அங்கிருந்துதான் சமயம் தொடர்கிறது. அந்த உண்மையை விஞ்ஞானிகள் நன்கு உணர்ந்துள்ளனர்.

அந்தணர், வானவர், பசுக்கள் ஆகியவை தங்கள் சுயநலத்தைவிட பிறர் நலத்திற்கே வாழும் உயர்ந்த பண்புடையவை. அவ்வகையில்தான் மழையால் மாநிலமும் வாழ்கிறது. நல்ல அரசாட்சி இருந்தால்தான் உலகில் அமைதி நிலவும். அமைதியிருப்பின் தீமை எல்லாம் ஒழியும். இன்பம் தரும் இறைவன் பெயர் உலகெல்லாம் பரவி உயிரினம் உய்ய ஒன்றுபடுவோமாக. "வாழ்க வையகம்".

**நா. முத்தையா**
ஆசிரியர், ஆத்மஜோதி
நாவலப்பிட்டி

## ஸ்ரீ துர்க்காதேவி

அன்பர்களுக்கு அருள் புரியும்பொருட்டுக் கணேசனுக்குத் தாயாக விளங்குகிறாள். சிவபிரான் காதலியாகவும், விஷ்ணுவின் மாயையாகவும், பூரண பிரம்ம ஸ்வரூபிணியாகவும், பற்றினவரைப் பாதுகாக்கும் தேவியாகவும், வேண்டிய யாவும் வழங்கும் அன்னையாகவும், ஸித்தர்களின் தலைவியாகவும் இருப்பவள் இப் பெருமாட்டி. பசி, தாகம், ஒளி, சோம்பல், தயை, கருத்து, சாதி, பொறுமை, பிரமை, ஞானம், மகிழ்ச்சி, செல்வம், வீரம், மாயை ஆகிய வற்றிற்கு அதிதேவதை இவளே. கிருஷ்ணகிருதையாகவும், நாராயணியாகவும் காட்சியளிப்பாள் இப்பெருமாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமான சுவாமிகளும் ஈழநாடும்

**தா**யுமானசுவாமிகளுக்கும் ஈழநாட்டுக்கும் நெருங்கிய தொடர்பிருந்து வந்திருக்கிறது. சுவாமிகள் தோன்றிய வேதாரணியத்துக்கு மறைக்காடென்னும் பெயருமுண்டு. யாழ்ப்பாணத்திலுள்ள வரணி ஆதீனத்துக்கும் மறைக்காட்டுக்கும் நெருங்கிய உறவிருந்தது. இது சம்பந்தமாகத் தாயுமானவர் பற்றித் தாமெழுதிய நூலில் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை கூறியிருப்பது பின்வருமாறு: "வரணியென்பது யாழ்ப்பாணத்திலுள்ளது. ஆண்டுள்ள ஆதீனத்தார்க்கு மறைசையிலும் மடமுண்டு. அம்மடத்திலிருந்தோர் அந்நாளில் மறைசைக்கோயில் மேற்பார்வையாளராயிருந்தார்களென்று தெரிகிறது." மேலும் தாயுமானவர் குடும்பத்தாருக்கும் ஈழநாட்டுக்கும் தொடர்பிருந்ததாகக் கூறப்படுகிறது. இதுபற்றி இந்துசாதனப் பத்திரிகைக்கு ஆசிரியராக விருந்த திரு. ம. வே. திருஞானசம்பந்தர் 1960ஆம் ஆண்டு டிசம்பர்மாத "ஸ்ரீலங்கா" என்னும் சஞ்சிகையில் எழுதியிருப்பது பின்வருமாறு: "பிற்காலத்திலிருந்த மகாஞானியாகிய ஸ்ரீமத் தாயுமானசுவாமிகள் யாழ்ப்பாணத்திலுள்ள வரணியைச் சந்மவூராகக் கொண்ட பெரியார்களின் வழித்தோன்றலாரென ந்தக்க ஆதாரத்தோடு சொல்லப்படுகிறது. அம்மகானும் அவருடைய தந்தையாரும் அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியைப் பிரதான பட்டினமாகக் கொண்டு அரசாண்ட விஜயரகுநாத சொக்கலிங்கநாயகன் என்னும் சிற்றரசனிடமிருந்து அரசசேவை செய்தனரென்பது சரித்திரம்." இக் கட்டுரையாளர் தக்க ஆதாரம் எவை என்பதைக் கூறியிருந்தால் பிரயோசனமாயிருந்திருக்கும்

தாயுமானசுவாமிகளுக்கும் ஈழநாட்டுக்குமிருந்த குடும்பத் தொடர்பு எப்படியிருந்தபோதிலும் ஈழநாட்டு அறிஞர்களைத் தாயுமானவர் பாடல்கள் மிகவும் கவர்ந்துள்ளதென்பது வெளிப்படை. இவர்கள் தாயுமானவர் பாடல்களை நன்கு கற்றதோடு பல நூல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளனர். சேர் பொன்னம்பலம் இராமநாதனின் குடும்பத்தினர் பலர் தாயுமானவர் பாடல்களில் ஈடுபாடுடையவர்களாயிருந்திருக்கிருர்கள். இராமநாதனின் மாமனுரான சேர் முத்துக்குமாரசுவாமி சிறந்த அரசியல் தலைவராக விளங்கியதோடு, சிறந்த கலாரசிகராகவும் தத்துவசாத்திர அறிவு படைத்தவராகவும் இருந்திருக்கிருர். இவரே முதன் முதலில், 1874ஆம் ஆண்டில், தாயுமானவர் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து குறிப்புகளுடன் வெளியிட்டவர். பல காலத்துக்கும் பின்னர் இப்பொழுது இந்நூலை மலேசியா வாழ் எஸ். துரைராஜசிங்கம் என்பவர் மறுபிரசுரம் செய்துள்ளார்.

**பரமானந்தத்துக்கு வழி:**

இராமநாதனுக்கு அவருடைய குருவான அருள் பரானந்த சுவாமிகள் முதன் முதலில் பாடம் சொன்ன நூல் தாயுமானவர் பாடல்களாகும். இராமநாதன் அமெரிக்காவில் சமயப்பிரசங்கம் செய்தபோது, தாயுமானவர் பாடல்களை எடுத்தாண்டுள்ளார். "மெய்ஞ்ஞானத்துக்குத் திறவுகோல்" என்னும் விஷயம்பற்றிப் பேசியபொழுது சித்தமானது திரையற்ற கடல்போல் அசைவற்றுத் தெளிந்த காலத்தில் பரமானந்தம் தோன்றுமென்பதற்கு ஆதாரமாகப் பின்வரும் தாயுமானவர் பாடலை எடுத்துக் காட்டியுள்ளார்.

"திரையில்லாக் கடல்போலச் சலனந் தீர்ந்து
தெளிந்துருகும் பொன்போலச் செகத்தை யெல்லாம்
கரையவே கனிந்துருக்கி முகத்தி லேநீ
கனிந்தபர மானந்தக் கட்டி......

இதையே திருமூலரும் பின்வருமாறு கூறியுள்ளார்:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையற்ற வொன்றை உரைசெயும் ஊமர்காள்
கரையற்ற வொன்றை கரைகாண லாகுமா
திரையற்ற நீர்போலச் சிந்தை தெளிந்தால்
புரையற் றிருந்தான் புலிசடை யோனே.

மேலும் 1921ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் வெளிவந்த "பிரசித்த ஆண்களும், பெண்களும் எடுத்தாளும் மேற்கோள்கள்" என்னும் நூலுக்கு இராமநாதன் "அங்கிங்கெனுதபடி" என்னும் தாயுமானவர் பாடலின் தமது மொழி பெயர்ப்பையே அனுப்பினுர்.

**அறிதுயில் :**

சேர் பொன்னம்பலம் அருணுசலம் "ஆனந்தக் களிப்பு" போன்ற தாயுமானவர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நல்லசாமிப்பிள்ளை நடாத்திய சித்தாந்த தீபிகையில் வெளியிட்டார். பின்னர் இவை "கட்டுரைகளும் மொழி பெயர்ப்புகளும்" என்னும் நூலாக வெளி வந்தன. இந்நூலில் வெளிவந்த அறிதுயில் என்னும் கட்டுரை தாயுமானவர் "தூங்காமல் தூங்குவது" பற்றிக் கூறியதை நன்கு விளக்குகிறது.

அருணுசலம் தானெடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்கு சொக்கிறட்டிஸ், டெனிசன் முதலியோரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை எடுத்துக்காட்டுகிருர். சொக்கிறட்டிஸ் பல சந்தர்ப்பங்களில் தம்மை மறந்த நிலையில் இருப்பார். ஒரு முறை போர்வீரராக யுத்தத்திற்குச்சென்ற இவர் ஒருநாட் காலை "தூங்காமல் தூங்கி" விட்டார். மத்தியானமாகியும் இவர் நிலையில் மாற்றமேற்படவில்லை. மாலையானதும் சிலர் இவருக்கு என்ன நடக்கிறதென்று பார்ப்பதற்காகப் பாய், தலையணை முதலியவற்றைக் கொண்டுசென்று பக்கத்தில் படுத்துவிட்டார்கள். அவர்கள் காலையில் எழுந்தபின்தான் சுயநிலைக்கு இவர் வந்தார். ஓரிரவும் ஒரு பகலும் ஒரே நிலையில் நின்றிருக்கிருர்.

பின்னர் ஒரு விருந்துக்குத் தமது சீடரொருவருடன் சென்ருர். சிறிது தூரம் சென்றதும் சீடரை முன் போகும்படியும், தாம் தொடர்ந்து வருவதாகவும் கூறினுர். ஆனுல் சீடர் விருந்து நடக்குமிடத்துக்குப் போனபொழுது சொக்கிறட்டிசைக் காணவில்லை. அவர் தம்மை மறந்த நிலையில் நிற்பதை அவரைத் தேடிச்சென்றவர் கண்டனர். இப்படி அவர் வாழ்க்கையில் ஏற்பட்டதுண்டு. இதுபற்றி எழுதிய மேல் நாட்டார் இது அவருக்கேற்பட்ட மயக்க நிலையென்றே கருதினர். எல்லாமறந்த தன்னை யிழந்தவிடத்தில் ஒரு நலம் இருப்பதை அவர்கள் அறியவில்லை.

டெனிசன் என்னும் ஆங்கில கவிஞருக்கும் தனிமையாயிருக்கும் வேளைகளில் தம்மை மறந்த நிலையேற்படுவதுண்டு. இது ஒரு சூனியமான நிலையல்லவென்றும், இது ஒரு உன்னத நிலையென்றும் கூறியுள்ளார். அந்நிலையை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் போதாதென்கிருர். நமது அனுபூதிமான்களும் தங்கள் அனுபவத்தைச் சொல்லுதற்கில்லையென்று கூறியிருக்கிருர்களல்லவா?

மேற்படி சம்பவங்களைக்கொண்டு அருணுசலம் பின்வரும் தாயுமானவர் பாடலை நன்கு விளக்கியுள்ளார்.

தூங்கிவிழித் தென்னபலன்
தூங்காமற் தூங்கிநிற்கும்
பாங்குகண் டாலன்றே
பலன்காண்பேன் பைங்கிளியே.

(இதன் பொருள்: பிரதிதினமும் படுத்துத் தூங்கி எழுந்திருத்தலினுலே என்ன பிரயோசனம்? தூங்காமல் தூங்கி இருக்கும் தன்மையினைக் கண்டாலல்லவோ என்னிறைவனைத் தரிசிப்பேன்.)

**ஒரு மொழி :**

டாக்டர் ஐசாக் தம்பையா தமது வாழ்க்கையின் முற்பகுதியில் பாரிஸ்டர் பட்டம்பெற்று சிறந்த வழக்கறிஞராக விளங்கினுர். வாழ்க்கையின் பிற்பகுதியில் சமயத்துறையில் ஆர்வங்கொண்டு சமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை நன்கு கற்றுப் பெரும் பட்டங்களைப் பெற்றார். கிறிஸ்தவராகவிருந்த போதிலும் தாயுமானவர் பாடல்களில் ஈடுபாடுகொண்டு அவற்றை நன்கு கற்றார். அவர் காலத்துக்கு முன்பும் அவர் காலத்திலும் தாயுமானவர் பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட நூல்களையும் கட்டுரைகளையும் கற்றார். தமது ஐயங்களைத் தீர்ப்பதற்கு நல்லசாமிப்பிள்ளை, திருவிளங்கம், சிற்கைலாசபிள்ளை போன்ற சைவப் பெரியார்களோடு தொடர்பு கொண்டார். இப்படிப் பதினைந்து வருடம் உழைத்தார். இதன்பயனாக, தாயுமானவரின் பாடல்களில் பெரும்பாலானவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 180 பக்கங்கள் கொண்ட முன்னுரையோடு வெளியிட்டார். பிற்சேர்க்கையாக அரிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இது போப்பின் திருவாசக மொழிபெயர்ப்பைப் போன்றது. ஏதோ துரதிஷ்ட வசமாக இந்நூலுக்கு போப்ஐயர் நூலுக்குக் கிடைத்த புகழ் கிடைக்கவில்லை. இவரின் குறிப்புக்களின் சிறப்பை விளக்குவதற்கு ''ஒருமொழி'' பற்றிக் கூறியிருப்பதன் சுருக்கத்தைஇங்குத் தருகின்றேன். இதன் விரிவை நூலில் (பக்கம் 166) காண்க.

''சிவன் சனகாதி முனிவருக்குச் சொல்லரிய நெறியை யொருசொல்லால் உணர்த்தியே சொரூபானுபூதி காட்டினர். இந்த ஒரு சொல் குரு சீடருக்குய் பிறரறியாத முறையில் காதினில் உபதேசிக்கும் ஒரு இரகசிய மொழியாகக் கொள்வதே பொருத்தமாகும். இதனைச் சிலர் ''ஓம்'' என்றும் வேறு சிலர் ''தத்துவமசி'' என்றும் மகாவாக்கியமென்றும் கூறுவர். ஆனல் இவ்விரண்டின் பொருளும் உபநிடதம் முதலிய நூல்களில் கூறப்பட்டிருப்பதால் இவற்றை இரகசிய மொழியெனக் கொள்ள முடியாது.''

**எல்லாம் மோனம்:**

தாயுமானவரால் புகழப்பட்ட வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர்கள் கணவரிசையில் இக்காலத்திற் தோன்றிய யோகசுவாமிகள் தாயுமானவர் மீது மிகவும் ஈடுபாடுடையவராயிருந்தார். அவர்களுக்குத் தாயுமானவர் பாடல்கள் முழுவதும் மனப்பாடம். அவர்கள் நன்முயற்சியால் தாபிக்கப்பட்ட சிவதொண்டன் நிலையத்தின் இலட்சியத்தை நன்கு விளக்கும் தாயுமானவர் பாடலிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் வரிகள் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டு நிலைய முகப்பில் தொங்கவிடப்பட்டிருந்ததை அன்பர்கள் கண்டிருக்கக் கூடும்.

சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம்நன் மோன நிறைவே.

இறைவன் உயிரோடு அத்துவிதமாயிருக்கிறுனென்பதை விளக்குவதற்குப் பின்வரும் தாயுமானவர்பாடலை யோகசுவாமிகள் எடுத்தாண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சந்ததமு மெனது செயல் நினது செயல்
யானெனுந் தன்மைநினை யன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவ மிதுவே.

**சும்மா இரு:**

ஜெர்மன் சுவாமிகள் என்றழைக்கப்படும் சுவாமி கௌரிபாலா தமது கையில் ''சும்மா இரு'' என்பதைப் பச்சைகுத்தியிருப்பதைக் காணலாம். இதனை யோகசுவாமிகள் தமக்கு உபதேசித்த மொழியாகக் கொண்டுள்ளார். ''சும்மா இரு'' என்பதை முருகப்பெருமான் தமக்கு உபதேசித்ததாக அருணகிரியார் கந்தர் அநுபூதியில் கூறியுள்ளார். அவரைத் தொடர்ந்து இம் மந்திரத்தைப் பட்டினத்தார், தாயுமானவர், மஸ்தான் சாகிபு, யோகசுவாமிகள் முதலியோர் தங்கள் பாடல்களில் எடுத்தாண்டுள்ளார்கள். இவற்றுள் தாயுமானவர் பாடல்களிலேயே இதனை அதிகம் காணலாம். இவற்றையெல்லாம் தொகுத்து ஜெர்மன் சுவாமிகள் ''சும்மா இருக்க சூத்திரம்'' என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூலை அடிப்படையாக வைத்து சும்மாயிருக்கும் தத்துவத்தை விளக்கத் திட்டமிட்டுள்ளார்.

**ச. அம்பிகைபாகன், B. A.**
முன்னாள் அதிபர்
வைத்தீஸ்வர வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபுரசுந்தரி

எல்லா உலகிற்கும் அன்னையாகிய தேவி உலகிற்கு அருள்புரியக் கொண்ட பல வடிவங்களில் திரிபுரசுந்தரி வடிவமும் ஒன்றாகும். திரிபுரம் என்ற சக்கரத்திற்கு அதிபதி திரிபுரசுந்தரி. தேவி சக்கரத்தில் உள்ள சந்திரகண்டம், அக்னிகண்டம், சூரிய கண்டம் ஆகிய மூன்றும் திரிபுரம் என அழைக்கப்படும்.

"அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உண்டு' என்பது நமது சமய உண்மை. மேரு தண்டம் என அழைக்கப்படும். நமது முதுகெலும்பில் உள்ள ஆறு ஆதாரங்களும் மூன்று தண்டங்களாக வகுக்கப் பெற்றுள்ளன. மூலாதாரமும் ஸ்வாதிஷ்டானமும் அக்னிகண்டம். மணிபூரகமும், அநாகதமும் சூரிய கண்டம், விசுத்தியும், ஆஜ்ஞையும் சந்திரகண்டம். திரிபுராந்தகரின் உள்ளத்தில் உறையும் உத்தம சக்தியே திரிபுரசுந்தரி என்பதும் பொருத்தமுடையதே.

திரிபுரசுந்தரியின் உருவம் எத்தகையது, அவரை எவ்வாறு தியானிக்கலாம்? இதற்கு அம்பாள் அருள் பெற்ற அடியார்கள் பலர் விடை தந்துள்ளார்கள். முதலில் திருமூலர் கூறும் திருமந்திரப் பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

"தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில்முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே"

இத் திருமந்திரத்தில் அம்பாள் நான்கு கரங்களிலும் தாங்கும் ஆயுதங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பாசம், அங்குசம், கரும்புவில், ஐந்து மலர்ப்பாணங்கள் ஆகியவற்றைத் தரித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் பஞ்ச பாணங்களும் கரும்புவில்லும் காமக்கடவுளாகிய மன்மதனுக்குரிய ஆயுதங்கள். இவற்றை அம்பாள் தரித்திருப்பதற்குரிய காரணமென்ன? இந்த வினாவிற்கு லலிதா ஸஹஸ்ர நாமத்தில் விடை உள்ளது.

"மனோரூபேக்ஷு கோதண்டா" என்பது அம்பாள் நாமங்களில் ஒன்று. (ஸங்கல்பம் விகல்பம் ஆகிய கிரியைகளையுடைய மனமாகிய கரும்புவில்லை யுடையவள் என்பது பொருள்).

"பஞ்சதன் மாத்ர ஸாயகா" என்பது அம்பாளுடைய மற்றொரு நாமம். (ஸப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தகம்) என்னும் பஞ்சதன் மாத்திரைகளைப் பாணங்களாக உடையவர் என்பது பொருள்).

இந்தப் பெயர்களிலிருந்து நாம் ஒரு உண்மையை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. காமத்தில் மூழ்கும் மனிதர்களது காம ஆசையைக் கட்டுப்படுத்துவதாகவும் மனதைக் கட்டுப்படுத்துவதாகவும் இந்தத் திருத்தோற்றம் அமைகிறது: "அம்பிகே உன்னுடைய அருட்பார்வை சிவனிடம் மோகத்தை உண்டுபண்ணுகிறது, மானிடரின் மோகத்தை அடக்கிவிடுகிறது" என்னும் ஓர் அடியார் கூற்றும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றைப் போலவே அங்குச சித்த விருத்தியைத் தடுக்கவும், பாசம் ஆசையை அடக்கவும், உதவுகின்றன.

சாதாரண தேவர்களின் விம்பங்களில் காணப்படும் சம்சாரபயத்தைப் போக்கும் அபய முத்திரையும், திருவடிகளைச் சுட்டிக் காட்டும் வரத முத்திரையும் காணப்படும். ஆனால் திரிபுரசுந்தரியின் வடிவில் இவை காணப்படுவதில்லை. இதற்குரிய காரணத்தை "ஸௌந்தரிய லஹரி"யில் ஒரு ஸ்லோகம் பின்வருமாறு கூறுகிறது.

"உலகத்தின் புகலிடமே உனக்கு வேறான தேவகூட்டங்கள். கைகளால் அபயத்தையும், வரதத்தையும் அளிப்பதாகக் காட்டுகிறவர்கள். ஆனால் நீ ஒருத்தி மட்டும் அபிநயத்தால் வரதத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயத்தையும் பிரசுண்டனம் செய்பவளாக இருப்பதே இல்லை. ஏனென்றால் பயத்திலிருந்து காப்பாற்றவும், வேண்டியதற்கு அதிகமாகவே பயன் அளிப்பதற்கும் உன்னுடைய திருவடிகள் திறமையுடையவைகள் அன்றோ? ''

அபிராமி என்று மறுநாமம் பூண்ட திரிபுரசுந்தரியின் அருளைப் பெற்றவர்களுட் சிறந்த ஒருவர் அபிராமிப்பட்டர். லலிதாஸ்தோத்திரத்தில் கூறப்பட்ட ''உதய பானு ஸகஸ்ராபா'' என்னும் நாமத்தையே அபிராமிப்பட்டர் தமது அந்தாதியின் முதலடியாக எடுத்துக்கொண்டார். ''கணக்கில்லாத கிரணங்களோடு கூடிய சூரியன் உதிக்கும்போது கூடிய சிவப்பு நிறத்தோடு பொருந்தியவர்'' என்ற மேற்படி நாமத்தின் பொருளை ''உதிக்கின்ற செங்கதிர்'' எனச் சுருக்கமாகவும் பொருள் பொதியவும் வைத்துள்ள திறத்தைப் பார்க்கிறோம்.

லலிதாம்பிகையின் கண்கள் சரஸ்வதி தேவியும், இலக்குமிதேவியும் ஆக இருப்பதை அவரது ''காமாட்சி'' என்னும் நாமம் எடுத்துக் கூறுகிறது. (கா = சரஸ்வதி, மா = இலக்குமி, அட்சி = கண்) இதையே அபிராமிப்பட்டர் ''தனந்தரும் கல்விதரும்......... ... அபிராமி கடைக்கண்களே'' என்று பாடினார்.

திரிபுரசுந்தரியின் தோற்றமே அபிராமிப்பட்டரின் மனதைக் கொள்ளை கொண்டாலும் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி யாவரும் திரிபுரசுந்தரியின் அருளுடைத் தோற்றமே என்ற உண்மையையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

திரிபுரசுந்தரிதான் உயிர்த்துணையும், தொழுந் தெய்வமும், பெற்றதாயும், வேதங்களும், வேத சாகைகளும், உபநிடதங்களும், வேதமுதலாகிய பிரணவமும் ஆகும். அவர் எங்கட்கு நான்கு புயங்களும் பாசம், அங்குசம், தனுசு, மலர்பாணம் என்பனவற்றோடு உருவமாய்க் காட்சிதந்து அருள்செய்கிறார்.

'' துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கரும்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையும், திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.''

பௌராணிகவித்தகர்,
**வ. குகசர்மா**

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சித்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே.

— **அபிராமியந்தாதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர் மகிமை

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்குப் புதிய தேர் அமைக்கப்படுகின்றதெனவும், அதன் வெள்ளோட்டத்தையொட்டி மலரொன்று வெளியிடப்படுகின்றதெனவும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். தேரைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியதும் மனத்திலே பல கருத்துக்கள் எழுகின்றன. அவற்றுள் மூன்றை மட்டும் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம். முதலாவது அழகையொட்டியது. இரண்டாவது சமய தத்துவம் பற்றியது, மூன்றாவது சமூக தத்துவத்தைப் பற்றியது.

**அழகு :**

ஆலயங்களிலேயுள்ள அம்சங்களுள் தூரத்திலுள்ளவர்களைக் கூடக் கவரவல்லன எனக் கருதத்தக்கன கோபுரமும் தேருமே யாகும். இவற்றுள்ளும் தேருக்குச் சில தனிச் சிறப்புகளுண்டு. கோபுரம் ஓரிடத்திலேயே நிலைத்துநிற்பது. தேர் ஆண்டுக்கொருமுறை, தானும் அலங்கரிக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட இறைவனையோ அம்பாளையோ தாங்கி வீதி வலம் வருவது. எந்த ஆலயத்திலும் தேர்த்திருவிழாவுக்கு ஒரு தனி மகிமையுண்டு. தேரிலே சுவாமியோ அம்பாளோ வீதி வலம் வருவது தனி அழகெனக் கூறுவது மிகையாகாது. நல்லூரிலே அறுமுகப் பெருமான் தேரில் இவர்ந்து வீதிவலம் வரும் காட்சியை அழகுக்கெல்லாம் அழகென்று கூடக் கூறலாம். அந்தக் காட்சியைக் காணும் வாய்ப்பினைப்பெற்ற எவரும் வைத்த கண் எடுக்க விரும்புவதில்லை, பார்த்தது போதும் என மனம் நிறைந்து திரும்புவதுமில்லை. அத்தகைய கவர்ச்சியுண்டு அத்தேருக்கும் அத்தேரில் எழுந்தருளி வீதிவலம் வரும் அறுமுகப் பெருமானுக்கும்.

**சமய தத்துவம் :**

இனி, தேர்த்திருவிழா குறிக்கும் அடிப்படைச் சமய தத்துவத்தை நோக்குவோம். மேலே தேரின் அழகைக் குறிப்பிட்டோம். ஆனால் தேர் குறிக்கும் தத்துவம் சங்காரமாகும். இது வியப்புக்குரியது. மகோத்ஸவத்தை விளக்கும் நூல்கள் யாவும் இரதோத்ஸவத்தின் உட்கருத்தையும் விளக்கியிருக்கின்றன. ''ஞானியார் அடிகள் நினைவுமலர்'' என்ற நூலிலே ''தேரூர்ந்த திரிபுராந்தகன்'' என்றொரு கட்டுரையிலே சிருஷ்டி, திதியைக் காட்டிலும் சம்ஹாரமே மேலானது என்றும், சம்ஹாரத் தொழில் கொலைத் தொழில் அன்று என்றும் கூறப்பட்டுள்ளது.

பூமியையே ஆண்டவன் இரதமாகக் கொண்டிருக்கிறான். நான்கு வேதங்களுமே இரதத்தில் கட்டப்பட்ட நான்கு குதிரைகளாகின்றன. வேதங்கள் தர்மத்தைக் கூறுகின்றன என தைத்திரியோபநிடதம் கூறுகின்றது. பிரமனே இந்த இரதத்துக்குச் சாரதி. பூமியாகிய இந்த இரதத்துக்குச் சக்கரங்களாக அமைந்தவர் சூரிய சந்திரர். சூரியன் அசுத்தத்தைப் போக்குவது. சந்திரன் இன்பத்தை உண்டாக்குவது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழிப்பதற்காகவே தேரூர்ந்து செல்கின்றான் என்பதே இரதோற்ஸவத்தின் உட்கருத்து என்பதைப் பல நூல்களும் விவரமாக விளக்கியிருக்கின்றன.

**சமூகதத்துவம்:**

நான் சிறுவனாயிருந்த காலத்தில் என்னை என் தகப்பனார் மாவிட்டபுரம் தேருக்கு ஒவ்வொரு வருடமும் தவறாது அழைத்துச் செல்வது வழக்கம். தேர் புறப்படும்போது என் தகப்பனார் தானும் தேர் வடத்தைப் பிடித்துத் தேரை இழுப்பர். அதுமட்டுமன்றி ஒரு சிறிது தூரமாவது எல்லோருடனும் சேர்ந்து நானும் தேரை இழுக்க வேண்டுமென விரும்பி என்னையும் வடத்தைப் பிடித்து இழுக்கச் செய்வார்.

சமய உட்கருத்துக்கள் எவையாயிருப்பினும் தேர்த்திருவிழாவைப் பொறுத்த மட்டில் வெளிப்படையான சில சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்கள் இருப்பதையும் காண்கின்றோம். அவற்றுள் இரண்டொன்றை இங்கு குறிப்பிடுவோம். தேர் வடத்தை எல்லோரும் சேர்ந்து இழுக்கும்போது இறைவன் சந்நிதியில் ஏற்றத்தாழ்வின்றி எல்லோரும் சமம் என்ற உணர்வு ஏற்படுகின்றது. இது வரவேற்கத் தக்கது. பெண்கள் வடத்தைத் தொட்டுத் தேரை இழுக்கக் கூடாதென்ற ஒரு கருத்து ஒரு காலத்தில் நிலவி வந்தது. ஆயினும் அக்கருத்து காலப்போக்கில் வலியிழந்துவிட்டது. இன்று சில ஆலயங்களிலே அம்பாள் உற்சவங்களில் முழுதும் பெண்களே தேரை இழுக்கும் நிலைமையும் நிலவி வருகின்றது. புதிய தேர் இயற்றப்படுவதும் ஓர் அம்பாள் ஆலயத்திலானமையால் இக் கருத்தை இங்கு குறிப்பிடலானேம்.

பலரும் சேர்ந்து வடத்தை இழுக்கும் போதே தேர் நகருகின்றது. இதன் மூலம் கூட்டு முயற்சியின் முக்கியத்துவம் புலனுகின்றது.

தேர் வடத்தைப் பிடித்து இழுக்கும் ஒவ்வொருவருக்கும் தற்பெருமையோ தன் நினைப்போ இன்றி தன்னை மறந்து இறை பணி செய்யக்கூடிய மனோநிலை ஏற்படுகின்றது. இவை போன்ற யாவும் இரதோற்ஸவத்தின் மூலம் ஏற்படக்கூடிய பல வித நலன்களுக்கு உதாரணங்களாகும்.

இன்றுள்ள அமைதியற்ற நிலைமை நீங்கவும், நாடெங்கணும் அமைதியும் நன்மையும் நிலவவும் அருளுமாறு புதிய தேரிலே எழுந்தருளி வீதிவலம் வரும் எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருளை வேண்டுவோமாக.

கி. லக்ஷ்மணஐயர்
வித்தியாதிபதி, கல்வி அமைச்சு

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே.

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

— அபிராமி அந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் இந்துசமய வளர்ச்சி

மலேசியா என்று நாம் கூறும்போது மூன்று மாநிலங்களைக் குறிக்கின்றோம். மலாயா என்று முன்பு கூறும் தீப கற்ப மலேசியாவையும் (மேற்கு மலேசியா) போனியோ தீவில் உள்ள சபா, சறவாக் என்ற இரு மாநிலங்களையும், மூன்றையும் சேர்த்து இன்று மலேசியா வெனக் குறிக்கப்படுகின்றது. இந்து சமயத்தைச் சார்ந்த மக்கள் அநேகமாகத் தீப கற்ப மலேசியாவிற்தான் சீவிக்கின்றுர்கள்.

பதினேராம் நூற்றுண்டில் தமிழ் நாகரிகம் தீபகற்ப மலேசியாவில் பரவி இருந்த தென்றும், இன்று 'கெடா' என்னும் வடபகுதியில் உள்ள மாநிலம் ''கேதாரம்'' என்று அழைக்கப்பட்டதென்றும் சரித்திர வரலாறு கூறுகின்றது.

17ஆம், 18ஆம் நூற்றுண்டில், தென்கிழக்காசியாவில் ஆங்கிலேயர் ஆட்சி வேரூன்றிய காலத்தில் தென்னகம், இலங்கை போன்ற இடங்களிலிருந்து பெருமளவில் மக்கள் தீபகற்ப மலேசியா, யாவா முதலிய இடங்களுக்குக் குடியேற முற்பட்டனர். இதேவேளையில் மேற்குநாடுகளில் புதிய புதிய கண்டுபிடிப்புகள் ஏற்பட்டதால், யந்திரசாதன உற்பத்திக்காகத் தொழிற்சாலையின் பெருக்கமும் ஏற்பட்டது. இதற்குத் துணையாக தென் அமெரிக்கக் காடுகளில் விளைந்த ரப்பர் மரத்தில் வழிந்த பாலின் அருமையை உணர்ந்த விஞ்ஞானிகள் இதைப் பெருமளவில் உற்பத்திசெய்ய விரும்பினர். இதன் விளைவாக முதன்முதலில் றிட்லி என்ற ஆங்கிலேயர் ரப்பர் வித்தை மலேயாவிற்குக் கொண்டுவந்த நாளிலிருந்து ஒரு புதிய சகாப்தம் தீபகற்ப மலேசியாவில் உருவாயிற்று. நாடெங்கும் ரப்பர் மரத்தைப் பயிரிடுவதற்கு முன்பாக, நாட்டில் அடர்ந்த காடுகளை அழிப்பதற்கும், போக்குவரத்துக்காக அகண்ட பெரும் சாலைகளை அமைப்பதற்கும் ஆள்பலம் தேவைப்பட்டது. இந்த ஆள்பலத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு தென்னகத்தில் வாழும் கடின உழைப்பாளிகளாகிய தமிழ்மக்கள் பலவித உபாயங்களால் கொண்டுவரப் பட்டனர். இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிலுமிருந்து வந்த தமிழ்மக்களில் ஒரு பகுதியினர் நாட்டின் நிர்வாக மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதிலும், மற்றோர் பகுதியினர் ரப்பர் தேயிலை ஆகியவற்றைப் பயிரிடுவதிலும், பேணிக் காப்பதிலும் தங்கள் வாழ்நாளைக் கழித்து இந்நாட்டின் பொருளாதாரப் பெருக்கத்திற்குப் பெரிதும் துணைசெய்தனர்.

பொதுவாகத் தமிழ்மக்கள் வாழ்க்கை முறை ஆலயத்தின் நிழல்படர்ந்த வாழ்க்கையாக அமைந்திருந்தது. வாழ்வில் எல்லாத் துறைகளிலும் சமய உணர்வும் தெய்வநாட்டமும் உடையவர்களாக வாழ்ந்து வந்ததுமன்றி, புகுந்த நாட்டிலும் சமய உணர்வு மேலோங்க ஆலயங்கள் அமைத்தும், ஆலயங்களைப் பரிபாலிக்க சமய ஸ்தாபனங்களை உருவாக்கியும் சமயப் பணியில் ஈடுபட்டு வந்தார்கள்.

இன்று மலேசியாவில் வாழும் குடிமக்கள் அவர்கள் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களாயினும் பூரண சமயச் சுதந்திரத்தை எத்தகைய தடையுமின்றி அனுபவித்து வருகின்றனர். மலேசிய அரசாங்கத்தின் தேசீயச் சமயம் இஸ்லாம் ஆக இருப்பினும் பிறசமய வளர்ச்சிக்கு அது அளித்து வரும் ஆதரவு மகத்தானது. இந்துக் கோவில்கள் ஆச்சிரமங்கள் போன்ற பல அறநிறுவனங்களுக்கு அரசாங்கம் நிதி உதவி அளித்துவருகின்றது.

மலேசிய இந்துக்கள் பல திருவிழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். புத்தாண்டு, தீபாவளி, தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி, வைகுண்டஏகாதசி. பங்குனி உத்திரம், மாசிமகம். ஆடிப்பூரம், தைப்பொங்கல், திருக்கார்த்திகை, திருவெம்பாவை, விநாயகசதுர்த்தி போன்ற திருநாட்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளிதினம் பொதுவிடுமுறையாக நாடு முழுவதும் கொண்டாடப்பெற்று வருகிறது. தைப்பூசம்அன்று கோலாலம்பூரிலே பத்துமலை என்ற புனித ஸ்தலத்தின் கண்ணே ஆயிரம் ஆயிரம் மக்கள் கூடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது.

நகரங்களில் வாழும் மக்களின் சமய வாழ்க்கை ஆலயங்களோடு இணைந்திருப்பதைக் காணலாம். பழமையான ஆலயங்களைச் செப்பனிட்டுக் கும்பாபிஷேகம் செய்வதும், புது ஆலயங்கள் கட்டுவதும், நூற்றுக்கணக்கான மக்கள் வெள்ளிக் கிழமைதோறும் ஆலயம் சென்று தம் இஷ்ட தெய்வங்களை வணங்குவதும், அருச்சனை செய்வதும், தியானம் செய்வதும் குடும்பத்தினரோடு சேர்ந்து ஆலயங்களிலே கூட்டுப்பிரார்த்தனை செய்வதும் குறிப்பிடத் தக்கதொன்றாகும். சமயச் சார்புடைய இயக்கங்கள் கூட்டுப்பிரார்த்தனை நடாத்துகின்றன. விசேஷமாக அருள்நெறித் திருக் கூட்டம், தெய்வீகவாழ்க்கைச் சங்கம், தவநெறிமன்றம், பிரார்த்தனைகளில், நாம வளி தியானம், நூல்விளக்கம், சமய விசாரணை, வழிபாடு, அந்தர்யோகம் இப்படிப்பலசமயவளர்ச்சிக்குரியநிகழ்ச்சிகளைக் கிழமைதோறும் குறிக்கப்பட்ட ஒரு தினத்திலே நடாத்தி வருகின்றன. விசேஷமாக மலேசியா தெய்வீகவாழக்கைச் சங்கத்தின் தலைவராகிய தவத்திரு சுவாமி பிரணவானந்த சரஸ்வதி அவர்கள் தோட்டங்களிலே மக்களின் சமய வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டு மகத்தான தொண்டாகும். அண்மையில் அருள்நெறித் திருக் கூட்டம் சமய வளர்ச்சிக்காக சைவ மக்களிடம் பணம் திரட்டி ஒரு லட்சம் வெள்ளிக்கு நிலையம் ஒன்றை அமைத்தது போற்றுதற்கரிய ஒரு பெருங் கைங்கரியமாகும். மேலும் சைவசித்தாந்த வளர்ச்சிக்காக அருள்நெறித் திருக்கூட்டம் மூன்று இலட்சம் ரூபாய் அனுப்பி மதுரைப் பல்கலைக் கழகத்தில் சித்தாந்த வகுப்பு ஒழுங்கு செய்ததும் சமயவளர்ச்சிக்குரிய ஒரு பெரிய அறிகுறியாமே.

நாட்டின் பலவிடங்களில் ஆண்டு தோறும் நாயன்மார்களுடையதும் சமயாசாரியர்களுடையதும் குருபூசைகள் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டு மகேசுர பூசையுடன் முடிவுறுகின்றன. அந்நாட்களில் தேவார திருவாசகப் பாராயணம் செய்வதோடு சிறப்புச் சொற்பொழிவுகளும் செய்யப்படுகின்றன. இதன் விளைவாக இன்று சைவ மக்களிடையேஒரு பரபரப்பும், சமய உணர்ச்சியும், இறைவன் வழிபாடும் மேலோங்கிவருவது கண்கூடாக இருக்கின்றது.சமயச் சொற்பொழிவுகளுக்குத் தென்னகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் பல பிரமுகர்கள் வருகின்றார்கள். புராணங்களையும், இதிகாசங்களையும் கதாகாலட்சேபங்களையும் நடாத்தி, இந்நாட்டின் சைவ மக்களுக்கு இறைபக்தியை வளர்த்து வருகின்றனர். இப் பெரியார்களின் ஆழ்ந்த அறிவும், சமயபக்தியும், தமிழாற்றலும், இசைஞானமும், சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் தெளிவுபட விளக்கும் தன்மையும் மக்களைப் பக்திநெறியில்இட்டுச் செல்லப் பெரிதும் உதவுகின்றன. தென்னகத்திலிருந்து கிருபானந்தவாரியார், சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி அடிகளார், கிரிதாரி பிரசாத் போன்றவர்களும் ஈழத்திலிருந்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லையாதீனம் பரமாச்சார்ய சுவாமிகள் போன்றோர் ஆற்றுந் தொண்டு மகத்தான தொண்டாகும். விசேஷமாகச் சிவத்தமிழ்ச்செல்வி நான்கு தடவைகளில் மலேசியா வந்து ஆற்றிய பணி சைவமக்கள்மறக்கமுடியாததொன்றாகும். அவர்கள் ஒரு மறுமலர்ச்சியை மலேசியாவில் உண்டாக்கிவிட்டார்கள். சமயம் என்ன, தமிழ் என்ன என்று அறியாதிருந்த பலருக்கு ஒரு பெரிய ஆர்வத்தை உண்டு பண்ணியது அவர்களின் கூட்டங்களிலே நிறைந்துவழிந்த சனங்களே அதற்குச் சான்றாகும். இரண்டாம் யுத்தம் முடிந்ததும் சைவப்பெரியார் இராமநாதன் செட்டியார் அவர்கள் மலேசியா நாட்டிற்கு வந்து மறுமலர்ச்சியை உண்டுபண்ணியதற்குச் சமமாகும். சிவத்தமிழ்ச்செல்வியின் இன்றைய மறுமலர்ச்சிக் கருத்துக்களும். அண்மையில் நல்லையாதீன பரமாச்சாரிய சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் சொற்பொழிவுகளும் மக்களின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. இப்பெரியார்கள் பல தடவைகள் விஜயம்செய்து மேலும் சமயப்பணியைத் தொடர்ந்து செய்யவேண்டு மென்பதே மக்களின் பேரவாவாகும்.

மலேசியாவிலே இந்துசமய வளர்ச்சிக்கு மலேசியா இந்துசங்கம் செய்யுந் தொண்டானது போற்றுதற்குரியதாகும். அவர்கள் மூன்று தேசிய மாநாடுகளை நடத்தியுள்ளனர். இம்மாநாடுகளில் மலேசிய நாட்டில் வாழும் இந்துமக்களின் சமய ஒற்றுமைக்கும், சமய வளர்ச்சிக்கும் வேண்டிய பல வழிகளை ஆராய்ந்து செயல்பட ஆவன செய்து வருகின்றனர். இதேபோன்று மலாயா சைவசித்தாந்த சங்கமும் பெரும் சேவை செய்து வருகின்றது. திருமுறை மகாநாடு கோலாலம்பூரில் உள்ள மகா மாரியம்மன் கோயிலால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வருகின்றது. மூன்று நாட்கள் தொடர்ந்து பன்னிரு திருமுறைகள் விளக்கப்பட்டு வருகின்றன. தென்னகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் வரும் சமயப் பெரியார்களின் தலைமையில் இம் மாநாடுகள் நடாத்தப்படுகின்றன.

தீபகற்ப மலேசியாவிலே பல நகரங்களில் இந்துசமயச் சார்புடைய இயக்கங்கள் சமயபாட வகுப்புகளை நடாத்தி வருகின்றன. இதற்கான சமயபாட நூல்களும் அச்சிடப்பட்டுள்ளன. இச்சமய வகுப்புக்களை அருள்நெறித் திருக்கூட்டம், தெய்வீகவாழ்க்கைச் சங்கம், தவநெறி மன்றம் ஆலயங்களின் ஆதரவோடு நன்கு நடாத்திவருகின்றன. மலேசியா இந்து சங்கம் ஆலயங்களின் ஆதரவுடனும் பொது மக்களின் ஆதரவுடனும் பத்து நாட்களுக்கு ஆண்டுதோறும் நூறு ஆசிரியர்களுக்கு இந்துசமய வகுப்புக்களை நடாத்தி வருவது பாராட்டுக்குரியதாகும். அதே போன்று சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கமும் தாங்கள் அமைத்த கலாமண்டபத்திலே கிழமைதோறும் சைவசித்தாந்த வகுப்புகளும், திருமுறைகள் பண்ணோடு சொல்லிக் கொடுப்பதும் சமயவளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கின்றன. கோலாலம்பூரின் மத்தியிலே அமைந்திருக்கும் விவேகானந்த ஆச்சிரமம் மிகப் பழைய ஓர் ஸ்தாபனமாகும். இந்த ஆச்சிரமம் மாணவர் விடுதி ஒன்றையும் மூன்று தமிழ்ப் பள்ளிகளையும் சிறந்த முறையில் நடாத்தி வருகின்றது. யோகாப்பியாச வகுப்புகளும் பிரார்த்தனைக் கூட்டங்களும் சொற்பொழிவுகளும் என்றும் இம் மண்டபத்தில் காணலாம்.

இவ்விதமாக மலேசியாவில் இந்துசமய வளர்ச்சி படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகிறது. மென்மேலும் சமய வளர்ச்சி மேம்பாடடையப் பெரியார்களின் வருகை மிகவும் வரவேற்கத் தக்கதொன்றாகும்.

'மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்'

என். அழகானந்தம், A. M. N.
உபதலைவர்
சிலாங்கூர் இலங்கைச் சைவ சங்கம்
கோலாலம்பூர்

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

— அபிராமியந்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் பிந்துகின்றாய் இனி

செ. கதிரேசர்பிள்ளை

வெற்றியொடு வீரம் விழைந்தார்க் கவையுதவும்
கொற்றவைசேர் கோயில் குலவுபதி—கற்றுணர்ந்த
செல்வத் திருநிறைந்து செம்மைநெறி போற்றுநர்வாழ்
தெல்லிப் பழையெனவே தேர். 1

தேர்ந்து திருக்கோயில் சென்றுதுர்க்கை அன்னைபதம்
சார்ந்து துதிபலவுஞ் சாற்றுதியேல்—கூர்ந்த
மதிபெறலாம் வாழ்வு வளம்பெறலாம் நல்ல
கதிபெறலாம் ஈதுறுதி காண். 2

காணுந் திருப்பொலிவும் கண்ணிணையின் நல்லருளும்
பூணும் பெருமாட்டி பொற்பாதம்—பேணினால்
அஞ்ச வரும்வினையும் அல்லற் பிறவிகளும்
எஞ்சா நிலையெய்து மே. 3

எய்தும் துயர்தீர்ப்பாள் ஏக்கம் தவிர்த்திடுவாள்
வையத் துயர்வு வகுத்தளிப்பாள்—தெய்வமெனப்
போற்றுதுர்க்கை யன்னைதிருப் புன்முறுவல் ஒன்றேநின்
ஏற்றந் தருமென் றிசை. 4

இசையுணரா யேனும் இனிமைதரு செய்யுள்
அசையுணரா யேனும் அணுகி—நசைமிகுந்த
சொல்புனைந்து பாடித் துதிப்பையேல் நின்கவலை
இல்லையில்லை யில்லை யினி. 5

இனிமைமிகு காட்சி இயைந்திருக்கும் சூழல்
தனியெழிலாய் வீற்றிருக்குந் தையல்—புனிதமிகு
பாதமலர் தஞ்சமாய்ப் பற்றுதியேல் நீயென்றும்
தீதணுகா வாழ்வுறுவாய் செல். 6

செல்லும் புலன்வழியே சென்றுசென்று நீநிதமும்
அல்லற் படுகுழியில் ஆழ்கின்றாய்—சொல்லிவிட்டேன்
நன்னெஞ்சே நின்றன் நலிவகற்ற வேண்டுதியேல்
அன்னையிடம் சென்றே அழு. 7

அழுதே அவள்கோயில் அற்புதநல் வாயில்
தொழுதேத்தும் தொண்டருடன் சூழ்ந்து—வழுவாத
பத்தியுடன் நின்றவளைப் பாடுவையேல் நின்கவலை
அத்தனையும் போமென் றறி. 8

அறிவின் தெரிவாய் அருளுருவாய் அன்பர்
குறியின் குறியாய்க் குலவிச்—செறியவரும்
தீவினைகள் தீர்க்கவரும் தெய்வமாம் துர்க்கைபதம்
மேவினையேல் எய்துமே வீடு. 9

வீடருளுந் தேவி வினைதீர்ந் துலகுய்ய
நாடுபுகழ்த் தேர்ப்பவனி நாடினாள்—தேடிவந்து
தேன்மழையாய்ச் சிந்தும் திருவருளி லேபடிவாய்
ஏன்பிந்து கின்றாய் இனி. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/தெல்லிப்பழை (உழுகொடைப்பதி)

# ஸ்ரீ துர்க்கையம்பாள் திருப் பொன்னூஞ்சல்

### காப்பு

ஒருகொம்பைக் கொண்டுதமிழ் வெற்பி லேற்றி
ஓரிரண்டு செவியசைத்து மும்ம தங்கள்
தருநான்கு வேதத்தி னுச்சி காட்டித்
தனிப்புலனைக் கடாவுறுமைங் கரமி லங்க
மருவுகுட வுதரவரா நாண் துலங்க
வருகளிறே, தெல்லிநகர் உழுகொ டைப்பேர்
பெருகுபுகழ்த் துர்க்கைமகிழ் ஊஞ்சல் பாட
பிரணவமாம் கணபதிநின் திருத்தாள் காப்பே.

### நூல்

அகரமென மன்னுயிர்க்கோர் அன்னை யாகி
அருவமுரு வருவுருவ வழகு தாங்கி
வகரமெனச் சிகரபத வழிப்ப டுத்தும்
வல்லபையாய் மலர்ந்திடுமைம் பூத மாகி
பகருமெழு பவமுழலும் சராச ரங்கள்
படைத்தளிக்கும் பார்ப்பதியே, கைலை வாசன்
அகமகிழும் தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே யாட ரூஞ்சல்.

ஆனசது ராரணங்கள் தூண்க ளாக
ஆகமபு ராணமெலாம் நாண்க ளாக
தேனலரெண் ணெண்கலைகள் விட்ட மாக
திருமுறைகள் அமைந்தபரி வட்ட மாக
ஞானசிவ தத்துவங்கள் மாட மாக
நண்ணுபிர ணவகமலம் பீட மாக
ஆனிரைசூழ் தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆட ரூஞ்சல்.

இருபுறமும் ஜயைவிஜயை கவரி வீச
இசைபயினுன் முகன்முனிவர் சுருதி பேச
திருமகளும் கலைமகளும் களபம் பூச்
சீவசுரும் பினரருட்டேன் பருகி மூச
வருவினைக ளறுத்தின்பம் வழங்கும் பாச
மழுகுலிசம் கலசமிவை வயங்கத் தேச
அருணனெனத் தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே யாட ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடதிக திருத்தொண்டர் ஏவல் செய்ய
எண்ணதிக வானவர்பூ மாரி பெய்ய
கோடுடைய திருநந்தி தூபம் காட்டக்
குணவிடையோன் சந்தனசெந் திலகம் தீட்ட
ஏடதிக மலர்நாபன் வாழ்த்துப் பாட
எழுசக்தி கோடியெலாம் மாலை போட
ஆடலுறு தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே யாடீ ரூஞ்சல்.

உருள்புவன வண்டமெலாம் ஓயா தோயும்
உயிர்காக்கும் பூரணியாய் உணர்வ ளித்து
மருள்வலையை மாற்றிஒளி மலையி லேற்றி
வானுடர் காணுத மாட்சி காட்டித்
தெருள்பரவும் சிவானந்தத் தீம்ப ழத்தைத்
சித்தத்துள் வைத்துண்ணும் செல்வம் நல்கும்
அருள்படைத்த தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

ஊன்றுபதம் பதியென்றும் ஒறுத்த காலற்
குதைத்தபதம் நினதென்றும் உணர்ந்தோர் நெஞ்சில்
தோன்றுசுடர் விளக்காகச் சிறக்கும் ஞான
சுந்தரியே கந்தனுடன் கணேசன் தன்னை
ஈன்றபுவ னேஸ்வரியே இருதா ளேந்தி
இரந்துவரு மடியவர்க்கா யினிதி ருக்கும்
ஆன்றசிவத் தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

என்புருகப் பாடுவார் கருத்திற் சூழ்வாய்
இருந்திதயம் பூணுவார் சிரத்தில் வாழ்வாய்
நின்பணியைச் செய்யுமவர் நினைவாய் நிற்பாய்
நீண்டதவத் தார்க்கருள்வாய் மேரு வெற்பாய்
ஒன்பதுகோட் டுயராற பவநோ யாற
உலகத்து வாழ்வோங்கி உள்ளம் தேற
அன்புவந்து தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே யாடீ ரூஞ்சல்.

ஏரமரும் சிவன்பாகத் திறைவி தோட்டை
எறிந்துமதி காட்டுமபி ராமி கம்பை
நீரருகிற் றவப்பூசை செயுங்கா மாட்சி
நெடுமதுரை யரசாண்ட தமிழ்மீ னாட்சி
வாரமுதப் பால்கொடுத்த தோணி யம்மை
மகிஷசங் காரியெனக் கோடி நாமத்(து)
ஆரணியே தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயறிவு மொன்றுக்கும் கண்க ளாட
அஞ்சேலென் றருள்காட்டும் கரங்க ளாட
வையமெலாம் படியளக்கும் கலச மாட
மந்திரதந் திரங்கனியும் மலர்வா யாட
பையரவு தாலாட்டும் திருத்தா ளாட
பலகலையாம் கதிர்பரப்பும் சடைக ளாட
ஐயனுடன் தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

ஒத்தவிரு ஞானதன மலைக ளாட
ஒளிருமுக மதியாடத் திருத்தோ டாட
நித்தமங் கலநாணும் தாரு மாட
நிலாபடிந்த பவளமலை மேனி யாட
முத்தநகை யாடமூ விலைவே லாட
முதுபஞ்ச வண்ணமணி யாடை யாட
அத்தமுயர் தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே யாடீ ரூஞ்சல்.

ஓதுகலை வடிவத்தாய் ஆடீ ரூஞ்சல்
உயர்நெறிநாற் படிவைத்தாய் ஆடீ ரூஞ்சல்
நாதகலை விந்தானாய் ஆடீ ரூஞ்சல்
நமசிவயச் செந்தேனாய் ஆடீ ரூஞ்சல்
போதமுயர் கதியருள்வாய் ஆடீ ரூஞ்சல்
புண்ணியநுண் மதிதருவாய் ஆடீ ரூஞ்சல்
ஆதரவுத் தெல்லியுழு கொடையின் மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே யாடீ ரூஞ்சல்.

### வாழி

ஔவைசொல் லறங்கள் வாழி
ஆவினம் வேதம் வாழி
ஔடத நீறு வாழி
அணிதெல்லி நகரம் மேவும்
கௌரியாம் துர்க்கை யம்மை
கழலிணை வாழி அன்னாள்
சௌமிய வடியார் தொண்டர்
சகமெலாம் வாழி வாழி.

— அருட்கவி சீ. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாரகி சூலினி மாதங்கியென்று
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.


ஆதரவு பெருகுதல் அறப்பணிக்கே உதவும்.

மில்க்வைற்

சவர்க்காரத் தொழிலகம்

கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கையின் அருளால்

புதுமையும் பொலிவும் நிரம்பட்டும்
வாழ்வும் வளமும் பெருகட்டும்
அன்பும் அறனும் ஓங்கட்டும்
அருளும் பொருளும் சிறக்கட்டும்.

"கல்கி"

சின்னத்துரை அன்ட் பிறதர்ஸ்

39, காங்கேசன்துறை வீதி :: யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றிமற் றுங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டினோர்க்குஅருள் செய்யும் துர்க்கை.

# இலட்சுமிநாதன்ஸ்

பிரபல வர்த்தகர்

## தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கை அம்பாள் சித்திரத்தேரில்
பவனி வரும் நன்னாள்

எம் வாழ்நாளில் பொன்னாள்
நம் நாட்டவர் மகிழும் திருநாள்
அடியார்கள் அகம் மலரும் பெருநாள்"

இ. சின்னத்துரை
பிரபல வர்த்தகர்
மயிலிட்டி தெற்கு தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையுந் தொழுந் தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.


பாலகிருஷ்ணு வர்த்தக நிலையம்

228, 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் துர்க்கா சரணம்

ஓம் பகவதீ சரணம்

ஓம் நாராயணீ சரணம்

ஓம் மகாலட்சுமீ சரணம்

★

ஈஸ்வரி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

காங்கேசன்துறை வீதி,

சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் எழிலில் அகிலமும்
மகிழ்கிறது
அவளுடைய அருளில் அன்பர்கண்
மலர்கிறது!

# எலெக்ற்றிக் ஸேன்

120, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்காதேவி வண்ணப் போற்றேரிலே
பவனி வரும் நன்னளில்
எமது வாழ்த்துக்களை அனைவருக்கும்
வழங்குகின்றேம்.

இந்திர பவான் குளிர்பான சாலை

காங்கேசன்துறை வீதி : : சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தெல்லிப்பழை துர்க்காதேவி
திருவடிகளே சரணம்
திருத்தொண்டைப் போற்றிவாழும்
திருவுடையோரே சரணம்

உற்பத்தி உபகரணத் தொழிலகம்
"வெள்ளியம்பதி",
அளவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம்பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில்வைத்து
தன்னந்தனி இருப்பார்க்கு இதுபோலுங் தவமில்லையே."

# ஏ. கே. எஸ். நகை மாளிகை

68, கன்னாதிட்டி :: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் அருள் அகிலத்துக்கும் கிடைப்பதாகுக

அவள் அருள் மழை ஞானிலத்தை நனைப்பதாகுக
அன்னை அடியார் இன்புற்று வாழ்வதாகுக
அவள் திருவடியில் நாமென்றும் திளைப்பதாகுக.

# A. V. தேவராசா ஸ்ரோர்

கொச்சிக்கடை : : நீர்கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கையைப் போற்றித்
தொல்வினை தீர்ப்போம்
பவானியைப் போற்றிப்
பவவினை மாய்ப்போம்.

V. T. V. தெய்வநாயகம்பிள்ளை அன் கோ.
37, 5ஆம் குறுக்குத்தெரு :: கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே''.

★

மேர்கன்டைல் கோப்பரேசன் லிமிட்டட்.

263, செட்டியார் தெரு, கொழும்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்தி மார்க்கம் நாட்டில் பெருக
துர்க்கை அம்பாளைப் போற்றுகின்றோம்

●

**ஸ்ரீ பழைய கதிரேசன் கோவில்**

**239, செட்டியார் தெரு, கொழும்பு-11**

"எங்கெங்கு காணினும் சக்தியடா
ஏழுகடல் அவள் வண்ணமடா"

●

**சேகர்ஸ் நகை மாளிகை**

**44, செட்டியார் தெரு, கொழும்பு-11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் தேர் நாளில்
மனமுவந்த வாழ்த்தை வழங்குகின்றோம்.

கிருஷ்ணா கோப்பரேசன்
கிரண்ட்பாஸ், கொழும்பு-14

துர்க்கை அம்பாள் திருவருளால்
அமைதியும் மங்கலமும் நிலவட்டும்

புதிய கதிரேசன் மண்டபம்
339, காலி ரேட், கொழும்பு-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை துர்க்கை அன்னேயின்
திருவருளேப் போற்றி நிற்கிறேம்

**நித்தியகல்யாணி நகை மாளிகை**
40, செட்டியார் தெரு, கொழும்பு-11

சித்திரத்தேர் வெள்ளோட்ட நாளில் துர்க்கையின்
திருவருளே எண்ணி உளம் பூரிக்கின்றேம்!

**கிறீன்லன்ட்ஸ் சைவ போசனசாலே**
பம்பலப்பிட்டி கொழும்பு-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு துர்க்காதேவி துணைவேண்டிப் போற்றி
அன்னை அடியார்தம்மை இந்நாளில் வாழ்த்துகிறோம்

கணேசன் ஸ்ரோர்ஸ்
63, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்

தேவியை எங்கும் தேடியலைந்தீர்
தேரிலே பவனி வருவது பாரீர்!

மோட்டார் மெக்கானிக்கல் ஸ்டோர்
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்னை துர்க்கையின் எழிலில் ஆனந்தம் அடைவோம்'

●

குணசேகரா சன்ஸ் அன் கோ.

115, 5ஆம் குறுக்குத் தெரு

கொழும்பு—11

துர்க்காதேவி திருக்கடைக் கண்கள்

நல்லன எல்லாந் தரும்

★

சத்தியா ரவல்லேஸ்

224 A, கே. கே. எஸ். வீதி :: யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சித்திரத் தேர்த் திருப்பணி

அழகும் அருளும் பொலியத் துர்க்கை அம்பாளுக்கு அமைக்கப்பட்ட சித்திரத் தேர், தேர்முட்டி ஆகியவை நிறைவுபெற்றதை யொட்டி அம்பாள் பக்தர்கள் பலருக்கு நன்றிகூறும் கடமை திருப்பணிக் குழுவினருக்கு உண்டு. ஏறக்குறைய மூன்று இலட்சம் ரூபா பணத்தை அன்பளிப்புச் செய்த அடியார்கள் அனைவரும் எமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். தேர் அமைப்புக்கு வேண்டிய விலையுயர்ந்த மரங்களை யும் தேர்முட்டிக்கு வேண்டிய பனைமரங்களையும் இலவசமாகத் தந்துதவிய தேவி பக்தர்களுக்கு எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தேரில் அமையவேண்டிய மணிகள் கலசங்கள் என்பவற்றைப் பணம் கொடுத்துப் பெற்றுத் தமது உபயமாக உதவிய அடியார்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. முடிக் கலசத்தைத் தமது குடும்ப உபயமாக உதவிய யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தாருக்கும், தேரை இழுப்பதற்கு ஏற்ற வடத்தைப் பிலிப்பைன்ஸ் தீவிலிருந்து பெறுவதற்குப் பண உதவி புரிந்து வடத்தைத் தன் உபயமாகப் பெற்றுத் தந்த காங்கேசன்துறை முன்னை நாள் பட்டினசபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் அவர்களுக்கும், தேருக்குரிய வர்ணப் பூச்சு மை வகைகளைச் சிங்கப்பூரிலிருந்து பெறுவதற்குப் பணஉதவி புரிந்த ஆலய தர்மகர்த்தா திரு. க. ஜனநாயகம் அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி யறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இத் திருப்பணி சிறப்புற வெளிநாட்டிலிருந்து வேண்டிய பொருள்களை அரசின் ஆதரவுபெற்றுத் தருவிக்கவும் கொழும்புவாழ் வர்த்தகப் பெருமக்களிடம் ஆதரவு திரட்டவும் பேருதவிபுரிந்த சுங்கப்பகுதி அதிகாரி திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்களுக்கும் எமது உளங்கனித்த நன்றி உரித்தாகுக.

கடந்த இரண்டு வருடங்களாக இத் திருப்பணியை முன்னிட்டு மரம் பெறுவதற் கும் வேறு பல ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் போக்குவரத்து வசதியைத் தமது வாகனத்தின்மூலம் ஏற்படுத்தி, தானே முன்னின்று வாகனத்தை ஓட்டி, காடும் மேடும், கல்லும் முள்ளும் என்று நோக்காது எரிபொருளையும் தனது பணத்திலேயே செலவு செய்து இத் திருப்பணிக்கு மிகமிக உறுதுணையாக இருந்த திரு. க. கணேசரட்ணம் (நிர்வாகசபை உபதனுதிகாரி) அவர்களுக்கும் என்றென்றும் அம்பாள் கருணையும் எமது நன்றியும் உரித்துடையவை ஆகுக.

தேரோடும் வீதிக்கு அமைய — தேர்முட்டி அமைப்புக்கு அமைய கோயில் வீதியை விசாலமாக்கவேண்டிய நிலை ஏற்பட்டதால் கிழக்கே அமைந்த தமது நிலத்தில் 2 பரப்புக் காணியை ஆலயத்திற்கு உபகரித்த திருமதி கோ. வன்னியசிங்கம், திரு. கு. பாலசிங்கம் ஆகியோருக்கும், மேற்குக் காணியில் 10' அகலமான நிலப்பரப்பை உபகரித்த திரு. க. கணேசரத்தினம் அவர்களுக்கும், திரு. பொ. நாகரத்தினம் அவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கும், வடக்கே அமைந்த நிலத்தில் 5' விசாலமான நிலப்பரப்பைத் தந்துதவிய திரு. வே. செல்வரட்ணம் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆகம அமைப்புக்கும் அளவுப் பிரமாணத்துக்கும் ஏற்றபடி தேர்முட்டி அமைவதற்கு இடம் வகுத்த ஸ்தபதியார் பெரியசாமி அவர்களுக்கும், திரு. சோமநாதர் அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

வேண்டிய வேண்டிய நேரத்தில் சிரமதானப் பணி புரிந்து இத்திருப்பணி நிறைவு பெற உதவிய தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினருக்கும் எமது நன்றி உரித்தாகுக. தேர் அச்சுக்கு வேண்டிய இரும்புக் குழாய்களை அமைத்துக்கொடுத்த காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையினருக்கும் அதனைத் தமது உபயமாகப் பெற்றுத் தந்த பொறியியலாளர் திரு. வை. சிவானந்தன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். சிறப்பாக இத் திருப்பணியில் ஏறக்குறைய ஐம்பதாயிரம் ரூபாயைத் தமது பங்காக மனமுவந்து துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிடம் கொடுத்துதவிய மலேசியா சிங்கப்பூர் சைவ அன்பர்களுக்கு எமதுளம் கனிந்த நன்றி என்றும் உரித்தாகுக.

தேர்த் திருப்பணியைக் குறுகிய காலத்தில் சிறப்பாக நிறைவேற்றித்தந்த ஸ்தபதியார் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களுக்கும், குரும்பசிட்டி கலாலயச் சிற்பச் செல்வர்களுக்கும் எல்லாம் வல்ல தேவியின் திருவருட்கடாட்சம் கிடைக்க வேண்டுமென்று வாழ்த்தி எமது நன்றியையும் கூறி அமைகின்றோம்.

குறிப்பு:— பொருளுதவி புரிந்தோரின் பெயர்களும் அன்பளிப்பு விபரங்களும் இத் திருப்பணி வரவுசெலவு அறிக்கையும் பின்னர் வெளியிடப்படும் என்பதையும் அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்,

**தேர்த் திருப்பணிக் குழுவினர்**

185981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நன்றியுரை

அருள்மிகு துர்க்காதேவி ஆலயத்தில் மகத்தான சித்திரத்தேர்த் திருப்பணியை முன்னிட்டு சிறப்புமலர் வெளியிடுவது குறித்து அம்பாள் அடியார்களுக்கு மனமுவந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம். சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் இத் திருப்பணியினால் ஏற்பட்டது என்று கூறினால் அதில் மிகை ஒன்றுமில்லை. எல்லாம் வல்ல துர்க்கை அம்பாள் திருவருளிலே தோய்ந்த அன்பர்கள் பலர் இங்கு எமது நன்றிக்கு உரித்துடையவர்கள் ஆகின்றார்கள்.

இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துரைகள் வழங்கிய மாண்புமிகு பெரியோர்களுக்கும், கவிதைகள் வழங்கிய பெரும் புலவர்களுக்கும், கட்டுரைகள் வழங்கிய பேரறிஞர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய தொழில் ஸ்தாபனங்களுக்கும் எமது மனமுவந்த நன்றி உரித்தாகுக. வேண்டிய புகைப்படங்களை எடுத்து அதற்குரிய புளொக் செய்து மலருக்கு இடம்பெறக்கூடிய அமைப்பில் தந்துதவிய யாழ்ப்பாணம் ஞானம் ஸ்ரூடியோவினருக்கும், கொழும்பு அரசன் அச்சகத்தினருக்கும் என்றும் நன்றியுடையோம்.

இம் மலரை அழகு பொலிய அச்சிட்டு உதவிய சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இம் மலர் வெளியீட்டு விழாவிலே முதற் பிரதியையும் கௌரவ பிரதிகளையும் பெற்று நல்லாதரவு நல்கும் பெருமக்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. மேலும் மலர் பூரணமும் பொலிவும் பெற வெளிவருவதற்குத் துணைபுரிந்த எல்லாம் வல்ல துர்க்காதேவிக்கு எமது வணக்கத்தைச் செலுத்தி அமைகிறோம்.

மலர்க்குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
185981
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சு : திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org